
உ

ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்

# கும்பாபிஷேக மலர்



வெளியீடு:

[illegible] த்திவிநாயகர் ஆலய பரிபாலன சபை

1981

உ

நீர்கொழும்பு

ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயம்

# கும்பாபிஷேக மலர்

695

துர்மதி ஆண்டு ஆனித் திங்கள் 29-ம் நாள்

[13–7–81]

நீர்கொழும்பு

ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபை

நூற்றாண்டு நிறைவு நினைவு வெளியீடு

[1880 - 1981]

294.5
மயில்

உ

## கும்பாபிஷேக மலர்க்குழு :

கௌரவ ஆசிரியர் :

வட்டுக்கோட்டையூர்

பண்டிதர் க. மயில்வாகனனுர்

[முன்னைநாள் அதிபர் நீர்கொழும்பு விஜயரத்தின மகாவித்தியாலயம்]

உறுப்பினர் :

திரு. க. ச. சோமசுந்தரம் அவர்கள்

திரு. மூ. அருணுசலம்பிள்ளை அவர்கள்

திரு. அ. கணபதிப்பிள்ளை அவர்கள்

திரு. இரா. சுப்பையா அவர்கள்

வைத்திய கலாநிதி திரு. சோ. பாலசுப்பிரமணியம் அவர்கள்

திரு. ச. கந்தசாமி அவர்கள்

அச்சுப் பதிவு :

ஸ்ரீகாந்தா அச்சகம்

213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 256.



களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும் — அளியானைக்
கண்ணுவதுங் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்றுள்
நண்ணுவதும் நல்லார் கடன்.

— கபிலதேவ நாயனர்

NAVALAM LIBRARY ★ JAFFNA ★



நீர்கொழும்பு
ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில்
ஆனந்தக் கூத்தருடன்
அன்னை சிவகாமி.

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

ஸ்ரீ சங்கர பகவத் பாதாச்சார்ய பரம்பரகத

மாண்புயர்

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி

## ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள்

# அருளிய ஸ்ரீமுகம்

எல்லாவித இடையூறுகளையும் அகற்றுபவர் விநாயகர். எல்லா மங்களங்களையும் அளிப்பவர் விநாயகர். அறிவுக் களஞ்சியமான மகாபாரதத்தை எழுதியவர் விநாயகர். குழந்தை முதல் பெரியோர் வரை அனைவரும் அன்புடன் வணங்கும் தெய்வம் விநாயகர். ஓம்கார வடிவமாக உள்ளவர் விநாயகர். இவ்வளவு மகிமையும் வாய்ந்தவர் விநாயகப் பெருமான்.

நீர்கொழும்பு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதைக் கேட்டு, மிகுந்து சந்தோஷிக்கிறோம்.

எல்லா அன்பர்களும் இந்தக்கைங்கர்யத்தில் ஈடுபட்டு எல்லா மங்களங்களையும் அடையும்படியாய் ஆசீர்வதிக்கின்றோம்.

நாராயணஸ்மிருதி

ஸ்ரீமடம் சமஸ்தானம்,
காஞ்சீபுரம்,
முகாம்: குட்டிபுரம்.

ஓம்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

## முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்

# ஆசியுரை

பண்டைக் காலந்தொட்டே ஈழ நன்னாடு ஆன்மிகத்தில் தோய்வும் அருந்தமிழ் இலக்கிய ஆய்வும் உடையதாய் தெய்வீக மொழிப் பணிகளைச் சீரியமுறையில் ஆற்றி வருகின்றது. இவ் வரிசையில் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் அரியதொரு திருவருட் பணியாகும்.

குடமுழுக்கு விழா சிறப்புற நிகழவும், கலைக்கருவூலங்களைத் தன்னகத்துக கொண்ட மணமிகு பொன்மலராய் விழாமலர் அமையவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

சுபம்.

சிவ சிவ

திருப்பனந்தாள்
தஞ்சை ஜில்லா

ஓம்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

# ஆசியுரை

கும்பாபிஷேகம் காண்பது அரிதானதொன்று. அதன் கிரியைகளை யும், தத்துவங்களையும் கூறப்புகின் விரியும். எந்தக் கிரியைகளிலோ, சடங்குகளிலோ விழாக்களிலோ முதற்கண், நாம் விநாயகப் பெரு மானையே பூஜித்து அவற்றைத் தொடங்குகிறோம். ஆகவே அப்பெரு மானின் ஆலய கும்பாபிஷேக மகிமையை நாம் வர்ணிக்கவேண்டிய அவசியமில்லை.

பெருமானைக் கும்பம், தம்பம், பிம்பம் ஆகியவற்றிலே ஆவாகனஞ் செய்து பூசனை புரியும்போது அவர் அவற்றின்மூலம் வேண்டுவார் வேண்டுவனவற்றையெல்லாம் தந்து அருண்மழை பொழிகின்றார். ஒருருவம் ஒரு நாமமற்ற பரம்பொருளை உருவத்திருமேனியுள் இலங்கச் செய்து அதற்காக முறைப்படி அமைக்கப்பெற்ற ஆலயங்களிலே பிர திஷ்டை செய்கின்றோம். இதுவே கும்பாபிஷேகம் எனப்படுவது. இது பன்னிரண்டாண்டுக்கொருமுறை நிகழும்.

இப்பெருங் கைங்கரியத்தைச் செய்வோரும், செய்விப்போரும், செய்வதற்குக் காரணமாக இருந்த பத்தர்கள் அனைவரும் எல்லா நலன் களையும் பெற்றுய்வர் என்பது ஆகமமுடிபு.

இதனையொட்டி நீர்கொழும்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பரிபா லன சபையினர் ஒரு மலர் வெளியிடுவதை அறிந்து பெருமிதம் அடை கின்றோம். நல்லைக் குருமணியினதும் விநாயகப்பெருமானினதும் திரு வடித் தாமரைகளை மனமாரப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

நல்லூர்.

நீர்கொழும்பு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கதிர்வேலாயுத சுவாமி கோவில், தருமகர்த்தர்

## திரு. எஸ். பத்மநாபன் செட்டியார் அவர்களின்

# ஆசியுரை

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''. வினை தீர்க்கும் வித்தகனும் நீர்கொழும்பு ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின் மகா கும்பாபிஷேகம் சிறப்புற நிகழவும், நீர்கொழும்பில் வாழும் இந்துக்களும் ஏனையபகுதிகளில் வாழும் இந்துக்களும் சுபீட்சமான வாழ்வினைஎய்தவும் எல்லாம் வல்ல ஸ்ரீ சித்தி விநாயகன் இணையடிகளை ஏத்துகின்றேன்.

''கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது முதுமொழி. நீர்கொழும்பிலே கோவில் அமைத்துதவிய பெரியோர் வணக்கத்திற்குரியவர் ஆவர். இந்நாளில் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தைப் புதுப்பித்துத் திருப்பணிசெய்த ஆலய பரிபாலன சபையினரும் திருப்பணிச் சபையினரும், மற்றும் மனமுவந்து பொருளுதவி புரிந்த அன்பர்களும், அயராது உழைத்த அடியார்களும் சைவ உலகின் பாராட்டிற்கும் நன்றிக்கும் உரியவர்களாம்.

விழா மலர் இனிது மலர்ந்து சிவமணங் கமழவும், திருப்பணிகள் மேலும் தொடரவும், சைவத் திருநெறி நாடெலாம் பரவி நலன் விளைக்கவும் ஐங்கரன் அடிபரவி ஆசிர்வதிக்கின்றேன்.

சுபம்,

104, கடற்கரை வீதி,
நீர்கொழும்பு.

நீர்கொழும்பு, ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தானம்

## பரிபாலன சபையினர்

# ஆசியுரை

இலங்கையின் மேற்குப் பகுதியில் விளங்கும் நீர்கொழும்புப் பட்டினம், வரலாற்றுப் பெருமைவாய்ந்தது. இப்பட்டினத்தில் மூன்று திருக்கோவில்கள் நிலைபெற்று நின்று அருட்பணி இயற்றிவருகின்றன. அவற்றுள் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் நடுநாயகமாய் அமைந்துள்ளது.

ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தை அண்மையில் புதுக்கி அமைத்து மகா கும்பாபிஷேகமும் நடத்தியுள்ளார்கள். அன்றியும், சிவநெறிச் செம்மைபேணுங் கருத்தோவியங்களைக்கொண்ட நறுமலர் ஒன்றையும் வெளியிடுகின்றார்கள். இவையெல்லாஞ் சைவ உலகினுக்குப் பெருஞ் சிறப்பினை அளிப்பனவாகும்.

இத்தகு சிவபுண்ணியத்தை இயற்றிய ஆலய பரிபாலன சபையாருக்கும், பல இலட்சக்கணக்கான பணத்தை அள்ளி உதவிய அன்பர்களுக்கும் மற்றும் பல வழிகளில் ஆதரவு நல்கியவர்களுக்கும் எமது பாராட்டுக்கள் உரியனவாகும்.

ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் இவர்களுக்கெல்லாம் மீண்டும் மீண்டும் திருவினைத்தந்து செய்கருமங் கைகூட்டி, செஞ்சொற் பெருவாக்கும் பீடும் பெருக்கி உருவினை —ஒளியொடுகூடிய தேகத்தினை— உதவி அருள்புரிய வேண்டும் என்று வேண்டுகின்றோம்.

கும்பாபிஷேக மலரானது எங்கணும் நறுமணம் வீசி மாண்பயன் உதவவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

சுபம்.

தேவஸ்தானப் பணிமனை,
கடற்கரை வீதி,
நீர்கொழும்பு.

நீர்கொழும்பு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவர்

## திரு. ச. க. ஐயம் விஜயரத்தினம் அவர்கள் ஜே. பி.

# ஆசியுரை

நாம் நீர்கொழும்பு நகரில் வாழ்ந்து வருகின்றோம். எம்மைச் ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' காத்து வருகின்றார். அவர் திருவருள் இத்தகையது என்று கூறும் அளவினது அல்ல.

சித்திவிநாயகர் திருக்கோவிலைப் புதுக்கிப் பெருப்பித்து, மகா கும்பாபிஷேகம் பண்ணி அப்பனின் அருள்பெருகு திருக்கோலத்தைக் கண்டு களிக்க எண்ணினோம். கையிலே பணம் இருக்கவில்லை. அவன் திருவருளே பணம் என்று எண்ணி இறங்கினோம். விகடசக்கரன் கைவிடவில்லை. சிறுதுளி பெருவெள்ளமாய் திரண்டது.

ஆலயத்தின் அயலே உள்ள காணிகள் கோவிலுக்கு உடைமையாயின. கட்டடங்கள் எழுந்தன. கலையெழில் மலர்ந்தது. மகா கும்பாபிஷேகமும் நிறைவுற்றது. மண்டலாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்கின்றோம். 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பது அனுபவ மொழியன்றோ!

கும்பாபிஷேக மலரும் மலர்கின்றது. அது சைவ உலகெங்கணும் சிவமணங் கமழ்ந்து பரவி நற்பயன் விளைக்கக் கணேசர் திருவடி தொழுது வாழ்த்துகின்றேன்.

விநாயகன் திருப்பணிகளுக்கு அயர்வின்றி உழைத்த பரிபாலன சபை உறுப்பினர்களுக்கும், திருப்பணிச் சபை அங்கத்தவர்களுக்கும், பொதுமக்களுக்கும், கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடத்தி உதவிய தலைமைக் குருமூர்த்திக்கும், அவர் குழுவினருக்கும், கோவிலை நிருமாணிக்க உதவிய ஸ்தபதியாருக்கும் அவர் குழுவினருக்கும், கும்பாபிஷேக மலரை வெளியிட உதவிய ஆசிரியருக்கும் பல்வகைகளிலும் உதவிய அன்பர்களுக்கும் எல்லா நலன்களும் பெருக விநாயகனை வணங்குகிறேன்.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

வணக்கம்.

ஓம்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

# ஆசியுரை

கும்பாபிஷேகம் காண்பது அரிதானதொன்று. அதன் கிரியைகளையும், தத்துவங்களையும் கூறப்புகின் விரியும். எந்தக் கிரியைகளிலோ, சடங்குகளிலோ விழாக்களிலோ முதற்கண், நாம் விநாயகப் பெருமானையே பூஜித்து அவற்றைத் தொடங்குகிறோம். ஆகவே அப்பெருமானின் ஆலய கும்பாபிஷேக மகிமையை நாம் வர்ணிக்கவேண்டிய அவசியமில்லை.

பெருமானைக் கும்பம், தம்பம், பிம்பம் ஆகியவற்றிலே ஆவாகனஞ் செய்து பூசனை புரியும்போது அவர் அவற்றின்மூலம் வேண்டுவார் வேண்டுவனவற்றையெல்லாம் தந்து அருண்மழை பொழிகின்றார். ஒருருவம் ஒரு நாமமற்ற பரம்பொருளை உருவத்திருமேனியுள் இலங்கச் செய்து அதற்காக முறைப்படி அமைக்கப்பெற்ற ஆலயங்களிலே பிரதிஷ்டை செய்கின்றோம். இதுவே கும்பாபிஷேகம் எனப்படுவது. இது பன்னிரண்டாண்டுக்கொருமுறை நிகழும்.

இப்பெருங் கைங்கரியத்தைச் செய்வோரும், செய்விப்போரும், செய்வதற்குக் காரணமாக இருந்த பத்தர்கள் அனைவரும் எல்லா நலன்களையும் பெற்றுய்வர் என்பது ஆகமமுடிபு.

இதனையொட்டி நீர்கொழும்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையினர் ஒரு மலர் வெளியிடுவதை அறிந்து பெருமிதம் அடைகின்றோம். நல்லைக் குருமணியினதும் விநாயகப்பெருமானினதும் திருவடித் தாமரைகளை மனமாரப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

நல்லூர்.

நீர்கொழும்பு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கதிர்வேலாயுத சுவாமி
கோவில், தருமகர்த்தர்

## திரு. எஸ். பத்மநாபன் செட்டியார் அவர்களின்

# ஆசியுரை

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''. வினை தீர்க்கும் வித்தகனும் நீர்கொழும்பு ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின் மகா கும்பாபிஷேகம் சிறப்புற நிகழவும், நீர்கொழும்பில் வாழும் இந்துக்களும் ஏனையபகுதிகளில் வாழும் இந்துக்களும் சுபீட்சமான வாழ்வினையெய்தவும் எல்லாம் வல்ல ஸ்ரீ சித்தி விநாயகன் இணையடிகளை ஏத்துகின்றேன்.

''கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது முதுமொழி. நீர்கொழும்பிலே கோவில் அமைத்துதவிய பெரியோர் வணக்கத்திற்குரியவர் ஆவர், இந்நாளில் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தைப் புதுப்பித்துத் திருப்பணிசெய்த ஆலய பரிபாலன சபையினரும் திருப்பணிச் சபையினரும், மற்றும் மனமுவந்து பொருளுதவி புரிந்த அன்பர்களும், அயராது உழைத்த அடியார்களும் சைவ உலகின் பாராட்டிற்கும் நன்றிக்கும் உரியவர்களாம்.

விழா மலர் இனிது மலர்ந்து சிவமணங் கமழவும், திருப்பணிகள் மேலும் தொடரவும், சைவத் திருநெறி நாடெலாம் பரவி நலன் விளைக்கவும் ஐங்கரன் அடிபரவி ஆசீர்வதிக்கின்றேன்.

சுபம்,

104, கடற்கரை வீதி,
நீர்கொழும்பு.



அழகு முருகன் அன்னையர்
இருவருடன் அமர்ந்து
அருள் சொரியுந் திருக்கோலம்.



கடல் கடந்து மீண்ட கார்முகில் வண்ணனைக்
காண்கின்றோம் வலப்புறத்தில்

அன்று......

செந்நாப் புலவன் பின் பைநாகப் பாய்சுருட்டிச்
சென்று மீண்டான் கச்சியமர்ந்த மணிவண்ணன்.

இன்று......

பேழையுட்புக்குப் பெருங்கடல் தாண்டி இலண்டன்
எய்தி எம்மை விழைந்து இங்கண் மீண்டான்
நீர்கொழும்பு அமர்தரு நீலவண்ணன்.

உ

# திருவருட் பாதையில் நாம்

க. ச. சோமசுந்தரம்

செயலாளர், நீர்கொழும்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபை.

சைவத் தமிழ்ப் பெரியோர், இறை வழிபாடு மன அமைதியை அளிப்பது என்று அனுபவத்திற் கண்டறிந்தவர்கள். அதனால், தாம் வதியும் இடங்கள் எங்கணும் கோவில்கள் எடுத்து வழிபாடு இயற்றி வாழ்ந்தவர்கள். கோயில்களைக் காணுந் தோறும் இதயத்தே இறை யுணர்வு முகிழ்க்கின்றது. பத்தி பெருகுகின்றது. வழிபாடியற்றும் வாஞ்சை வலுக்கின்றது. வழிபாடு நால்வகை உறுதிப்பொருள்களை வழங்கும் சாதனமாகி விடுகின்றது. இதனால்தான் போலும் நம்முன்னோர், "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று இடித் திடித்துக் கூறினர்கள். இறைபத்தி வலுப்பெற வலுப்பெற அருள் உள்ளமும், உயர் பண்பும் பிறர்நலம் பேணும் பெற்றியும் கிளைத்துச் செழித்து வளர்கின்றன. சுருங்கக் கூறின் ஆலயம் மனிதனைத் தெய்வநிலைக்கு உயர்த்தும் நூலேணி ஆகி விடுகிறது.

இவ்வுண்மைகள் அனைத்தையும் சைவப் பெரியார் வெ. அருணசலம் செட்டியார் நன்குணர்ந்திருந்தார். இவர் ஒல்லாந்தர் ஆட்சிக்காலப் பகுதியில் நீர்கொழும்பு நகரில் வாழ்ந்தவர். சிறப்பாக நீர் கொழும்புவாழ் சைவமக்களும் பொதுவாக இலங்கைவாழ் சைவமக்களும் செய்த நற்றவப் பயனய் அவரது உள்ளத்தில் ஓர் எண்ணம் உதயமாயிற்று. நீர்கொழும்பு நகரில் சைவாலயம் ஒன்றை நிறுவவேண்டும் என்பதுதான் அவ்வெண்ணம். செட்டியார் தமது சகோதரர் திரு. வெ. குழந்தைவேல் செட்டியாரின் உதவியுடன் நீர்கொழும்பு கடற்கரை வீதியில் தமக்குச் சொந்தமான காணியில் ஸ்ரீசித்திவிநாயகப் பெருமானுக்குச் சிறிய கோவில் ஒன்றை 1754 ஆம் ஆண்டு மார்கழி 23 ஆம் தேதியில் அமைப்பித்தார். நன்ளுளிலே சுபமுகூர்த்தத்தில் யானைமுகமும் பருத்த தொந்தியும் சிறுத்த கண்களும், விரிந்த காதுகளும், ஐந்து திருக்கரங்களும், அங்குச பாசங்களும், ஒற்றைக் கொம்பும் கொண்ட கோலத்தில் ஸ்ரீசித்திவிநாயகப் பெருமானைப் பிரதிட்டை செய்வித்தார்.

வாரணமுகத்து வள்ளல் ஆற்றங்கரையின் அயலில் அரச மரக்காவில் கிழக்கு நோக்கி அமர்ந்து வானேரும் மண்ணேரும் காதலால் கைகூப்பிப் பணிய அருளாட்சி செய்துவருவாராயினர். நாளாக நாளாக ஐயனைப் பணிந்து இட்டசித்திகளைப் பெறும் அடியார் கூட்டம் பெருகி வரலாயிற்று. இந்நிலையில் செட்டியாரின் சகோதரர் குழந்தைவேலர் குஞ்சரமுகத்து ஐயன் சேவடிகளை அடைந்தார். செட்டியார் பெரும் பொருட்செலவில் மீண்டும் கோவிலைப் பெருப்பித்தார். சீரிய ஒழுக்கமும் நல்ல கல்வியும் வாய்ந்த அருச்சகரை நியமித்து, வேதசிவாகம விதிப்படி நித்திய நைமித்தியக் கிரியைகளை நிகழ்த்துவித்து வந்தார். திருவருள் சுரந்து பெருகுவதாயிற்று. தொண்ட உழவர்கள்

ஆரத்துய்த்து மகிழ்ந்தனர். காலம் உருண்டோடிற்று. செட்டியார் சித்திவிநாயகன் சேவடி சேர்ந்தார். செட்டியார் மறைவின்பின், அவர் மனைவியார் தனுஷ்கோடி அம்மையார், சகோதரர்மனைவி தங்கம்மையார், மகள் தையலம்மையார் ஆகிய மூவரும் இணைந்து ஆலய நிர்வாகத்தை நடாத்தி வந்தனர்.

இம் மங்கைநல்லார் மூவரும் முதுமைப் பருவம் எய்தினர். திருவருளின் தூண்டுதலால் எதிர்காலத்தில் ஆலயம் சீராக இயங்கவேண்டும் என ஆசைப்பட்டனர். எனவே 1880 ஆம் ஆண்டில் ஐப்பசித் திங்களில் 25 ஆம் நாளில் ஒன்பதின்மரை உறுப்பினர்களாகக் கொண்ட பரிபாலனசபை ஒன்றை அமைத்து நிருவாகத்தைக் கையளித்து 5372 ஆம் இலக்கத் தருமசாதன உறுதியும் செய்து முடித்தனர். தனி உடைமையாய் இருந்த ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் மக்கள் உடைமையாய் மலர்ந்தது. முதன் முதல் நிறுவப்பட்ட ஆலய பரிபாலன சபையை அலங்கரித்த நிருவாகிகள்.

1. திரு. அ. கந்தசாமிப்பிள்ளை
2. திரு. கு. வைரமுத்துப்பிள்ளை
3. திரு. சு. பிரமநாயகம்
4. திரு. க. பொன்னையாச் செட்டியார்
5. திரு. சி. குமாரசாமிச் செட்டியார்
6. திரு. அ. சின்னத்தம்பியாபிள்ளை
7. திரு. க. தம்பையாச் செட்டியார்
8. திரு. ................ செட்டியார்
9. திரு. கோபாலச் செட்டியார்

அதன் பின் காலத்திற்குக் காலம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையினர் கோவிலைச் சீருற நடத்தி வருகின்றனர்.

1921ம் ஆண்டில் நடைமுறையில் இருந்த ஆலய பரிபாலன சபை உறுப்பினர்களுள் திருவாளர்கள் சண்முகம் கதிரவேலுப்பிள்ளை, சின்னப்பு ஐயாத்துரை, கந்தசாமி சிதம்பரப்பிள்ளை, சுவாமிநாதர் நாகேந்திரம் என்னும் நால்வரும் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் ஆலய முன்றிலில் இருந்த காணியை விலைக்குப் பெற்று ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்துக்கு அழியா உடைமையாக்கினர். விபரங்களை 30 - 6 - 21 ஆம் தேதியைக் கொண்ட 1319 ஆம் இலக்க உறுதியில் விரிவாகக் காணலாம். இவர்கள் காலத்தில் ஆலய நிர்வாகம் சிறப்பாக நடைபெற்றிருக்கின்றது. பிற்காலத்தில் இவர்கள் சந்ததியில் இருந்து ஒவ்வோர் உறுப்பினர் பரிபாலன சபையில் அங்கம் வகித்து வந்துள்ளனர்.

அமரர், சட்டத்தரணி எஸ். கே. விஜயரத்தினம் அவர்கள் 1925 ஆம் ஆண்டில் இருந்து இறையடி எய்தும்வரை அண்ணளவாக 30 ஆண்டு காலம் பரிபாலன சபையின் தலைவராக இருந்துவந்துள்ளார். இக்காலப் பகுதியில் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் பல பல முன்னேற்றமான கருமங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஸ்ரீ நடராஜர், ஸ்ரீ வள்ளி தேவசேனு சமேத சுப்பிரமணியர், புதிய உற்சவ மூர்த்தி, காளிங்க நர்த்தனர், சமயகுரவர், நவக்கிரக மூர்த்திகள் என்போருக்கெல்லாம் படிமங்கள் அமைக்கப்பெற்றன. இப்புனித கைங்கரியங்களையெல்லாம் நிறைவேற்றித் தந்த அன்பர்கள் எமது வணக்கத்திற்கு உரியவர்களாவர்.

உட்பிரகாரத்தில் ஸ்ரீ வள்ளி தேவசேனுசமேத சுப்பிரமணியப் பெருமானுக்கு அமரர் சா. வே. சண்முகம்பிள்ளை அவர்களும், நவக்கிரக மூர்த்திகளுக்கு அமரர் ம. முனியாண்டிச் செட்டியார் அவர்களும் கோவில்கள் அமைப்பித்துதவினர். நித்திய நைமித்திய, காமிய உற்சவங்கள் வேத சிவாகம விதிப்படி நிகழ்த்தப்பெற்றன. தேர்த்திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்று வந்தது. சில வசதிக்குறைகளால்

..டயில் நிறுத்திவைக்கப்பட்டு மீண்டும் 1965 ஆம் ஆண்டு முதல் சீரிய முறையில் நடைபெற்று வருகின்றது.

ஆலய முன்றிலில் அமைந்துள்ள காணியில் அரசும் வேம்பும் இணைந்துள்ள மர நிழலில் நாகலிங்க மூர்த்தி பிரதிட்டை செய்யப்பெற்றுள்ளார். இவர் வரலாறு புதுமை மிக்கது. விவாகமின்றிப் புத்திரப் பேறு கைகூடாது வருந்திய அன்பர் ஒருவர் அரசும் வேம்பும் இணைந்த கோலத்தில் நிழலின் கீழ் நாகலிங்க மூர்த்தியை எழுந்தருளுவித்து வழிபாடியற்றி மணங் கண்டு புத்திரப் பேறு உற்று மகிழ்ந்தனர் என்பர். இன்றும் புத்திர பாக்கியம் விரும்புவோர் விதிப்படி இவரை வழிபட்டு இட்டசித்திகள் எய்திவருகின்றனர்.

அமரர் விஜயரத்தினம் அவர்கள் மறைவின் பின் அன்னையார் திருமதி சி. விஜயரத்தினம் அம்மையார் ஐங்கரன் பணிகளுக்கெல்லாம் பின்னிருந்து ஊக்கமும் ஒத்துழைப்பும் நல்கி வருகின்றார். அமரர் விஜயரத்தினம் அவர்களின் பின் திரு. மு. அருளம்பலம் அவர்கள் சில காலம் சபைத் தலைவராக இருந்தார். அடுத்து அமரர் எஸ். கே. சண்முகம் அவர்கள் பணிபுரிந்தார். இப்பொழுது திரு. ஐயம் விஜயரத்தினம் அவர்கள் சமாதான நீதவான், தலைவர் பதவியை அலங்கரிக்கின்றார்.

1965-ஆம் ஆண்டிலே ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வரலாற்றில் சிறந்த திருப்பம் உண்டாயிற்று. இன்று நீர்கொழும்பு வாழ் இந்துக்களிடையே அன்புப்பிணைப்பு, சகோதர பாசம், நல்லன இயற்றுவதில் நாட்டம், புதிய உத்வேகம் என்பன எல்லாம் மேலோங்கி நிற்கின்றன. "என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற இதயத் துடிப்புடன் குறிப்பிடத்தக்க உயரிய அரிய பணிகள் நிறைவெய்தி வந்துள்ளன.

ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானுக்குக் கலை அழகு மலிந்த சித்திரத் தேர் ஒன்று உருவாக்கப்பட்டது. வெள்ளோட்டவிழா இளைப்பாறிய நீதி அரசர் அமரர் பொன் ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் 6-9-67 இல் நடைபெற்றது. தொடர்ந்து பெருமான் விநாயகர் சதுர்த்தித் திருநாளில் தேரேறி வந்து அடியார்களுக்கு திருவருள் பாலித்தார். இதனை அடுத்து தேரைவிடுவதற்காய தேர்முட்டியினை தங்கொட்டுவை யாழ்ப்பாண இந்து வர்த்தகர்கள் கட்டி உதவினர். திறப்பு விழாவினைக் காணி நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு. ம. ஸ்ரீ காந்தா அவர்கள் இயற்றி வைத்தார்.

மாதச் சதுர்த்தி தோறும் திருவிழா இயற்றும் சீரிய செயல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. 1-10-71 முதல் நான்கு காலப் பூசைகளும் யாதொரு குறையும் இன்றிக் கிரமமாக நடைபெறவும், அருச்சனை அபிடேகம், நேர்த்திக் கடன் முதலிய வழிபாட்டு முறைகளால் பெறப்படும் முழுப்பயனும், ஆலய சேவைகளுக்கு உபயோகமாகும் வண்ணமும் சீட்டுமுறைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்திட்டம் நல்ல பயனை அளித்து வருகின்றது.

3-12-71 முதல் பிள்ளையார் பெருங் கதை உற்சவம் சீரோடு நடைபெற்று வருகின்றது. மேற்படி விழாக் காலத்தில் தொடர்ந்து 21 தினங்களும் நல்லறிஞர்கள் வருகை தந்து பிள்ளையார் கதை படித்து விளக்கமும் செய்து வருகின்றனர்.

ஏரம்பனின் இன்னருளாலும் சபையாரதும் நன்மக்களதும் அயரா உழைப்பாலும் ஆலயத்தின் அயலில் இருந்த 35 பேர்ச் காணியும் கட்டடமும் ரூபா 35,000/-க்கு வாங்கப்பட்டு ஸ்ரீ சித்திவிநாயகராலயத்துக்கு உடைமை யாக்கப்பட்டு 29-11-73இல் 3179 ஆம் இலக்க உறுதிபிறப்பிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பின்

புறத்தில் இருந்த 25 பேர்ச்சுக் காணி ரூபா 25000/- க்கு வாங்கப்பட்டு 11-8-76 இல் உறுதி முடிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தைப் பெருப்பித்துப் புதுக்கும் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டது. அலுவல்களை விரைந்து செய்யவும், நிதி திரட்டவும் மற்றைக் கருமங்களுக்கும் திருப்பணிச்சபை 16-2-75 இல் ஒன்று அமைக்கப்பட்டது. அச்சபையில் பரிபாலன சபை அலுவலர்களுடன் மற்றும் எண்மரும் இடம் பெற்றுள்ளனர். அவர்கள் விபரம் வருமாறு:

தலைவர் : திரு. ஐயம் விஜயரத்தினம் யே. பி. அவர்கள்
செயலாளர் : திரு. க. ச. சோமசுந்தரம் அவர்கள்
உதவிச் செயலாளர் : திரு. இரா. சுப்பையா அவர்கள்
இணைப் பொருளாளர்கள் : திரு. வே. சின்னத்துரை, திரு. மூ. பெரியசாமிப்பிள்ளை

உறுப்பினர்கள்:

திரு. மூ. அருணாசலம்
திரு. அ. வே. தேவராசா
திரு. எஸ். அப்புத்துரை
வைத்தியகலாநிதி சோ. பாலசுப்பிரமணியம்
திரு. ஆர். மார்க்கண்டு
திரு. க. முருகேசு
திரு. சி. க. கணேசன்
திரு. ச. கந்தசாமி
திரு. நா. மு. ஐயம்பிள்ளை
திரு. அ. கணபதிப்பிள்ளை
திரு. இ. இராசேந்திரம்
திரு. எஸ். பத்மநாபன் செட்டியார்
திரு. அ. மயில்வாகனன்
திரு. அ. வே. இராமநாதன்
திரு. கா. சிவகுருநாதன்
திரு. கா. ச. சோமசுந்தரம்
திரு. மா. சுந்தரம் ஐயர்
திரு. செ. தில்லைநாதன் யே. பி.

கணேசன் திருவருளால் திருப்பணி வேலை தொடங்கப்பெற்றது. 6-2-76 இல் நடைபெற்ற பால ஸ்தாபனத்தின் பின் சுமார் ஐந்து லட்சம் ரூபா செலவில் ஆலயம் விசாலிக்கப்பட்டுப் புதிதாகக் கருவறை, நடேசர் ஆலயம், மகாமண்டபம், வசந்த மண்டபம், சுப்பிரமணியர் ஆலயம், நாகதம்பிரான் ஆலயம், வைரவராலயம், நவக்கிரக கோட்டம், களஞ்சியம், மடைப்பள்ளி, யாகசாலை முதலியன அமைத்து மதிலெடுத்து மகாகும்பாபிடேகத்தை நிறைவேற்றியுள்ளோம். மண்டலாபிடேகம் நடந்துகொண்டிருக்கிறது.

கட்டட நிருமாண வேலைகளை அராலியூர் ஸ்தபதி வி. நாகமுத்து ஆசாரியாரும் அவரது உதவியாளர்களும் நிறைவேற்றி உதவினர். மகாகும்பாபிஷேக் கிரியைகளை நவாலியூர், பிரதிட்டா சிரோமணி சிவத்திரு சாமி விஸ்வநாதக் குருக்களும் மற்றும் குருமார்களும் இனிது நிறைவேற்றி உதவினர்.

எமது ஆலயபரிபாலன சபை 1880ஆம் ஆண்டு முதல் நிகழா நின்ற 1981 வரை ஒரு நூற்றாண்டுக்கு மேலான காலம் உயரிய பணிகள் பலவற்றைச் செய்துள்ளது. இச்சபை உறுப்பினர்களாகப் பல பெரியோர்கள் இருந்து அரிய உழைப்பினைப் பங்களிப்புச் செய்துள்ளனர். ஆலயத்திற்குத் தெற்கில் மதிலைச் சீராக்கும் பொருட்டுத் திருவாளர்கள் வி. நவரத்தினமும், ஐயம் விஜயரத்தினமும் தங்கள் காணிகளில் இருந்து நிலம் அன்பளிப்புச் செய்துள்ளனர். காலத்திற்குக் காலம் ஆலயத்திற்குத் தேவையான பொருள்களையும், பண உதவிகளையும், சிரமதானப்பணிகளையும் பொதுமக்கள் செய்து வருகின்றனர். அவர்களுக்கெல்லாம் எங்கள்பணிவான வணக்கம். ஈழமணித் திருநாட்டில் ஒரு நூற்றாண்டுக்கு மேலாகச் சமயப்பணி புரிந்துவரும் நிறுவனங்களுள் எமது நிறுவனம் மிகவும் பழைமைவாய்ந்தது என்று எண்ணும் போதெல்லாம் நீர்கொழும்பு

ழ் சைவப் பெருங்குடியினர் பெருமைப் படாமல் இருக்கமுடியாது. வருங்காலத்திலும் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் மக்களுக்கும் நாட்டிற்கும் பணிபுரிய எல்லாம் வல்ல சித்திவிநாயகன் இன்னருள் புரிதல் வேண்டும்.

திருப்பணி வேலைகள் ஒருபோதும் நிறைவெய்துவதில்லையே! உட்பிரகாரக் கொட்டகைகளும், இராசகோபுரத் திருப்பணியும் காத்துக்கிடக்கின்றன. இராசகோபுரத்தை அமைக்க அன்பர்கள் முன் வந்துள்ளார்கள் இதைச் சொல்லிவைப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

பசுவானது ஒருமுறை குழக்கன்றுக்கு ஊட்டிவிட்டோம் என்று பின்னும் ஊட்ட மறுப்பதில்லையே! மீண்டும் மீண்டும் அணைத்துப் பாலூட்டுகின்றதே!

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்"

வணக்கம்.

## நல்வழிகாட்டும் நன் மொழி

காலில் செருப்பினை அணிந்துகொண்டால் முள்ளின்மேலும் சுலபமாய் நடக்கலாம். ஞானம் என்னும் செருப்பை அணிந்து கொண்டால் உலகெங்கணும் பயமின்றி உலாவித் திரியலாம்.

— பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்

இறைவா, என்னுடைய ஜீவபோதமும், "ஜீவப்பிரயத்தனமும் உன்னுடைய வாலறிவிலும், வல்வினையிலும் அடங்கியிருக்கட்டும். என்முயற்சி உனது பெருந்திட்டத்திற்கு ஒத்ததாய் இருக்குமாகில் நான் வெற்றி பெறுவேன். அப்படியல்லாது நான் உன்னோடு முரண்படுவேனாகில் என்முயற்சி தோல்வியுறும். எனக்குத் தோல்வி நேர்ந்தாலும் அதை நான் உன்னுடைய ஆணையாக ஏற்றுக் கொள்ளுவேனாக". இங்ஙனம் ஈசன் செயலுக்கு ஒத்த மனப்பான்மையை வரவழைத்துக் கொள்ளுதல் விக்நேசுவர பூசையாகும் இத்தகைய மனப்பான்மை இல்லாத வெறும் கிரியைகளும் சடங்குகளும் கணபதி பூஜையாகமாட்டா.

—சுவாமி சித்பவானந்தர்

# வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

நாம் ஒருவரையொருவர் சந்தித்து உரையாடுகின்றோம். ''நான்; நான்'' என்று அடிக்கடி பேசுகின்றோம். இந்த நான் யார்?

நான் எனச் சொல்லிக் கொண்டிருக்கும் பொருளை யாராவது கண்டதுண்டா? கேட்டதுண்டா? விஞ்ஞான கூடங்களிற் பரிசோதனம் செய்து கண்டுபிடிக்க இயலாதா? 'நான்' என்பது யாது?

இந்த உடம்பை நான் என்போமா? உலகமெல்லாம் அலைகின்ற மனத்தை, நான் என்போமா? புத்தி முதலிய அந்தக் கரணங்களுள் யாதாயினு மொன்றை 'நான்' என்போமா? 'நான்' யார்?

உபநிடதங்கள் வேதாந்தம் எனப்படும். அந்த வேதாந்தம் உடம்பும் நீயல்லை. மனமும் நீயல்லை. இவை தவிர்ந்த பொருளே அந்த நான் என்பது, அதனைக் கண்டுபிடி என்கின்றது.

'நான்' என்பது இவைகள் அல்லாத தானால் வேறு எப்படி இருக்கும்? ஒரு குறிப்புச் சொல்லலாகதா? என்று அந்த வேதாந்தத்தைக் கேட்டால், அது பின் வருமாறு ஒரு குறிப்புச் சொல்லுகிறது.

அப்பனே கேட்பாயாக. சரீரம் மனம் முதலியவைகள் அல்லாததான அந்த நான் என்பதுதான் 'பிரமம்.' அதனைக் கண்டு பிடிப்பாயாக. நீ பிரமம் என்கின்றது அந்த வேதாந்தம்.

'நான்' என்று சொல்லிக் கொண்டிருப்பது பிரமம் என்பதைக் கேட்க எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது. இந்த வயிறு கழுவுகின்ற தொழில்கள் அனைத்தையும் தூர எறிந்துவிட்டு, 'நான்' என்பதைக் கண்டுபிடித்துவிட்டால் யாதொரு குறையுமின்றிப் பிரமமாய் இருக்கலாமே. ஏன் இவ்வாறு சிந்திக்கின்றோமில்லையே என்று சிந்திக்கும்போது, சைவ சித்தாந்தம், ''மகனே'' என்று அழைத்து ஒரு வார்த்தை சொல்லுகின்றது.

குழந்தாய், வேதாந்தம் உனக்குத் தந்தை. தந்தை சொன் மிக்க மந்திரமில்லை. வேதாந்த போதனையை நீ பேணி நட. நான் என்பது சரீரம். மனம் முதலியவைகள் அல்லாதது என்று வேதாந்தம் சொன்ன அத்தனையும் சத்தியமேயாம். சரீராதிகள் அல்லாததாகிய, 'நான்' என்பது உன்னாற் காணப்படுமனால், வேதாந்தங் கூறியவாறு அந்த 'நான்' பிரமமாகவேதான் தோன்றும். நீ உன்னைப் பிரமமாகவே காண்பாய்; காண வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சி செய், நான் பிரமம் என்று காண். ஆனால் ...... என்று நிறுத்தியது சைவசித்தாந்தம்.

சைவசித்தாந்தம் இறுதியில், 'ஆனால்' என்றது ஏன்?

நான் பிரமம் என்று துள்ளிக் குதித்த ஒவ்வொருவருக்கும் இந்த 'ஆனால்' பெரிய

பிடியைத் தருகிறதே. சைவசித்தாந்தமே, ஏன் ஆனல் என்கிருய் 'நான் பிரமம்' ஆவதில் உனக்கு ஏதும் சந்தேகமா? என்று கேட்டால் பின்வருமாறு கூறுகின்றது.

மகனே, ''பளிங்கு போன்றது உன் தன்மை'' என்று கூறி அமைகின்றது.

பளிங்கு சார்ந்ததன் வண்ணமானது. சார்பின் வண்ணமின்றித் தனக்கொரு வண்ணமில்லாதது. 'நான்' என்பது சரீராதிகளைச் சார்ந்து அவற்றின் வண்ணமா யிருக்கின்றது. இவ்வாறே பக்குவம் வந்ததொரு காலத்தில் பிரமத்தைச் சார்ந்து பிரமவண்ணமாயிருக்கும். எப்படிச் சரீரவண்ணமாயிருக்கும்போது நான் என்பது சரீரமல்லாதோ, அப்படியே பிரமவண்ணமாயிருக்கும்போதும் 'நான்' என்பது பிரமம் அல்லாததாம் என்று தெரிவிக்கின்றது சைவசித்தாந்தம்.

சடமான சரீரவண்ணமாயிருந்த 'நான்' என்பதைச் சித்தாகிய பிரமவண்ணமாக்குதற்கு எடுத்த முயற்சியின் இன்றியமையாமையையும், உபநிடமாகிய வேதாந்தத்தின் உபாயத்தையும் பாராட்டிக்கொண்டே, 'நான்' என்பதன் உண்மையைத் தெரிவிப்பதனுல், சைவ சித்தாந்தம் வேதாந்தத் தெளிவாயிற்று, 'வேதாந்தத்தெளிவாம் சைவசித்தாந்தம்' என்பது சிவப்பிரகாசம்.

'நான்' என்பது சரீராதிகளுமன்று; பிரமமுமன்று. அது அவை இரண்டுமல்லாததொன்று. உயிர் எனப்படும் ஆத்மா அது.

'கண்ட இவை அல்லேன் நான்
காணுக் கழிபரமும் நான் அல்லேன்'

என்பது சிவஞான சித்தியார்.

கண்டஇவை சரீராதிகள்? காணுக் கழிபரம் பந்தநிலையிற் புலப்படாத பிரமம்.

## நல்வழிகாட்டும் நன் மொழி

''கடவுள் கற்பகதருவைப் போன்றவர்; நீ அவரிடம் வேண்டுவது உனக்குக் கிடைக்கும்''.

— பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

காரணமின்றி மள மள என்று வெகுவேகமாகப் பேசுபவனையும் தன் மனத்தில் இருக்கும் எண்ணத்தை மறைப்பவனையும், அயலார் காணும்படி உருத்திராக்கமாலை அணிந்து தன்பத்தியைக் காட்டிக் கொள்பவனையும் மிக்க தீமை விளைப்பதான நீர்க்கோரைகளால் மூடப்பட்ட அழகிய குளத்தின் நீரையும் நாம் நீக்குதல் வேண்டும்.

— பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

# முன்னவனே யானை முகத்தவனே

திரு. ந. சபாரத்தினம் அவர்கள் பீ. ஏ.
முன்னைநாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

எனது உரோமாபுரி யாத்திரையில் ஜேனஸ் (Janus) என்னும் உரோமர் கடவுளின் அழகான கோவிலைக் கண்டேன். இரு முகமுடைய கடவுள் அவர். நமது துவிமுக கணபதி வடிவத்திற்கும் அவருக்கும் நெருங்கிய ஒற்றுமை காணப்பட்டது.

கிரேக்க நாட்டின் அதென்ஸ் நகரில் தயோனிசஸ் (Dionysus) என்னும் கூத்தாடும் அயோனியக் கடவுளின் விங்கத்தைக் கண்ட அனுபவம் அபூர்வமானது. கிரேக்க மக்கள் இவரைப் போற்றிப் பிரார்த்திக்கும் வழக்கம் இன்றும் உண்டு. நமது கூத்தாடும் விநாயகருக்கும் நடனமாடுகின்ற தயோனிசஸ் என்னும் கிரேக்கக் கடவுளுக்கும் இடையே சில ஒப்புமைகள் காணப்பட்டன.

பண்டைக் காலத்தில் இந்திய நாட்டோடு உரோமரும், கிரேக்கரும் வாணிகத் தொடர்புகள் கொண்டிருந்தனர் என்பது வரலாறு குறிப்பிடும் கருத்தாகும். விநாயகர் வழிபாடு அந்நாடுகளில் பரவியிருந்தது என்று கொள்ள இடமுண்டு.

விநாயகரின் திருவுருவை வெவ்வேறு வகைகளில், சிற்ப நூல்கள் சிறப்புற விளக்குகின்றன. முப்பத்திரண்டு கணபதிகள் இருப்பதாக அந்நூல்கள் குறிப்பிடுகின்றன. அவற்றுள் இளம்பிராயம் தொட்டு நான் கேட்டு இரசித்து வந்தது முக்குறுணி விநாயகப் பெருமானையே. மதுரை, திருச்செந்தூர் சிதம்பரம் முதலிய தலங்களில் முக்குறுணி விநாயகர் மிகப் பெரிய திருவுருவம்கொண்டு விளங்குகின்றார். இவருக்கு முக்குறுணி அரிசியில் மோதகம் செய்து படைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

சித்தி விநாயகரை வல்லபகணபதியென்று மக்கள் வழிபடுவர். இவ்வல்லப கணபதியை வழிபடுவோர் எல்லா வல்லமைகளையும் பெறுவர். இந்நம்பிக்கை சைவப்பெருமக்களின் சிறப்பான சொத்து. சித்திவிநாயகர் நினைத்த செயல்களை எல்லாம் இனிது நிறைவேற்றி முடிப்பர், இராமலிங்க அடிகளார் சித்தி விநாயகரைப் புகழ்ந்து சிறந்த திருப்பதி கங்களைத் தமது திருவருட்பாவில் அருளிச் செய்துள்ளார்.


நம்முன்னோர் செய்த தவப்பயனுற் போலும் நான் பிறந்த இடத்தை விட்டுப் புகுந்த இடத்திலும் என் இல்லத்தின் முன்னே நிருத்த கணபதி எனக்கொள்ளப்படும், நல்லூர்—அத்தியடி நடராஜ வீரகத்தி விநாயகர், வீற்றிருந்தருள் சுரக்கும் திருக்கோவில் நிழலில் வசிக்கும் வரம் கைவரப்பெற்றுள்ளேன்.

ஞானத் தெய்வமாகிய சித்திவிநாயகரை நாம் அன்புடன் வணங்கினல் நமக்கு ''வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம், மாமலராள் நோக்குண்டாம்; மேனி நுடங்காது''

அடிக்கடி இத்தகைய வணக்கத்தில் ஈடுபடுவதாற்போலும் எவ்வித அருகதையும்அற்ற எனக்கும் நீர்கொழும்பு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் இனிது நிறைவேற வாழ்த்து நல்கும் வாய்ப்புக் கிடைத்தது.

கணேசர் திருவடிகளே சரணம்,.

"நால்வர் பொற்ருள் எம் நற்றுணேயே"




வேதநெறி தழைப்பவும் மிகுசைவத்துறை ஓங்கவும்
உழைக்கும் அந்தணர் திலகம்



பிரதிட்டா சிரோமணி: சிவ ஸ்ரீ, சாமி விஸ்வநாதக் குருக்கள்

குடமுழுக்கு விழாவில் சில காட்சிகள்





உ
கணபதிதுணை

ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

## மூலமும் அரும்பத விளக்கமும்

[ தொகுப்பு: ஆசிரியர் சிகண்டியார் ]

நிலைமண்டில ஆசிரியப்பா

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

---

விநாயகர் அகவலை ஆன்றோர் தத்துவஞானத் திருவகவல் எனவும் கூறுவர். ஔவையார் இவ் வகவலைப் பாடித் தோத்திரஞ் செய்து விநாயகப் பெருமான் அருளால் கயிலை சேர்ந்தார் என்பது வரலாறு. விநாயகர் அகவலைப் பாராயணஞ் செய்யும் அடிப்பட்ட வழக்கம் தமிழ் கூறும் நல் லுலகில் நெடிது நின்று நிலவுகின்றது.

**அரும்பதவுரை:**

சீதம்களபம்: குளிர்ச்சி உடைய சந்தனச் சாந்து. பூம்பாதம்: பொலிவுமிக்க பாதம்; செந் தாமரைத்தாள் எனினுமாம். பலஇசை: பல வகைப்பட்ட ஓசை. ஞாண்: கயிறு. பூந்துகில்: பூவேலையமைந்த ஆடை. துகிலாகிய ஆடை என்க. (இருபெயரொட்டு) வன்னம்: அழகு; மருங்கு: இடை. பேழை - பெட்டி பாரக்கோடு என்பதில் பாரம் எல்லை என்னும் பொருளில் வந்தது. கோடு: தந்தம். வேழமுகம்: யானை முகம்; பிரணவ சொரூபமாம், சிந்தூரம்: சிவந்த திலகம். சிந்துரன் என்பானைக் கணேசப் பெரு மான் தேய்த்துத் திலகமாய் அணிந்தனர். அங் குச பாசம்: தோட்டியும் கயிறும், அங்குசம் வலது திருக்கரத்தும் பாசம் இடது திருக்கரத் தும் உள்ள தென்க. நீலமேனி: நீல ஒளியுடன் கூடிய திருமேனி, நான்ற வாய்: தொங்குந் திரு வாய், நாலிருபுயம்: நான்கு பெரிய தோள்கள். மூன்றுகண்: சோமசூரியாக்கினி என்னும் மூன்று திருக்கண்கள். மும்மதச்சுவடு: கன்ன கபோல பீச மதங்கள் பாய்ந்த அடையாளம்.

இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழ்ஒளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்

தெவிட்டா ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுக்கும் கருத்தினை அறிவித்
திருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

---

சொற்பதங்கடந்த : சொல்லுக்கும் பொருளுக்கும் அப்பாற்பட்ட பதம் பொருளை உணர்த்திற்று. துரிய மெஞ்ஞானம்: சுத்த மெய்யறிவு. அற்புதன்: சிவன். சிவன் சுத்தமெஞ்ஞான வடிவினன் என்க. கற்பகக்களிறு: மெய்யடியார் வேண்டியவற்றை வேண்டியபடி அருளும் கற்பக தருவை ஒத்தவர். முப்பழம்: மா பலா வாழைக் கனிகள். யோகியர் முப்பழம் என்பதனை மனிதனின் மூளைப்பகுதிகளான சோமசூரிய அக்கினி என்னும் முச்சுடர்களின் ஒளியினை வெளிப்படுத்தி நுகர்தல் என்பர். மூஷிகம்: பெருச்சாளி. என்னை: பக்குவமற்ற என்னை. தானெழுந்தருளி முன்னைத் தவப்பயனால் தானாகவே என்முன் வந்தருளி. மாயர்ப்பிறவி: அழியாது தொடந்துவரும் பிறவி (மாயா ஈறு குறைந்த பெயரெச்சம்) திருந்திய- திருத்தமான. முதல் - எல்லாவற்றிற்கும் காரணமான. குவலயம் : பூமி; நீலோற்பலமுமாம். யோகியர் இறைவன் ஒளிவடிவான திருவடிகளை குவளை வடிவான கண்ணில் பதித்தருளுவன் என்பர். திரம்: நிலையானது; உண்மைப் பொருள். வாடாவகை : பிறவிநோயுட் கிடந்து வருந்தா வகை, அருளுதல் : தீட்சை செய்தல். கோடு ஆயுதம் கோடாயுதம் : தந்தமாகிய ஆயுதம். கொடுவினை : சஞ்சிதமலம். உவட்டா - வெறுப்பற்ற. உபதேசம் : மந்திரோபதேசம். அடக்கும் உபாயம் : உலகப்பற்றில் செல்லாது தடுக்கும் தந்திரம். இன்புறு கருணை : இன்பத்தை அடைதற்குக் காரணமான பேரருள், கருவிகள் : தத்துவங்கள், இருவினை : ஆகாமியவினை, இருள் : ஆணவ இருள்.

தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறு தாரத் தங்கிசை நிலையும்

பேறு நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையும் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
என்முக மாக இனிதெனக் கருளி

---

தலம் : இடம்; ஒரு நான்கு : ஒப்பற்ற நான்கு; அவை சதாசிவர் வைகும் சிரசிலே உள வாய சத்தியோசாதம், வாமதேவம், தற்புருடம், அகோரம் என்னும் நான்கிடங்களாம். முறையே பின்மூளை, இடப்பக்க மூளை, முன் மூளை, வலப் பக்க மூளைகளென்பர். யோக சாதனையால் நான்கு எல்லைகளையும் கடந்து நிற்கும் நிலை சித்திக்கும் என்பர். ஒன்பது வாயில் கண் 2, காது 2, மூக்குத்துவாரம் 2, வாய் 1, குதம் 1, குறி 1 ஆக ஒன்பதாம். ஒருமந்திரம் : பிரணவம், ஆறு தாரம் : மூலாதாரம் சுவாதிட்டானம், மணிபூ ரகம், அநாகதம், விசுத்தி இவை ஐந்தும் சிரசின் கீழ் உள்ளவை. ஆக்ஞை ஒன்று சிரசின்மேல் உள்ளது. அங்கு இசைநிலை என்று பிரிக்குக. அது நாதமும் விந்துவும் நிலைகொண்டிருக்கும் தன்மை. யோகியர் சத்தியோசாதம், வாமதேவம், தற்புருடம், அகோரம் என்பன வளர்ச்சியுறச் சிரசின் கண் உள்ளதாகி முன்பு கவிந்திருந்த ''சகஸ்ரதளம்'' இப்போது நிமிரும் என்றும் பின்னர் நாதவொலி எழும் என்றும் கூறுவர். பேறு நிறுத்தி: உடலெடுத்த பேறு (பயன்) என மோன நிலையில் இருத்தி. இடை : இடைநாடி. அதற்கு எழுத்து அகரம். பிங்கலை - பிங்கலைநாடி. அதற்கு எழுத்து உகரம். கடையில் சுழுமுனைக் கபாலமும் காட்டி என்றது : சுழுமுனை நாடியின் இறுதியில் விளங்கும் தலைமண்டை ஓட்டில் நடுவண் உள்ள மகாரம் ஆன துவாரத்தையும் காட்டி என்றபடி. மூன்று மண்டலம் சோம சூரிய அக்கினி மண்டலங்கள். முட்டியதூண்: பொருந்த நிறுத்தப்பட்டதூண். குண்டலினி : குண்டலினி சத்தி. நான் றெழுபாம்பின் குண்டலினி என்று கூட்டுக. குண்டலினி சத்தியைப்

பாம்பென உவமித்தார். ( இன் உவமை உருபு ) குண்டலினிசத்தி மூலாதாரத்தில் மூன்றரைச் சுற்று வட்டத்தில் சுருட்டிக்கொண்டு உறங்குகின்றதென்பர். யோகியர் தமது சாதனையால் இதனைச் சிரசில் உள்ள உண்ணாக்குப் பிரதேசத்தைக் கடக்கச் செய்து சந்திர மண்டலத்தை அடைவிப்பர். அசபை : மந்திரவிஷேடம். அசபா வித்தை எனப்படும் : செபிக்கப்படாத மந்திரமாம். விண்டெழு மந்திரம்: வாய்விட்டு உரைக்கப்படும் மந்திரம்; செபிக்கப்படும் ஏனைய மந்திரங்கள்: குண்டலினி சத்தியுடன் பொருந்திய பிரணவ சத்தியை ( அசபையை ) உண்ணாக்குப் பிரதேசத்திற்குக் கொண்டு வருவதை உணர்த்தியும், வாய்விட்டு எழுகின்ற மந்திரத்தை வெளிப்படையாக உரைத்தும் என்க. இவை குருமுகத்தாற் பெறப்படுவன. மூலாதாரத்து மூண்டெழு கனல்: விந்து என்னும் மூலாக்கினி. கால்: திருவடி. அமுத நிலை: இறவாநிலை. ஆதித்தன் : சூரியன். குமுத சகாயன்: சந்திரன். இடைச் சக்கரத்தின் ஈரெட்டுநிலை: சந்திரன் இயக்கமான பதினாறு நிலை; யோகநூலுட் கண்டவை. உடற் சக்கரம்: உடலாகிய சக்கரம், எந்திரம் என்க. உறுப்பு : பஞ்சகோசங்கள். அவை, அன்ன, ஆனந்த, பிராண, மனோமய விஞ்ஞானமய கோசங்களாகும். சண்முகதூலம்: ஆறு ஆதார கமலம். இவை தூல வடிவின. சதுர்முகம்: மனம் புத்தி சித்தம் அகங்காரம்: இவை சூக்கும வடிவின. என்முகமாக — எனக்கு அனுபவமாக.

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளி இரண்டிற் கொன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்

எல்லை இல்லா ஆனந் தம்அளித்
தல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

புரியட்ட காயம்: மனம், புத்தி, சித்தம், சத்த, பரிச, ரூப, ரச, கந்தம் என்று சொல்லப் பட்ட எட்டானியைந்த ஆகாயமய தேகம். கபால வாயில் — பிர்மப்புழை. அதாவது மண்டை ஓட்டில் உள்ள துவாரம். யோகசாதனையால் இது திறக்கும் என்பர். என்னை அறிவித்து: எனது அகண்ட நிலையை அறிவித்து. முதல் — வேர். மனோலயம்: மனம்தொழிற்படாத மௌன நிலை, சும்மா இரு என்ற நிலை. இருள் — அறியாமை. வெளி: அறிவு. ஒன்றிடம்: ஆத்மாவே பிறப்பிடம். ஆனந்தம்: சிவானந்தம். அதனை வெள்ளமென உருவகித்தார். அல்லல்: பிறவித்துன்பம். சத்தத்தினுள் சதாசிவம்: சிரசின்மேல் சதாக்கிய நிலையில் உள்ள அமூர்த்தி சதாக்கியம். சித்தம்: மனம். சிவலிங்கம்: விந்து நாத ரூப சிவலிங்கம்: விந்து நாதங்களை வெளிப்படச் செய்தல் கணு முற்றிய கரும்பினுட்சாறு வெளிப்படச் செய்தலை ஒத்ததென்க. வேடம்: காவியுடை. மெய்த் தொண்டர்: விஞ்ஞானகலர் பிரளயாகலர். அஞ்சக்கரம்: பஞ்சாட்சரம். தத்துவம்: மெய்ப்பொருள். வித்தகம்: சதுரப்பாடு. விரை கழல் — ஞானங்கமழுங் கழல்.

## நல்வழிகாட்டும் நன் மொழி

உலக விளையாட்டுப் பொருள்களான செல்வம், பெருமை, கீர்த்தி முதலியவற்ருேடு விளையாடிக் கொண்டிருக்கிருய். அதிலே மகிழ்ச்சி அடைந்து அச்சம் கவலைகள் இன்றி இருக்கின்ருய். ஆனந்த ரூபியான அன்னையின் திவ்விய தரிசனத்தைச் சிறிதே கண்டாயாஞல் செல்வம், பெர்ருமை, கீர்த்தி ஆகிய இவற்றிடம் உனக்கு அவா உண்டாகாது. இந்த விளையாட்டுச் சாமான்களை எறிந்துவிட்டு அவளிடம் ஓடுவாய்.

— பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்

''ஒரு பித்தளைப் பாத்திரத்தை நாடோறும் துலக்காவிட்டால் அது தன்னொளியை இழந்துவிடும் அன்ருே? அது போலவே ஒருவன் நாடோறும் தியானஞ்செய்து வராவிடின் தன் மனத்தைப் பரிசுத்தமாய் வைத்திருக்க முடியாது.''

— மகான் ஒருவர்

# பொலிந்து பரவுக தமிழும் சைவமும்

திரு. க. சச்சிதானந்தன் அவர்கள் எம். எஸ். சி.
ஐ. நா. வளர்ச்சித் திட்ட அலுவலகம், ஏடன், தென்யேமன்.

முத்து இனிமையான தமிழ்ச் சொல். ஆழ் கடலுள் முத்துச் சிப்பிக்குள் மறைந்திருக்கும் முத்தை வெளிக்கொணர முத்துக் குளிப்பவர்கள் மன்னர் வளை குடாவின் இருமருங்கிலும் வாழ்ந்தனர். வாய்க்கால் ஆறு தொடக்கம் வடக்கே உள்ள கரை ஓரமெங்கும் தமிழர்கள் செறிந்து வாழ்ந்தனர். முத்துக்குளிப்பில் ஈடுபட்ட இவர்கள் இலங்கைத்தீவின் மேற்கு கரையோரத்தில் கல் தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்த தமிழ்க்குடியினர்.

திராவிடர்கட்கே உரியதான கல்லறைகளும் மட் பாண்டங்களும் அகழ்வாராய்ச்சியாளர்களால் இலங்கைத்தீவின் மேற்குக் கரையோரம் எங்கணும் காணப்பட்டு வருகின்றன. பல்லாயிரம் ஆண்டு கட்கு கூடாகத் திராவிடர்கள் இங்கு வாழ்ந்தமைக்கு அகழ்வாரய்ச்சிகள் சான்று பகிர்கின்றன,

வாய்க்கால் ஆற்றின் தெற்குப்புறமாக உள்ள பல குடியிருப்புகள் தமிழர்க்குரியன. நீர்கொழும்பு அத்தகைய குடியிருப்புகளுள் ஒன்றாகும். கடந்த நூற்றாண்டில் நீர்கொழும்பில் வாழ்ந்தவர்கள் தமிழை மட்டுமே பேசினர். தமிழ் வாழ்வு முறைமையை மேற்கொண்டிருந்தனர். இன்று நிலை மாறியுள்ளது. ஆனாலும் தமிழார்வம், தமிழ்ப்பற்று இவைகுன்றாத தமிழர்கள் பலர் இன்றும் நீர்கொழும்பில் நிறைந்து செறிந்து வாழ்ந்து வருகின்னர்.

நீர்கொழும்பில் கடற்கரை வீதி தமிழர்களின் நெருங்கிய குடியிருப்புப் பகுதி. சைவமும் தமிழும் நெருங்கிப் பிணைந்து வாழ்கின்ற பகுதி. கோவில்கள் நிறைந்த வீதி. சிறப்பாக நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம் அமைந்துள்ளவீதி, விஜயரத்தினம் தமிழ் மகாவித்தியாலயம் அமைந்துள்ள வீதி.

தமிழ் மணக்கும் இந்த வீதியிலே திருநீறு பொலியும். தேவாரங்கள் ஒலிக்கும் இந்த வீதியிலே நாதஸ்வர இசையும் தவில் கலந்து இசைக்கும். இறைவனை விழா நாயகனுக்கி, அடியவர்கள் தம்மை மறந்து வழிபாட்டில் ஈடுபடுவர். தேர் ஓடும் இந்த வீதியிலே சீரோடும் சிறப்போடும் வாழும் தமிழர்கள் தமக்கெனக் கல்விக் கூடமும் அமைத்துள்ளார்கள்.

இந்தக் கடற்கரை வீதியிலே இவ்வளவு சிறப்புகளையெல்லாம் தமிழர்கள் கொண்டிருக்க அவர்களை வழிநடத்திக் கொண்டிருப்பவர், தமிழர்க்குத் தலைமை தாங்கி வீற்றிருப்பவர் அருள் மிகு சித்தி விநாயகப் பெருமான் ஆவர்.

சித்தி விநாயகப் பெருமானுக்குக் குடமுழுக்கு விழா. நீர்கொழும்பு அடியவர்களின் புத்தியிலும் சித்தத்திலும் இடம் முழுக்கப்பிடித்து வாழ்கின்ற சித்தி விநாயகருக்கு அல்லவா குடமுழுக்கு. தலை முறைகள் பலவற்றுக்கு ஊடாகத் தமிழர்கள் இறைவனுக்கு எடுக்கும் விழா, இந்தத் தலைமுறையிலும் மேற்கொள்ளப்படுகின்றது.

வாழைகள், கமுகுகள், மாவிலைகள் தோரணங்கள், மஞ்சள் இலைகள், மங்கலப் பொருள்கள், வேதபாராயணம், தேவாரபாராயணம், நாதஸ்வர இசை அரோகரா என்ற அடியவர்களின் ஒலி, இந்தத் தலைமுறையில் இந்தக் குடமுழுக்கு விழாவில் மட்டும் கேட்கும் புதுமையான நிகழ்வல்ல, ஒலியல்ல, காட்சி அல்ல.

பல்லாயிரம் ஆண்டுகட் கூடாக, வாய்க்கால் ஆற்றின் தென்மருங்கில் பல ஊர்களில் பல்கிப்பரவிக் கேட்ட ஒலிகள், கண்ட காட்சிகள் நிகழ்ந்த நிகழ்வுகள் இந்நேரத்தில் இந்த நாளில் இந்தத் தலைமுறையில் ஒடுங்கிக்கேட்கின்றது; ஒதுக்கமாகக் காண்கிறது. நீர்கொழும்பில் கடற்கரை வீதியில் மட்டும்நிகழ்கிறது. இந்த ஒலிகள், இந்த நிகழ்வுகள், இந்தக் காட்சிகள் பரந்து கேட்கவேண்டும், நிகழவேண்டும். காணப்பட வேண்டும். தமிழோடு இசைபாட, மீண்டும் சைவப் பண்பாடு தீவின் மேற்குக் கரையோரமெங்கும் விரைந்து பரவ, சலம் பூவொடு தூபங்கமழ, தொண்டர்கள் புறப்படுவார்களாக. உழவாரப் படையோடு புறப்பட்ட தொண்டர் நாவுக்கரசப் பெருமானை இந்தக் குடமுழுக்கு விழாவிலே நாம் நினைவு கொள்வோம்.

குடத்துள் விளக்காக இருக்கும் நிலைமாறிக் குன்றத்து விளக்காக எமது பண்பாடும் வாழ்வு முறையும் விரிவுற வளமுற வாழ்வு பெறப் பொலிய இன்று இந்தக் குடமுழுக்கு விழாவிலே கால்கோள் அமைப்போம். எல்லாம் வல்ல அருள் மிகு சித்தி விநாயகப் பெருமான் இம்முயற்சி கட்கு உறுதுணையாக நிற்பாராக.

௨

# அகக்கோயில்

வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்

பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்து விளங்கும் பரம்பொருள் அணுமுதல் அண்டமெங்கும் வியாபித்துக் காணப்பட்டாலும் சிறப்பாக அன்புசெய்வார் அகத்தினுள்ளே உறைகின்றான் என்பர் அப்பர் பெருமான். '' அன்புடையார் சிந்தை அகலான்போலும் '' என்ற அவரது திருவாக்குக் குறிப்பு, திருஇன்னம்பர் தேவாரத்துள் வருகின்றது. இறைவனை அன்புசெய்வது எவ்வாறு? மிகப்பெரிய வினா...... பொன்னும், மணியும் மிகு பொருளும் கொடுத்துப் பெருமானை நம்வசப்படுத்தலாமா? ஒருபொருள் ஒருவருக்குத் தேவைப்பட்டால் நாம் அந்தப் பொருளால் அவரை வசப்படுத்தலாம். அகிலமெலாம் படைத்துக், காத்து, அழித்து வேண்டுவார் வேண்டுவது ஈயும் இந்த வள்ளலோ பொன்னார் மேனியன்... உறையும் இடமோ கனகக்குன்று; காதன் மனையாளோ... மரகதச் செல்வி... அருமருந்தன்ன மைந்தர்களில் ஒருவன் சித்திவிநாயகன்... இளையவன் முத்துக்குமரன். மைத்துனனோ... செல்வத்திற்கே மூலாதாரமான திருமகளை மணந்தவன். இப்படி எங்குநோக்கிலும் பொருள் வளங்கொழிக்கும் பொருமானோ... நாம் அளிக்கும் அற்பபொருளுக்கு, அழியும் பொருளுக்கும் மயங்குபவன். பின் எவ்வாறு அவனது அன்பைப் பெறுவது? அதற்கு வழி உண்டா? இருக்கிறது. ''நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே'' அவன்புக்கு நிற்பான்.

''உயிராவணம் இருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி
உயிர் ஆவணம் செய்திட்டு உன்கைத் தந்தால்
உணரப்படுவரோ டொட்டி வாழ்த்தி.''

என்னும் திருத்தாண்டகம் ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஓடும் மனத்தைத் தடுத்து நிறுத்தி உள்ளமாகிய கிழியில் ஆனேறுயர்த்த ஐயனின் திருவுருவத்தை எழுதி, உயிரும் உடலும் ஒன்றுகின்ற யோகமுறையை உணர்த்துகின்றது.

எண்ணங்கள் அலையும் இயல்புடையன. ஒன்றுவிட்டு ஒன்றுபற்றும் தன்மையன. இதனை வாகீசர்,

'' உறுகயிறூசல் போல ஒன்றுவிட்டு ஒன்று பற்றி
மறுகயிறூசல் போல வந்துவந் துலவும் நெஞ்சம்
பெறுகயிறூசல் போலப் பிறைபுல்கு சடையாய் பாதத்
தறுகயிறூச லானேன் அதிகை வீரட்ட னீரே''

கள்ளம்புகாத வெள்ளை உள்ளத்துடன் கண்ணுதற் பெருமானை நம் அகத்தில் இருத்தி வழிபட்டால் கனியினும் இனியனாய், கட்டிபட்ட கரும்பினும் இனியனாய், பனிமலர்க்குழல் பாவை நல்லாரினும் இனியனாய், தனிமுடி கவித்தாளும் அரசினும் இனியனாய் காட்சிதருவான். ஆகம் பகிர்ந்தளித்த மாதொருபாகனார்க்கு அகவழிபாடு எவ்வாறு இயற்றுவது.... நமது உடலையே வினை கெடுத்தாளும் வேதியன் உறையும் கோயிலாக்கி உலையும் மனத்தை உருவத்திருமேனியாக்கி, அன்பாகிய வெள்ளத்தால் நீராட்டி கொல்லாமை, ஐம்புல அடக்கம், பொறை, அருள், அறிவு வாய்மை, தவம், அன்பு என்ற எண்வகை மலர் கொண்டு (அட்டபுட்பம்) தூவித் தொழுதல் வேண்டும். இந்த வழிபாட்டுக் காலத்தில் இன்றியமையாது வேண்டப்படுவது அன்பு. ஆழ்ந்த அன்பு இல்லாது ஆரவாரமும், ஆடம்பரமும் மிக்க புறப்பூஜையைப் புனிதன் ஏற்காமல் எள்ளித் தள்ளிவிடுவான்.

''நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பன் அவர்தமை காணியே''

என்ற திருக்குறுந் தொகைப்பாடல் நமக்கு எச்சரிக்கை விடுகின்றது. இதனையே அன்னையின் அருள் கைவரப்பெற்ற அபிராமிப்பட்டரும்

''மெய்வந்த நெஞ்சினல் லால்ஒருகா லும்விர கர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகல றியாமடப் பூங்குயிலே''

என்று அபிராமித்தாயின் இணையடியை வந்தித்து வழிபடுகின்றார்.

அன்பிற்கு நெகிழும் ஆண்டவன் ஆணவத்துடன் இயற்றும் புறவழிபாட்டில் ஒன்றுவதில்லை.

''என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடுருகி அகங்குழைவார்க் கன்றி
என் பொன் மணியினை எய்தவொண்ணாதே.''

என்ற திருமந்திரம் அன்பின் ஆழத்தை வலியுறுத்துகின்றது.

தடாதகை நல்லாளின் தூய அன்பிற்கு முடிதாழ்த்திய இறைவனை, சோழமன்னன் நால் வகைப் படைகளின் பலமும் கொண்டு நிமிர்த்த எண்ணினான். தோல்வியைத் தழுவினான். கடவூரில் வாழ்ந்த கலயனார் தனது அன்பையே கயிறுக்கி இழுத்தார். ஆண்டவன் நிமிர்ந்தான், அன்பினில் வளைந்தவன் அன்பினில் நிமிர்ந் தான்.

''நண்ணிய ஒருமை அன்பின் நாருறு பாசத்தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி இளைத்தபின் திரும்பிநிற்க
ஒண்ணுமோ கலயனார்தம் ஒருப்பாடு கண்டபோதே
அண்ணலார் நேரே நின்றார் அமரரும் விசும்பில் ஆர்த்தார்''

என்ற வரலாற்றுச் சான்று ஒன்றே அன்பின் பெருமையை விளக்கப் போதுமானது.

காடவர்கோன் கழற்சிங்கன் பொன்னாலும், மண்ணாலும், கல்லாலும் சுதையாலும் எடுத்தா னேனும் கற்கோவிலில் தங்கவிரும்பாது திருநின்ற வூரில்வாழ்ந்த 'பூசலார்' என்ற அன்பர் பொருட் பேறு இல்லாது அருட்பேறு ஒன்றையே ஆதார மாகக்கொண்டு அமைத்த ''அகக்கோயிலையே'' அகனமர் கோயிலாகக் கொண்டான் இறைவன்

இவ்வாறு பத்திவலையில் படும்பரமனை நமது இருவினையை ஈடழித்து இணையில்லா இன்பம் விளைக்கும் தொல்லோனைத் தூயனை என்றும் நமது ''அகக் கோயிலில்'' இருத்தி ஆனந்தப் பண் பாடுவோமாக''

# எம். சரவணபவன்

இல. 614, கொழும்பு றோட்,

குறணை,

நீர்கொழும்பு.

உ

நீர்கொழும்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையின்

# முன்னை நாள் தலைவர்கள்

திரு. ச. க. விஜயரத்தினம் அவர்கள் ஜே. பி. யூ. எம்
[ 1925 முதல் 1955 வரை ]

திரு. மு. அருளம்பலம் அவர்கள்
[ தற்காலிக தலைவர் 18-1-55 முதல் 14-8-55 வரை ]

திரு. ச. க. சண்முகம் அவர்கள் ஜே. பி.
[ 14-8-85 முதல் 30-7-72 ]

பூர்வகாலத்திலே ஈசுரானுக்கிரகம் பெற்ற பெரியோர்களாலே செய்யப்பட்ட தேவாலயங்களுள்ளும் புண்ணிய தீர்த்தங்களுள்ளும் சிலமாயுள்ளவைகளை முன்போலச் செய்தவர் பெறும் பயன், முன் அவைகளைச் செய்தவர் பெற்ற பயனிலும் ஆயிரம் மடங்கதிகமாம்.

— நாவலர்

# எம். சரவணபவன்

இல. 614, கொழும்பு றோட்,

குறணை,

நீர்கொழும்பு.

உ

நீர்கொழும்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையின்

# முன்னை நாள் தலைவர்கள்


திரு. ச. க. விஜயரத்தினம் அவர்கள் ஜே. பி. யூ. எம்
[ 1925 முதல் 1955 வரை ]

திரு. மு. அருளம்பலம் அவர்கள்
[ தற்காலிக தலைவர் 18-1-55 முதல் 14-8-55 வரை ]

திரு. ச. க. சண்முகம் அவர்கள் ஜே. பி.
[ 14-8-85 முதல் 30-7-72 ]

*பூர்வகாலத்திலே ஈசுரானுக்கிரகம் பெற்ற பெரியோர் களாலே செய்யப்பட்ட தேவாலயங்களுள்ளும் புண்ணிய தீர்த்தங்களுள்ளும் கிலமாயுள்ளவைகளை முன்போலச் செய்தவர் பெறும் பயன், முன் அவைகளைச் செய்தவர் பெற்ற பயனிலும் ஆயிரம் மடங்கதிகமாம்.*

— நாவலர்




அமரர், சட்டத்தரணி
திரு. ச. க. விஜயரத்தினம்
ஜே. பி. யு. எம்.
முன்னைநாள் தலைவர்



திரு. ச. க. ஜெயம்விஜயரத்தினம்
ஜே. பி.
தலைவர்




திரு. க. ச. சோமசுந்தரம்
கௌரவ செயலாளர்



திரு. அ. கணபதிப்பிள்ளை
பொருளாளர்



திரு. சி. க. கணேசன்
உபதலைவர்.



திரு. இரா. சுப்பையா
உப செயலாளர்



திரு. மா. சுந்தரம் ஐயர்
உப பொருளாளர்

உ

ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய

# பரிபாலன சபை அலுவலர்

தலைவர்: திரு. ச. க. ஐயம் விஜயரத்தினம் அவர்கள் யே. பி.
(7-7-71 தொடக்கம் இன்றுவரை)

உபதலைவர்: ,, சி. க. கணேசன் அவர்கள்
(24-1-65 தொடக்கம் 23-7-66 வரை,
24-10-76 தொடக்கம் இன்றுவரை)

செயலாளர்: ,, க. ச. சோமசுந்தரம் ,,
(24-1-65 தொடக்கம் இன்றுவரை)

உப செயலாளர்: ,, இரா. சுப்பையா ,,
(24-1-65 தொடக்கம் இன்றுவரை)

பொருளாளர்: ,, அ. கணபதிப்பிள்ளை ,,
(14-10-56 தொடக்கம் இன்றுவரை)

உப பொருளாளர்: பிரம்மஸ்ரீ மா. சுந்தரம் ஐயர் அவர்கள்
(3-8-75 தொடக்கம் இன்றுவரை)

உறுப்பினர்: திரு. ச. கந்தசாமி அவர்கள்
,, கா. சிவகுருநாதன் ,,
,, மூ. அருணாசலம்பிள்ளை ,,
,, இ. மார்க்கண்டு ,,
,, அ. மயில்வாகனன் ,,
,, செ. தில்லைநாதன் ,,
,, நா. மு. ஐயம்பிள்ளை ,,
வைத்திய கலாநிதி சோ. பாலசுப்பிரமணியம் அவர்கள்

கணக்காய்வாளர்: திரு. எஸ். பி. கல்யாணசுந்தரம் அவர்கள்

*With the Best Compliments from*

# SIVASAKTHI STORES

**Dealers in**

**BOTTLE, PAPER & MEDALS**

**No. 213, Negombo Road,**

**Kanuwana.**

Proprietor : **T. MASILAMANY**

## ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய

# திருப்பணிச்சபையினர்

திரு. ச. க. ஜயம் விஜயரத்தினம் ஜே. பி. அவர்கள் — தலைவர்
,, க. ச. சோமசுந்தரம் அவர்கள் — செயலாளர்
,, இரா. சுப்பையா அவர்கள் — உதவிச் செயலாளர்
,, வே. சின்னத்துரை அவர்கள் — இணைப் பொருளாளர்
,, மு. பெரியசாமிப்பிள்ளை அவர்கள் — இணைப் பொருளாளர்
,, மு. அருணாசலம்பிள்ளை அவர்கள் — உறுப்பினர்
,, அ. கணபதிப்பிள்ளை அவர்கள் ,,
,, அ. வே. தேவராசா அவர்கள் ,,
,, இ. இராசேந்திரம் அவர்கள் ,,
,, சி. அப்புத்துரை அவர்கள் ,,
வைத்திய கலாநிதி சோ. பாலசுப்பிரமணியம் அவர்கள் ,,
திரு. சீ. பத்மநாபன் செட்டியார் அவர்கள் ,,
,, அ. மயில்வாகனன் அவர்கள் ,,
,, அ. வே. இராமநாதன் அவர்கள் ,,
,, இ. மார்க்கண்டு அவர்கள் ,,
,, கா. சிவகுருநாதன் அவர்கள் ,,
,, க. முருகேசு அவர்கள் ,,
,, கா. ச. சோமசுந்தரம் அவர்கள் ,,
,, சி. க. கணேசன் அவர்கள் ,,
,, மா. சுந்தரம் ஐயர் அவர்கள் ,,
,, ச. கந்தசாமி அவர்கள் ,,
,, செ. தில்லைநாதன் அவர்கள் ,,
,, நா. மு. ஐயம்பிள்ளை அவர்கள் ,,

அன்பளிப்பு

# ஸ்ரீ லங்கா ஸ்ரோர்ஸ்

88, மெயின் வீதி,

பண்டாரவளை.

தொலை பேசி: 477

With the Best Compliments from

# K. NAGENDRAN & CO.

BUILDING CONTRACTORS,
BUILDING METERIALS SUPPLIERS
& GOVERNMENT TRANSPORT CONTRACTORS

# KUMARAN MILLS

SACAKALAVODAI, KARAINAGAR.

உ

நீர்கொழும்பு

# ஸ்ரீ சித்தி விநாயகர் திருவூஞ்சல்

காப்பு

சீர்பூத்த ஈழவள நாட்டின் மேவும்
சிவம்பூத்த நீர்கொழும்புப் பதியில் மன்னிப்
பார்பூத்த உயிரெல்லாம் பண்பின் வாழப்
பயன்பூத்த திருவருளைப் பரக்க வீசி
ஏர்பூத்த அருளாட்சி இயற்றி நின்றே
இசைபூத்த சித்திவிநா யகன்மேல் ஊஞ்சல்
பேர்பூத்த தீந்தமிழாற் பாட அன்னேன்
பிணிபூத்த சரணமலர் காப்ப தாமே.

நூல்

நலனோங்கு நாதவிந்து கால்க ளாக
நயனோங்கு சத்தியொளிர் விட்ட மாக
வலனோங்கு மந்திரநூல் புரிய தாக
வல்லபெரு மறைநான்குங் கயிற தாகப்
புலனோங்கும் உபநிடதம் பலகை யாகப்
பொருளோங்கும் பிரணவமே பீட மாகக்
கலனோங்கு பெருங்குடி வாழ் நீர்கொ ழும்புக்
கணசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல் (1)

புரந்தரன்மால் அயன்முதலோர் பொருந்தி வாழ்த்தப்
பொருவரிய கணநாதர் மருங்கிற் காப்ப
நிரந்தரமும் அமரரெலாம் நெருங்கி ஏத்த
நிலமிசைவாழ் வேதியர்கள் நியமங் காப்ப
அரந்தைகெடுத் தருளுகென மாந்தர் வேண்ட
ஆகமெலாம் நெக்குருகி அடியர் ஈண்டக்
கரங்குவித்துக் கடலிறைஞ்சும் நீர்கொ ழும்புக்
கணசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல். (2)

மதிகுலவும் இந்திரையாள் வடந்தொட் டாட்ட
மனவிழைவால் மலரயனுர் தாளம் போடத்
துதிகுலவு கின்னரதும் புருக்கள் பாடச்
சுரமகளிர் நடனமிட இசையும் விஞ்ச
விதிகுலவு வேதவொலி விளங்கி யோங்க
விரவுமல இருளிரிய அன்பர் வாழ்த்தக்
கதிகுலவு தலமகிமை நீர்கொ ழும்புக்
கணசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல். (3)

ஆயபுகழ் இந்திரனுர் கவிகை தாங்க
அளகையர்கோன் அடைப்பையுடன் அயலே நிற்ப
மேயதிறல் வளியிறையோன் கவரி வீச
மிக்கமயன் விருப்புடனே கரகந் தாங்க
நேயமொடு பல்லியங்கள் நின்றே ஏங்க
நிருத்தமிடும் அடியரெலாம் நேயம் பொங்கக்
காயவிரும் தெங்குசெறி நீர்கொ ழும்புக்
கணசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல். (4)

வழியடியார் வாழ்த்திசைத்தே அன்பு கூர
வார்ந்தபுனல் பெருக்கெடுத்தே உடல்ந னைப்ப
பழியறியாச் சிவநெறியின் பண்பு கூரப்
பாங்கரெலாம் செந்தமிழே பயின்று மேவ
மொழியெழிலார் வல்லபையார் மருங்கி லார
முனிவரெலாம் அருகிருந்து யோகு காப்பக்
கழிமேவு நெய்தல்சேர் நீர்கொ ழும்புக்
கணசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல் (5)

புலன்சிறக்கு முனிவரெலாம் ஆசி கூறப்
பொறைசிறக்கும் அந்தணர்நல் லொழுக்கங் காப்ப
நிலஞ்சிறக்கும் அரசரெலாம் நேர்மை பேண
நிதிசிறக்கும் வணிகரெலாம் வளத்தின் விஞ்ச
நலஞ்சிறக்கு முழவர்நெல் நயந்தே கொள்ள
நறைசிறக்கும் கனகசுகந் தாதி மேவக்
கலஞ்சிறக்கும் கடல்வளஞ்சால் நீர்கொ ழும்புக்
கணசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல். (6)

சடையிலங்கு முடியுமிளம் பிறையு மாடத்
தாளிலங்கு தண்டைசிறு சதங்கை யாடப்
புடையிலங்கு சாமரசின் னங்க ளாடப்
பொறியிலங்கும் அரவமணிப் பூணு மாடப்
படையிலங்கு மங்குசபா சங்க ளாடப்
பரிசிலங்கு குண்டலமா நிரைக ளாடக்
கடலவங்க மணியிலங்கு நீர்கொ ழும்புக்
கணசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல். (7)

திருமலியுங் கங்கைநதி உதவுந்தேச
சிரமலியுங் கைலாச கிரியில் வாச
மருமலியும் பரசிவனுக் கருமை நேச
மதிமலியும் அறிஞருளத் தமர்வி லாச
பருமலியுங் கன்மவினைக் கொருவி நாச
பலமலியுங் பிறவிதொறும் அருளு மீச
கருமலியும் முகில்துயிலும் நீர்கொ ழும்புக்
கணசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல். (8)

ஆறணியுஞ் சிவசுதரே ஆடீர் ஊஞ்சல்
அழகுபெறும் அற்புதரே ஆடீர் ஊஞ்சல்
பேறுதரு கணபதியே ஆடீர் ஊஞ்சல்
பெருமைசெறி சற்குருவே ஆடீர் ஊஞ்சல்
நீறணியும் குணநிதியே ஆடீர் ஊஞ்சல்
நிலவணியுஞ் சடாதரரே ஆடீர் ஊஞ்சல்
காரணியுங் கானல்சூழ் நீர்கொ ழும்புக்
கணசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல் (9)

அறந்தனக்கு வரம்பாய முனிவோர் வாழி,
ஆறங்கமாண் புடைநல்லந் தணரும் வாழி,
சிறந்தபயன் உதவுமா னினமும் வாழி
செழிப்புதவு மழைவாழி வேந்தர் வாழி
மறந்தவிர்ந்தே உலகெல்லாம் மகிழ்ந்து வாழி
மருவியநின் கொடிகுடைமூ ஷிகமும் வாழி
பிறந்தபயன் பெறநின்னைப் பணிவோர் வாழி
பெருமான்நின் சந்நிதியே பெரிதும் வாழி. (10)

சுபம்

# அப்பர் அருள்மொழி

வித்துவான் திரு. பொன். அ. கனகசபை அவர்கள்

சிவபெருமானல் ஆட்கொள்ளப்பெற்றவர் திருநாவுக்கரசர். ஆளுடைய அரசரை அப்பர் எனப்போற்றினர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு என்னுந் திருநாமம் உலகம் உள்ளளவும் நிலைபெறும்படி சிவபெருமானே திருவாய்மலர்ந்தருளினரெனின் அப்பரடிகளின் பெருமை ஆராயுந் தரத்தோ! இத்தகு சிறப்பினலன்றோ சேக்கிழார் பெருமானும், ''சிவஞானக் கலைத்துறை தழைப்ப வந்து திருவவதாரஞ் செய்தார்'' என்று பாராட்டினர். சைவசமயத்தின் புண்ணியக் கண்ணில் ஒன்ருகத்திகழ்ந்தார் அப்பர் பெருமான். சொற்குறுதிக்கு அப்பரெனச் சொல்'' என்ற அடி அப்பர் அருள்மொழியால் எழுந்த அநுபவத்தையே சுட்டுகின்றது. அப்பர் அருளிய தாண்டகப் பாடல்கள் அவரைத், ''தாண்டக வேந்தர்'' ஆக்கின. அப்பர் அருள்மொழியே தேவாரம் என்ற சிறப்புப்பெயர் கொண்டது. சம்பந்தர் பாடியவை திருக்கடைக்காப்பு; சுந்தரர் செந்தமிழ் திருப்பாட்டு.

அப்பர் அருள்மொழி, நான்காம் ஐந்தாம், ஆருந்திருமுறைகளாக நம்பியாண்டார் நம்பியால் வகுக்கப்பெற்றுள்ளது. பண்ணமைந்த பாடலுந், திருநேரிசையுந், திருவிருத்தமும் நான்காம் திருமுறை; திருக்குறுந்தொகை ஐந்தாந்திருமுறை; திருத்தாண்டகம் ஆறும் திருமுறை. அப்பர் அருட்பாடல்களைப் படிப்போரும், படிக்கக் கேட்போரும் தெய்வபக்தி அதிகரிக்கப் பெறுகின்றனர்; இவ்வாறே தெய்வத்தையும், படிப்போர் கேட்போருக்கு அருள்புரியத் திருவுள்ளங்கொளச் செய்கின்றன, தெய்வ வாரப்பாட்டை உண்டாக்குஞ் சிறப்பு அப்பர் அருள்மொழிக்கே உண்டெனினும், தேவாரம் என்றபெயர் பொதுவாக மூவர் பாடல்களையும் குறிப்பது வழக்கமாயிற்று.

திருக்கோயில்களிலுள்ள திருவுருவங்கள், வழிபடுவதற்குரிய குறியாகத், திருக்குறிப்புடன் திகழ்கின்றன. இறைவனது குறியையுந், திருக்குறிப்பையும் உருகி உருகி உணர்த்து உணர்ந்து வழிபடுபவரே குறிக்கோள் உடையவர் ஆவர். அறிவு நூல் ஆராய்ச்சி மிகுந்த மருணீக்கியார், சமண சமயம் புகுந்தார்; வாணளை வீணளாக்கினர். திலகவதியாரின் வேண்டுகோளால் - சூலை நோயால் தடுத்தாட்கொள்ளப் பெற்றுக் குறிக்கோளுடையரானர். அடியார்களை அருள்நெறிப் படுத்துமுகத்தால் அப்பரடிகள் தம் முன்னைநாள் வாழ்க்கையைக் கூறுவாராய்.

''பாலனய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதை மார்தம்
மேலனய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து
கோலனய்க் கழிந்த நாளுங் குறிக்கோ ளிலாது கெட்டேன்
சேலுலாம் பழன வேலித் திருக்கொண்டீச் சரத்துளானே''

என்ற தேவாரத்தை அருளிச்செய்துள்ளார். ''குறியிலாக் கொடியேனை அடியேனுச் செய்தானை'' என்றுபாடி, நம்மையுங் குறிக்கோளுடன் வாழுமாறு நம்பிக்கையூட்டுகின்ருர். அப்பரடிகள் குறிக்கோளுடையராகிச் சிதம்பர தரிசனஞ் செய்தார். அப்பொழுது எடுத்த திருக்கரத்தால், 'எப்போது வந்தாய்' என எம்பெருமான் கேட்பதான திருக்குறிப்பை உணர்ந்தார். தாம் பெற்ற பேற்றை யாமும் பெற்றுய்யுமாறு.

''சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்
என்றுவந்தா யென்னும் எம்பெருமான்றன் திருக்குறிப்பே.''

என்று பாடியருளியுள்ளார். எம்பெருமான் திருக்குறிப்பை உணர்ந்த அப்பர், அதற்குப் பதிலிறுப்பாராய்,

''பத்தனுய்ப் பாடமாட்டேன் பரமனே ........
..............................................................
முத்தனே முதல்வா தில்லை யம்பலத் தாடுகின்ற
அத்தாவுன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே.''

என்று பாடி நம்மை ஆச்சரியத்துள் ஆழ்த்து கின்றூர். தில்லைநடனதரிசனங்காணவே மனிதப் பிறவிவேண்டுமென்று பாடினூர் அப்பர். தில்லைச் சிற்றம்பலத்தைக் ''கண்டு இன்புற இன்னம் பாவிக்குமோ இப்பிறவியே'' என்று நாவூறியவர் ''வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித் திடுமின்'' என்று நமக்கு அறிவுரை பகரு கின்றூர்.

அடியவர்கள் மனப்பக்குவ நிலையிற் பலதிறப் படுவர். பலதிற அடியார்களும் ஆலயத்திற்கு வந்து, தத்தம்மனங்கொண்ட திருவுருவத்தை வழிபட்டு, உய்வடையும் பொருட்டே மகாதேவனை ஒரேஒரு பரம்பொருள், பலவேறு திருவுருவங்களாக ஆலயங்களிலே தரிசனந் தருகின்றது. பலதிறமான பக்குவமுடையவர், வழிபடும் திருவுருவங்களும் பலவிதமாயமைவதும் பொருத்தமே. அப்பாலும் அடிசார்ந்த அனை வரையும் மறுமதத்தினரையும் மதித்துப்போற்றும் சைவத்தின் விரிவினை அப்பர் அருள்மொழி எடுத்து விளக்குகின்றது, சைவசமயமே அனைத்து மதங்களையுஞ் சோபானமாகத் தன்னுளடக்கிய சமயாதீதமான உண்மைச் சமயம் என்பதனை விளக்கும் அருள்மொழி.

''விரிவிலா அறிவினூர்கள் வேறெருரு சமயஞ் செய்து
எரிவினுற் சொன்னு ரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்.''

என்பதாகும். 'ஒன்றே பரமபொருள்; அறிஞர் அதனைப் பல பெயரால் அழைக்கின்றனர்' என் கின்றது வேதம். எந்தத் தெய்வத்தை வழிபட் டாலும் அந்தத்தெய்வத்தினூடாக அந்த உண்மையான ஒரேபரம் பொருளே அருள்புரி கின்றது என்பதை,

''வாது செய்து மயங்கும் மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள்
யாதோர் தேவர் எனப்படு வார்க்கெலாம்
மாதே வன்னலால் தேவர் மற்றில்லையே''

என்ற அப்பர் அருள்மொழி மலைமேல் தீபமாகக் காட்டுகின்றது.

''யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வமாகி ஆங்கே.
மாதொரு பாகனுர் தாம்வருவர்''

என்கின்றது சிவஞான சித்தியார் என்னுஞ் சித் தாந்த சாத்திரம். எல்லாச் சமயங்களையும் கடந்த முழுமதத்தையே இந்த நூற்றூண்டு போற்றுகின்றது. இருபதாம் நூற்றூண்டுக்கேற்ற உண்மைமதமாக வைதீகசைவத்தை நிறுத்து கின்றது அப்பர் அருள்மொழி.

கடவுளை வாழ்த்துப்பொருளாகக் கொள் ளாது வாழ்வுப் பொருளாகக் கொண்டார் அப்பரடிகள், அன்னையாகவும், அப்பனுகவும், உடன்பிறந்தோராகவுங் கடவுளைக்கண்டு பாடினூர். ''ஈன்றூளுமாய் எனக்கெந்தையுமாய் உடன் தோன்றினராய்'' என்று தொடங்கித்தன்னடி யார்க்குத் தோன்றூத் துணையாயிருக்க ஏன்று கொண்ட பெருமான், தனக்கே தோன்றுந் துணையாயிருந்தான் என்று பாடியருளினூர். ஈன்றூள் மாதினியார்; எந்தை புகழனுர்; உடன் தோன்றினூர் திலகவதியார், ''அப்பன் நீ அம்மை நீ'' என்று தாண்டகத்திலும் பாடினூர். எல்லாப் பொருளிலும் இறைவனைக் கண்டார்; ''எல்லா உலகமும் ஆனுய் நீயே'' என்றும் பாடிப் பரவினூர்.

புறஉலகத்தில் மாத்திரமன்றி அகத்திலுஞ் சிவதரிசனம் பெற்றூர். குருவின் உபதேசப்படி நின்று 'உடலான வீட்டில் உள்ளமெனும் அகலுள் பசுஞானமாகிய நெய்சேர்த்து உயிரான, திரியிட்டு, சிவஞானமாகிய தீயினுல் எரித்துக் கொள்ள, அந்தச்சிவஞானப் பிரகாசத்திலிருந்து அத்துவித் பாவனை செய்தால் சிவாநந்த அநுபவ

முண்டாகும்' என்ற செய்தியினை, ''உடலெனும் மனையகத்து'' என்ற தேவாரத்தாலே தெரியவைத் துள்ளார். பக்குவத்திற்கு ஏற்ப இறைவன் தரிசனங் கொடுத்தலை அருமையான உவமை வாயிலாக விளக்கியருளினார். விறகில் நெருப்பு மறைந்திருப்பது போல, அதம பக்குவ ஆன்மாக் களிடத்து இறைவன் மறைந்திருப்பான். உறவு என்ற கோலை நட்டு உணர்வு என்ற கயிற்றினால் நன்றாக இழுத்துக் கடைதலாகிய தியானத்தைச் செய்ய, இறைவன் அவர்களுக்குக் காட்சி கொடுப் பான்; மத்திம பக்குவ ஆன்மாக்களிடத்து இறை வன் பாலின்கண் நெய்போல் மறைந்திருப்பான் அவர்கள் உறவுக் கோல் நட்டு உணர்வுக் கயிற்றி னால் இழுத்துக் கடைதலாகிய தியானத்தைச்செய் யத் தோன்றியருளுவான், உத்தம பக்குவிகளிடத்து மணியின்கண் ஒளிபோல இறைவன் மறைந்திருந்து, சாணையிற் கடைந்த மாத்திரத்தே மணியில் ஒளி வெளிப்படுவது போல அவர்கள் தியானித்த மாத்திரத்தே இறைவன் தோன்றியருளுவான். இக் கருத்தை விளக்கும் அப்பர் அருள்மொழி,

''விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே''

என்பதாகும்,

காதல் உணர்வைக்கூடக் கடவுளுணர்வாக் கித்தருகின்றார் அப்ப மூர்த்திகள். ஆன்மாக்கள் இறைவனை நாயக—நாயகி பாவனையில் வணங்கி வீடுபேறடையவழி காட்டியுள்ளார், தோழி செவி லிக்கு அறத்தொடு நிற்றலாகிய துறையில், ''முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்... .. என்ற திருத்தாண்டகத்தைப் பாடியருளினார். சத்திநிபாதத்து உத்தமரது நிலை இப்பாடலால் விளக்கப்படுகின்றது.

பண்டைத் தமிழகத்திலே தலையாக விளங்கியது நாம வணக்கம். தலைவன் நாமம் சிவன். அவன் வண்ணம் பொன்வண்ணம், ஆரூர் எல்லாம் நிறைந்த ஊர். கேட்டவற்றை அவன் மீளநினை யாது மறக்கு மாறு செய்தோம். அவள் அவனி டத்தில் பைத்தியமானாள். தாய் தந்தையரை மறந்தாள். கன்னியர் இல்வரை இகவாதிருத் தல் ஆசாரம். தானே இல்வரை இகந்து ஆசாரத்தை மறந்து, ஆரூர் ஆடையத் துடித் தாள். தன்னை மறந்த நிலையில் அயரா அன் பால் தலைவனையே நினைந்தாள் சிவன் என்னுந் தன்னுமங் கெட்டுச், சிவன் தன்மையளாகி அச் சிவன் தாடலைப் பட்டாள்.

அப்பர் அருள் மொழி அருட்பாடல் ஆகும் அவனருளாற் பாடப்பெற்ற அப்பர் தேவாரம், படிப்போர் கேட்போர்களது தற்போதத்தைக் கெடுக்கும்; வினையின் விளைவாகிய மூவகைத் துன்பங்களையும் தாக்காது தணிக்கும்; எந்நாளும் இன்ப நிறைவை ஆக்கும். இன்பவடிவினனை சிவனுக்குத் தூல உடலாக விளங்குவது அப்பர் அருள்மொழி. அது தன்னோடு பயில்வார்க்கும் இன்பநிலை யளித்தலில் யாதும் ஐயுறவில்லை. சீவ கரணமாக்கும். இறக்கும் போதும் வழித்துணை யாகும். அருட்செல்வமான அப்பர் அருள் மொழி யை நாளும் போற்றி நலம் பெறுவோமாக!

''மண்பொருந்தி வாழ்வார்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானை
பண்பொருந்த இசைபாடும் பழனஞ்சேர் அப்பனை என்
கண்பொருந்தும் போழ்தத்துங் கைவிடநான் வல்லேனே.''

# "இந்தின் இளம்பிறை போலும் எயிற்றன்"

திரு. எம். சற்குணம் அவர்கள் எம். ஏ.

விநாயகப் பெருமான், சிவமெனும் செம்பொருளின் மூத்த புதல்வராதலின் மூத்த பிள்ளையார் என்றும், சிவ கணங் களுக் கெல்லாந் தலைவர் ஆதலின் கணபதி என்றும், தொடங்குஞ் செயல்களை இடையூறின்றி நிறை வேற்றுந் தலைவர் என்பதனால் விக்கினேசுவரர் என்றும் பல் வேறு பெயர்களால் வழங்கப்படுகின்றார். எடுத்த கருமங்களனைத்தும் சித்தியெய்த அருளும் செம்மையினர் ஆதலின் சித்தி நாதர்என்றும் ஏத்தப்படுகின்றார்.

திருமந்திரம் இவரை, "இந்தின் இளம்பிறை போலும் எயிற்றன்" என்று குறிப்பிடுகின்றது. இதனையே நெல்லைக் காந்தியம்மை பிள்ளைத்தமிழ், "கலையை வளைத்த பிறைக் கோட்டு ஐங்கரத்தோன்' என்றும், நைடதம், "வெண்டிங்கள் இற்ற கோட்டது குறை" என்றும் இயம் புகின்றன.

கணேசப் பெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயமே "காண பத்தியம்" ஆகும். ஈழமணித் திருநாட்டில் இவரை பௌத்தர்கள், 'கணதெய்யோ' என வணங்கி வருகின்றனர். தீபேத்திலும் நேபாளத்திலும்கூடப் பௌத்தர்களிடை யே கணபதி வழிபாடு உண்டு. பௌத்த புராணம், விநாயகரை மாயையை வென் றவன் என்று பேசும். புத்தர் தமது சீடர் ஆனந்தருக்கு "கணபதி ஹிருதயம்" என்னும் மந்திரத்தை உபதேசித்தனர் என்பர்.

கிரேக்க நாட்டினர் இவரை, யானை முகத்துடனே வழிபட்டு "தேர்மினசு" எனக் குறிப்பிட்டுள்ளார்கள். உரோமா புரியிற் கணேசர் என்னும் பெயர் 'யேனசு' என வழங்கப்பெற்று வருகின்றது, எகிப்து நாட்டில் 'கேனசு' எனவும் 'குனீசு' எனவும் இவ்வணக்கம் பரவியுள்ளது. அமெரிக்கருட் பழங்குடிகள் இவரை அறு வடைக்காலத் தெய்வமாக வழிபடுகின் றார்கள். அங்கே காணப்படும் கணபதி ஆயுதமேந்திய திருக்கைகளுடன் வீரகண பதி என வீற்றிருக்கின்றார்.

சீன மொழியிற் பிள்ளையார் திருப் பெயர், 'குவன் சீ பியின்' என வழங்கப்படு கின்றது. சீனர் வச்சிரதாது, கருப்பதாது என்னும் மந்திரங்களை வைத்தே கணபதி யை வணங்கி வருகின்றார்கள். யப்பானிய மக்களிடையே, பௌத்த மதத்தைக் காத் தவர், கணபதி என்னும் கதை வழங்கிவரு கிறது. யப்பானிய மொழியில் 'சோடன்' விநாயக்கர்' 'குவான்சன் சோ' என்னும் பெயர்கள் மட்டுமின்றி, 'வச்சிரசின்ன' 'வச்சிரபாக்கன,' 'வச்சிர முகா' 'காக்கு சென் கோ' முதலிய பெயர்களும் கண பதிக்கு வழங்கி வருகின்றன. யாவா. சுமத் திரா, போர்ணியோ மற்றும் மலாயத் தீவு களிலும் கணபதிக்கு வழிபாடு உண்டு.

இத்தெய்வத்தைக் குறிக்கப் பழைய திராவிடர்கள் எப்பெயர் வழங்கினர் என் பதை அறிந்து கொள்வதற்குப் போதிய சான்றுகள் கிடைத்தில. இவரைக் குறிப் பதற்குச் சங்கத மொழியிலே வழங்கும் பல பெயர்களுள் 'ஏகதந்த' என்பதும் ஒன்றாகும். ஒருதந்தத்தை உடையவர் என்பது அதன் பொருள். பல் என்னும் திராவிடச் சொல் சங்கத மொழியில்

'தந்த' எனவரும். பல் என்பதே பிற்காலத்தில் 'பின்' எனத்திரிந்து பிள்ளையார் ஆயிற்றென்பர். எனினும் 'பக்சி' (Bagchi) எனும் மேல் நாட்டறிஞர் யானைக் கன்றைக் குறிக்கும் 'பிள்ளக' என்னும் பாலி மொழிச் சொல்லே திரிந்து பிள்ளை என வந்தது என்கின்றார் 'பிள்ளக' என்னும் சொல் திராவிடச்சொல்லே அன்றி வேற்று மொழிச் சொல் அல்ல என்பாரும் உளர்.

'ஒருகோட்டன் இருசெவியன்' என்று சிவஞான சித்தியார்கூறும். அதுபோலவே, மூத்தநாயனார் இரட்டை மணி மாலையும், 'ஒருகோட்டிருசெவி' 'தனிவெண்கோடு 'ஏக தந்தத் தெந்தை' 'ஒற்றை வெண்தந்த வேழமுகத் தெம்பிரான்' என்றெல்லாம் கூறிச் செல்கின்றது. தைத்திரீய ஆரண்யதத்தில் 'தந்தின்' என்ற சொல்வருகின்றது. இதன் பொருள் தந்தத்தை உடையோன் என்பதாகும். இது கணேசனைத் தான் குறிக்கின்றது. எனத் திட்டமாகக் குறிப்பிட முடியவில்லை. ஏனெனில் வேதத்தில் வருங்கடவுளரோடு அவர் அப்பொழுது சேர்க்கப்படவில்லை. அவர் வேத நூல்கள் எழுந்த காலத்தே சிறு கூட்ட மக்கள் மட்டும் வணங்கும் கிராம தேவதையாக இருந்தார். மனுதர்ம சாத்திரததின் சுலோகம் ஒன்றில் பிராமணர்களின் கடவுள் சிவன் என்றும், சூத்திரர்களின் கடவுள் கணேசர் என்றும் கூறப்பட்டுள்ளது.

புராண காலத்துக்கு முன்னே கணேசருக்கு ஒரு தந்தம் வந்தமை பற்றிய குறிப்புகள் இடம் பெற்றிருக்கவில்லை. பழங்காலம் முதல் அறுவடைக் காலத்து அலுவல்களுடன் அவர் தொடர்புபட்டிருத்தலைக் காண்கின்றோம். 'ஏக தந்தர்' என்ற பெயரும் அறுவடையில் பிரதான இடத்தை வகித்த கணேசரைக் குறித்திருக்கலாம். ஏகதந்தம் உழவுத் தொழிலுக்கு இன்றியமையாத கருவியாகிய கலப்பையை உணர்த்தலாம்.

பாரத இதிகாசத்தை வியாசர் சொல்ல விநாயகப் பெருமான் அதனை எழுதினார் என்னும் செய்தியை நாம் அறிவோம். பாரத இதிகாசத்தின்பின் வந்த புராணங்கள் இக்கருத்தைப் பொன்னே போற் போற்றிச் சொல்கின்றன. மேலும் கந்த புராணகாரர், மற்றுமொரு செய்தியையும் எம்முன் வைக்கின்றார். விநாயகப் பெருமான் தம்முடைய கோடுகளுள் ஒன்றை முரித்து அதனைக் கொண்டு கயமுகாசுரனை வதைத்தருளினார் என்பது.

வரபலம் மிக்க கயமுகாசுரன் விநாயரது கோட்டின் ஆற்றலுக்கு எதிர்நிற்க இயலாதவனாய்ப் பெருச்சாளி வடிவங் கொண்டு அவரைத் தாக்க வந்தான். விநாயகர் அவன் வலிமையைக் கெடுத்து வாகனமாக்கிக் கொண்டார். 'மூஷிக வாகனர்' என்னும் பெயரும் பெற்றார். மேலும் அரிவி வெட்டுங் காலங்களில் வழிபாடியற்றப்படும் பிரதான கடவுளாகிய கணேசர் தானியங்களை அழிக்கும் எலியை வாகனமாகக் கொண்டது பயிர்த்தொழிலாளர் பொருட்டாயிருக்கலாம் என்று கருதுவாரும் உளர்.


அலெக்சாந்தர் இந்தியாவுக்கு வந்த காலத்தில் மூஷிகர் என்ற சாதியினர் அங்கு இருந்தனர் என்று கிரேக்க ஆசிரியர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். யானையைக் குல மரபுச் சின்னமாய்க் கொண்டவர்களைப் போல மூஷிகத்தை—எலியை—குலமரபுச் சின்னமாகக் கொண்டவர்கள் இருந்திருக்கலாம். இரு பகுதியாருக்கும் இடையே ஏற்பட்ட சமரில் யானையைக் குல மரபுச் சின்னமாகக் கொண்டவர்கள் வெற்றி கண்டிருக்கலாம் இவ்வடிப் படையே கயமுகன் கதைக்குக் கருவாயிருக்கக்கூடும் என்று சிலர் கருதுகின்றனர்.

வரலாற்று அடிப்படையில் நோக்கும் போது விநாயகப் பெருமான் உலகெல்லாம் பரவிய உன்னதத் தெய்வமாக இருந்திருக்கின்றார். மக்கள் வாழ்வியற்றுறைகளில் தலைமையான இடத்தைப் பெற்றுள்ளார் என்று கொள்ளலாம்.

## திருப்பணிச்சபை இணைப்பொருளாளர்கள்



திரு. மூ. பெரியசாமிப்பிள்ளை




திரு வி. சின்னத்துரை

## ஐங்கரன் பணிக்குப் பெருநிதி அளித்தோர்

1. திரு.ச. க. ஜெயம் விஜயரத்தினம் ஜே. பி.
2. திரு. க. ச. சோமசுந்தரம்
3. திரு. மூ. பெரியசாமிப்பிள்ளை



4. திரு. மூ. அருணசலம்பிள்ளை




நீர்கொழும்பு ஸ்ரீசித்திவிநாயகரின் சித்திரத்தேர்

# சித்திரத் தேர்த் திருப்பணி இயற்றிய செம்மையினேர்



திருமதி சி. விஜயரத்தினம் அம்மையார்




திரு. க. ச. சோமசுந்தரம்



அமரர்
திரு. ச. நடராசா



திரு. அ. வே. தேவராசா




திரு. சி. அப்புத்துரை



திரு. வே. கந்தையா

தேர்நிலை மண்டபம் அமைத்த சிறப்பினர்
( தேர்முட்டி )



தங்கொட்டுவை வாழ் இந்து வர்த்தகர்கள்.

உ

# குறும்பு செய்யும் குழந்தை முருகன்

பண்டிதர் திரு. அ. ஆறுமுகம் அவர்கள்

இளமையும் எழிலும் என்றும் குன்ருது இலங்கும் இறைவன் முருகன். "என்றும் இளையாய், அழகியாய், ஏறூர்ந்தான் ஏறே" என்று ஆராமையுடன் அழைக்கின்ருர் நக்கீரர். முருகன் விளையாட்டுப்பிள்ளை. உலகத்துக் குழந்தைகள் எல்லாம் அந்த விளையாட்டுக் குணம் உடையவை. இக் குழந்தைகள் சிறுபொழுது ஆடிஓடி விளையாடினுற் களைத்து அடங்கி நித்திரையில் ஆழ்ந்து விடுகின்றன. அம்முருகனே அலகிலா விளையாட்டுடையான். அவன் தீராத விளையாட்டுப்பிள்ளை.

உமையம்மையின் மடியிற் குழந்தை முருகன் ஒருகணம் அமர்ந்திருக்கின்ருன். அவனுடைய பால்மணம் மாருப் பசுங்கனி வாயிலிருந்து சாறு வடிகின்றது. அம்மையின் மடி அதனுல் நனைந்து விடுகின்றது. அவரது வெண்ணிறப் புத்தாடை கசங்கி அழுக்குப் படிகின்றது. துருதுருத்தபடி மடியிலிருந்த குழந்தை முருகன், அம்மையின் மணிவயிற்று மடிப்பைப் பிடித்துத் தவழ்ந்து மேலே ஏறுகின்ருன். குழந்தையின் குறும்புச் செயல்களால் அம்மையின் உள்ளம் குளிர உதரமும் குளிர்ந்து விடுகின்றது.

அம்மையின் வயிற்றைப் பிடித்துத் தவழ்ந்து மேலே ஏறிய முருகன் பரமபிதாவாகிய சிவனுர் மார்பில் நின்று குரவைக் கூத்தாடுகின்ருன். எம்பிரானுடைய ஒரு திருக்கரத்தில் அக்கினி சுடர்விட்டு எரிகின்றது. அவருடைய மற்ருெரு கரத்தில் மான் கன்று மருண்ட நோக்குடன் நிற்கின்றது. இன்னொரு கையில் உடுக்கு விளங்குகின்றது. பெருமானுடைய சடாமுடியிற் "கங்கையும் திங்களும் பாம்பும் கடுக்கையும், கொங்குதவழ் ஆத்தியும் வன்னியும் எருக்கும் குளிர்ந்த அறுகம்புல்லும் மேல்கோமளப் புலவோர் இறைக்கும் மந்தாரமும் கொய்துதவர் தூற்றும் அலரும்" விளங்குகின்றன. குழந்தை முருகன் மத்தளம் போன்ற உடுக்கையடித்துச் சிறுபறை முழக்கம் செய்கின்ருன். கங்கைநீரை வாயிலும் கையிலும் முகந்து, இறைவர் கரத்தில் எரியும் அனலின்மேற் சொரிந்து அதனை அவித்து — அணைத்துவிடுகின்ருன். பாம்பின் வாயிலே பாலச்சந்திரனைப் பிடித்து வைக்கின்ருன். பசியால் மிகவாடும் மான் கன்றுக்குச் சடாமுடியிற் கிடக்கும் அறுகம் புல்லை அள்ளியெடுத்துப் பசிதீர அருத்துகின்ருன். பின்னர்ப் "பவளமால்வரையில் நிலவெறிப்பதுபோற் பரந்த திருவெண்ணீற்றின் அழகுபொலியும் இறைவர் திருமேனியில் சண்ணித்த நீறு துகளாகி மேலெழ ஆடிஓடி விளையாடுகின்ருன். தீராத விளையாட்டுக் குழந்தை முருகனது திருமேனியும் நீறுபூத்துவிடுகின்றது. இறைவன் சடைக்காட்டையடைந்து, கங்கையிற் குதித்து நீந்தி நெடுநேரம் ஆடுகின்ருன். அவன் திருவிழிகள் சிவந்துவிடுகின்றன. தம் அருமைக் குழந்தையின் குறும்பு விளையாட்டுக்களைக் கண்ணுரக்கண்டு அனுபவித்து அம்மையும் அப்பனும் பெரிதும் மகிழ்கின்றனர். கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐம்புல இன்பத்தையும் அடைகின்றனர்.

இந்த நிகழ்ச்சிகளைக் குமரகுருபர சுவாமிகள் தம் கற்பனைக் கண்ணுற் கண்டு அழகிய சொல்லோவியமாகப் புனைந்து காட்டுகின்ருர்.

''மழவுமுதிர் கனிவாய்ப் பசுந்தேறல் வெண்டுகில்
மடித்தலம் நனைப்பஅம்மை
மணிவயிறு குளிரத் தவழ்ந்தேறி யெம்பிரான்
மார்பினிற் குரவையாடி
முழவுமுதிர் துடியினிற் சிறுபறை முழக்கியனல்
மோலிநீர் பெய்தவித்து
முளைமதியை நெளியரவின் வாய்மடுத் திளமானின்
முதுபசிக் கறுகருத்தி
விழவுமுதிர் செம்மேனி வெண்ணீறு தூளெழ
மிகப்புழுதி யாட்டயர்ந்து
விரிசடைக் காட்டினின் றிருவிழிகள் சேப்பமுழு
வெள்ளநீர்த் துளையமாடிக்
குழவுமுதிர் செவ்விப் பெருங்களி வரச்சிறு
குறும்புசெய் தவன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமரகுரு பரன்வருகவே''

கந்தபுரி வைத்தீசுவரன் கோயிலில் உள்ளது. அங்கு எழுந்தருளியிருக்கும் முத்துக்குமாரசுவாமி பேரில் குமரகுருபர சுவாமிகள் பாடியருளிய பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத்தின் வருகைப்பருவத்திலுள்ளது இச்செய்யுள்.

## நல்வழிகாட்டும் நன் மொழி

உன் கைகளில் எண்ணெயைத் தடவிக்கொண்டு பலாப் பழத்தை அரிந்தால் அதன் பால் கைகளில் ஒட்டாது; பத்தியென்னும் எண்ணெயை உடல் முழுவதும் பூசிக் கொண்டால் மூவாசைச் சுழலில் அகப்படாமல் வாழலாம்.

— பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்

உ

# முதல் தெய்வ மூர்த்தம்

திரு. க. சி. குலரத்தினம் அவர்கள்

கௌரவ ஆசிரியர், மில்க்வைற் செய்தி, யாழ்ப்பாணம்.

நாம் வணங்கும் தெய்வ மூர்த்தங்களுள் முதலில் வணங்கும் தெய்வ மூர்த்தம் விநாயக மூர்த்தமாகும். அது இறைவனின் ஒலிவடிவம். அது முதல்வடிவம். ஓங்காரத்திருவுருவம். விநாயகர் ஓங்காரத் திருவுருவமெனவே அவரின் அர்ச்சனைத் திருநாமம் ஓம் ஸ்ரீ பிரணவானன தேவாய நம என ஒலிக்கின்றது, அவர் பிரணவ சொரூபி. பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் என்பது ஒரு காப்புப்பாடலின் உயிரான பகுதி. பிரணவத்தில் எல்லா மந்திரங்களும் அடங்கும். ஓம் என்னும் பிரணவமே வித்தக விநாயகரின் விமலசொரூபம். அவரின் ஒடிந்த கொம்பிலிருந்து பிரணவச் சுழி ஆரம்பிக்கிறது.

ஓங்கார உருவத்தை உள்ளபடி உணர்த்துவது யானை வடிவம். சிலப்பதிகாரத்திற் கூறப்பெறும் வெள்ளானைக் கோட்டம் விநாயகராலயம் எனக் கருதத்தக்கது. இந்திரனுக்கு வச்சிரக் கோட்டம் வேறுயிருந்ததும் நோக்கற்பாலது. விநாயகப்பெருமானின் திருவுருவம் தத்துவமயமானது. அவரின் திருமுகம், முக்கண், மாலை முதலியன சிவபெருமானைக் குறிப்பன. அவர் தரித்துள்ள பாசம் படைத்தலையும், ஒற்றைக் கொம்பு காத்தலையும், அங்குசம் அழித்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் அருளலையும் குறிப்பனவாகும். விலங்குத் தலை, மனிதவடிவம், தேவர்திருவடி சிறப்பானவை. அவர் ஆணும் பெண்ணுமான அம்மையப்பர் வடிவினர்.

விநாயகப் பெருமானை எல்லா மதத்தினரும் தத்தம் திருக்கோயில்களில் எழுந்தருளச்செய்து வணங்குவர். விஷ்ணுகோயில்களில் விஷ்வக்சேனர், சேனை முதலியார் முதலிய திருநாமங்களால் அவரைப் போற்றுவர். சமணப்பள்ளி, புத்தவிகாரம் முதலிய இடங்களிலும் விநாயகருக்கு வழிபாடு உண்டு. கணே தெய்யோ எனச் சிங்களப் பௌத்தர் வணங்குவர்.

விநாயகப் பெருமானை முதலில் வணங்குவதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலில் இவரை வணங்கி, இவர் துணைகொண்டு பிற தெய்வ மூர்த்தங்களை வணங்க இவர் உதவியாயிருப்பர். 'கணபதி பூசை கைமேற்பலன்' என்பதும் இவர் அருள்புரியும் பாங்கினைக் குறிப்பதாகும். திருக்கோயில்களில் முதலில் விநாயகர் பூசை நடைபெறுவதும் கருதற்பாலது.

விநாயகப் பெருமானின் அர்ச்சனை மந்திரங்களின் பொழிப்பு அவர்தம் பரத்துவத்தைக் காட்டுகிறது. அவர் எடுத்த கருமத்தை இடையூறின்றி நிறைவேற்றித் தருபவர், நல்லவர் கூட்டத்துக்குத் தலைவர், விரும்பியதைத் தருபவர், பிள்ளைகளுக்கு அன்பன், யோகியர் இதயத்தில் இருப்பவர், கல்விக்கு அரசர், அறியாமையை நீக்குபவர், நூலாக்குபவர், நூற்பொருளாயிருப்பவர், அவர் திருவருள் கிடைக்கின் கலைஞானம் எளிதில் கைவரும் சரக்காகும்.

சித்தி விநாயக சரணம் சரணம் என்று ஆராமையோடு வழிபடுமவர்களை அவர் அருள் சுரந்து காத்தருள் செய்கிறார். அடியார்களுக்கு எல்லா நலன்களும் உண்டாகும், தீமைகள் நீங்கும், எண்ணிய எண்ணங்கள் எண்ணியபடியே கைகூடும், சிறந்த கல்வியும் ஞானமும் கூடும். வீடுபேறும் சித்திக்கும். விநாயகப்பெருமானை வழிபட்டு உய்தி பெற்ற நம்பியாண்டார் நம்பிகள் நம்மையும் வழிபட்டு உய்திபெறுமாறு வழிப்படுத்துகிறார்.

''விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கு மண்ணிற்கு நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து''

விநாயகப்பெருமானை மெய்யன்போடு வணங்கி இட்டசித்தி பெற்றவர்கள் பலர். சண்முகர், விஷ்ணு, பிரமன், தக்கன், ஆதிசேடன், இந்திரன், மன்மதன், சந்திரன், அகத்தியர், நளன், இராவணன், மெய்கண்டார் முதலானோர் குறிப்பிடத் தக்க அருளாளராவர். விநாயகப்பெருமானை நினைத்தும், வாழ்த்தியும், வழிபட்டும் நாம் இம்மை மறுமை வீடுபெற்றுப் பயனடையலாம் என்பர்.

விநாயகர் தமக்குமேல் நாயகர் இல்லாத தலைவர். அவர் சுதந்திரமுள்ளவர். தன்வயத்தனவர். அவர் அநாயகர். ஏகநாயகர். அநாதி கைகநாயகம் என்று சுலோகம் அழகாகப் போற்றும் அவர் உயிர்களை நடத்துபவர், உய்திதருபவர். அவருக்குப் பாலகணபதி முதல் ஊர்த்துவ கணபதி ஈறுகப் பதினறு வகையான மூர்த்தி பேதங்கள் உண்டு. அவர் மொழியின் மறைமுதல் எழுத்தின் முதற்சுழி அவரைக் குறிக்கும். அது பிள்ளையார் சுழி. ஓங்காரத்தின் சுருக்கம்.

விநாயக வணக்கம் உலகமெங்கும் வியாபகமானது. இலங்கையில் கிராமங்கள்தோறும் அவருக்கு ஆலயங்கள் உள்ளன. சர்வ காரியங்களிலும் சித்தி பெறுவதற்கு விநாயக வணக்கம் உதவியானது. விநாயகரை வணங்குவோருக்கு இலக்குமி கடாட்சம் நிறையவுண்டு. வீடுகளில் சாமியறை, பூசையறை என வழங்கும் இடத்தில் முதலில் விநாயகப் பெருமானையும் அருகில் இலக்குமியையும் வைப்பதன் நோக்கமும் அதுவேயாகும்.

தங்களுக்கொரு பிள்ளை பிறக்காவிடிலோ அல்லது அதிக செல்வம் கிடையாவிடிலோ பெரும்பாலான மனிதர் ஆறுய் கண்ணீர் கொட்டுகிறார்கள். ஆனால், கடவுளைக் காணும் பாக்கியம் பெறவில்லை என்றாவது, அவனிடம் போதிய பத்தி கொள்ளவில்லை என்றாவது ஒரு துளி கண்ணீர் விடுபவர் எவருமில்லை.

— பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

கோபிக்கும் சுபாவம் உள்ளவனை வேலைக்காரனும், சினேகிதனும், சகோதரனும், மனையாளும் பெற்ற புத்திரனும் விட்டுவிலகிப் போவார்கள். தருமமும் சத்தியமும் எல்லாமே விட்டுவிலகிப் போகும்.

— வியாச பகவான்

உ

சிவமயம்

# சிவஞானபோதம்

திரு. மு. இளையதம்பி அவர்கள் B. A. (Lond.)

( ஆசிரியர்: முப்பொருள் உண்மை விளக்கம் ).

சிவஞானபோதம் என்று கூறும்போது பதிநான்கு சித்தாந்த சாத்திரங்களின் முதனூலாகிய சிவஞானபோதமே நினைவுக்கு வருகிறது. ஆனால் இத்தொடரின் பொருளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மணிவாசகருடைய பக்குவ நிலையை அறிந்து அவரை ஆட்கொள்ளத் திருவுளங் கொண்டு குருமூர்த்தியாய்த் திருப்பெருந்துறையில் எழுந்தருளிய சிவபெருமானுடைய திருக்கரத்தில் காணப்பட்ட நூல் யாதென வினவிய வாதவூரருக்கு அது 'பொய்ம்மையில்லாச் சிவஞானபோதமென்றார்.' அதற்குச் சிவம் ஏது, ஞானம் ஏது, போதம் ஏது? என்று வினவிய அவ்வடியாருக்கு,

'நின்றசிவ மொன்றதனைத் தேர்தல் ஞானம்
நிகழ்போதந் தேர்ந்தனைத் தெளிதலாம்'

என்றார் குருமூர்த்தியாகிய சிவபெருமான்.

கடவுள் ஒருவரே உளர். அவரே முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானவர். ஒப்பற்றவன் என்று சொல்லப்படும் ஒரே கடவுளாகையால் அவரை 'ஒருவனென்னுமொருவன் காண்க' என்று திருவாசகங் கூறுகிறது. ஒப்பின்மை கூறப்படுவதிலிருந்து ஒரு பொருளின் உயர்வின் பெருமை புலப்படுகிறது. 'சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க, சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க' என்பதனால் சொல் மாத்திரமன்றி மனமும் சென்று எட்ட இயலாத தூரத்திலுள்ளவன் என்பதை அறிந்து கொள்ளலாம். அன்றி, சொல் தோன்றுவதற்கு முன்னே உள்ளவன் என்று கருதுவதோடு வாக்கிற்கும் காயத்திற்கும் அதீதனெனவும் கொள்ளப்படும், விரிந்த உலகம் எல்லாம் பரந்து காணப்படுபவன். அணுவுக்கு அணுவாய் மகத்திற்கு மகத்தாய் வியக்கத்தக்க நுட்பமுடையோன். இயங்கும்பொருள், இயங்காப்பொருள் எல்லாவற்றினும் கலந்து அவையேயாய் நிற்பதனால் 'நிற்பதும் செல்வதும் ஆனோன் காண்க' என்ற திருவாசகக் கூற்றினாலும் 'அவையேதானாய்' என்ற சிவஞானபோதம் இரண்டாம் சூத்திரமும் 'அவனே தானேயாகிய' என்ற பத்தாம் சூத்திரமும் முறையே பெத்தநிலையில் முதல்வன் உயிராய் ஒற்றுமைப்பட்டு நிற்றலும், முத்திநிலையில் உயிர் சிவமாய் ஒற்றுமைப்பட்டு நிற்றலும் அத்துவித சம்பந்தமாகையால் ஒருவன் என்ற இலக்கணம் அவனுக்கே உரியதாகும். உலக உயிர்களோடு கலந்து அத்துவிதமாய் இருந்தும் அவையெல்லாம் தம்முள் அடங்க அவற்றைக் கடந்தும் அவற்றில் தோயாமல் இருப்பதும் சிவமாம் தன்மையாம். 'இருமையின் ஒருமையும், ஒருமையின் பெருமையும்' என்று ஞான சம்பந்தர் கூறுவதைக் கவனிக்கலாம். சச்சிதானந்த சொரூபத் தன்மையே ஒருமையின் பெருமை என்பதாம். 'அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க' என்பதனால் அவன் ஊழி நிகழ்ச்சியையும் அதன் முடிவையும் கண்டவனாவான். சங்கார காலத்துச் சங்கரித்தலைச் செய்வோனாய் அதன்பின் தானே எஞ்சிநின்றமையால் ஒருவனாகத் திகழ்கின்றான்.

இறைவன் நிருவிகற்பமாய் அல்லாது சவிகற்பமாய் உணர்தற்கு அரியவனாவான். ஒரு பொருளை இன்னதென்று சிறப்பாக அறியாது பொதுவாக அறிதல் நிர்விகற்பக் காட்சியாகும். நிர்விகற்பக் காட்சி நிகழ்ந்தபின் மனம், புத்தி, அகங்காரம் என்ற அகக்கருவிகள்மூலம் சிறப்புக்காட்சி உண்டாகின்றது. காணும் ஒரு பொருளைப் பெயர், இனம், குணம், செயல், உடைமை என்னும் ஐந்தனுள் ஒன்றாலும் பலவற்றாலும் சிறப்பித்து உணரும் உணர்வே சவிகற்ப காட்சியாகும். 'இந்நிறத்தன். இவ்வண்ணத்தன், இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே' என்ற அப்பர் தேவாரம் சவிகற்பமாய் உணரமுடியாதென்பதை வற்புறுத்துகின்றது. மேலும் இறைவன் நித்த முத்த சுத்த சித்துப் பொருளாவான். எனவே இயல்பாகிய பாசம் நீங்கிய ஞானமாகிய சத்தி வடிவத்தைப் பொருந்தி நின்று பிரபஞ்சம் எல்லாவற்றையும் காரியப்படுத்தும் இயல்புடையன். இதனையே சித்தியார்,

''..................... தான்முத லீறுமாகி
மருவிடு மநாதிமுத்த சித்துரு மன்னிநின்றே''

என்று கூறுகிறது.

சூரியனுடைய சந்நிதானத்திற் சூரியகாந்தக் கல்லிலிருந்து நெருப்புத் தோன்றலும், தாமரை

மலர்தலும், நீர் வற்றலும் ஆகிய முத்தொழிலும் நடைபெறினும் அவற்றுற் சூரியன் விகாரம் எய்தாது நிற்றல்போல முதல்வனது சந்நிதானத்திலே தோற்றம், நிலை, இறுதி என்னும் முத்தொழிலும் நடைபெறினும் அவற்றால் முதல்வன் விகாரம் எய்தாது நிற்பன்.

இனி, இரண்டாவது கேள்வியை ஆராய்தல் வேண்டும். ஒப்புவமை இல்லாத அவ்விறைவனைப் பற்றி அறிதல் ஞானமாகும். அவனுடைய அருள் வழிநின்றே அந்த மேலான ஞானத்தை அடையலாம். ஞானம் அபரஞானம், பரஞானம் என இருவகைப்படும். அபரஞானம் கருவிகளைப்பற்றி நின்று காட்சி, அநுமானம், உரை என்பவைகள் மூலம் அறிதலாம், இது சுட்டுணர்வினுல் ஏற்படுவதாகையால் அபரஞானமாகும். நூல்களைக் கேட்டலால் பெறும் சாத்திரஞானமும் நால்வகை வாக்கைப்பற்றி நிகழ்வதால் ஐயப்பாடுகளைத் தருவதால் அது மயக்கத்தைத்தரும் அபரஞானமாகும். காண்பான், காட்சி, காட்சிப்பொருள் ஆகியவைகளினுல் ஏற்படும் ஞானமும் தற்போதம் நீங்காத நிலையிலுள்ளதாலும் மனோபாவனையோடு கூடியதாலும் அதுவும் அபரஞானமாகும், அநுபூதி ஞானமன்று. ஆகையால் திருவருளைப் பெறுவதற்குரிய நெறியை உணர்த்தும் சிவாகமங்கள் முதலியனவும் அபரஞானத்தைக் கொடுக்கின்றன. அபரஞானத்தினுல் சுத்த வித்தை முதலிய புவனங்களிற் சாலோக முதலிய அபர முத்திப் பதத்தைப் பெறலாம். இவையனைத்திற்கும் மேலாய் உள்ளது பரஞானம். இப்பரஞானத்தைத் திருவருளின் துணைகொண்டே அறியலாம். பரஞானத்தாற் சிவத்தை நோக்கி அன்புசெய்வோர் சிவனையே உணர்ந்து கொண்டு நிற்பரன்றி பிராரத்தவினை தாக்குதற்குரிய ஏனைய பதார்த்தங்களைக் காணமாட்டார், பரஞானம்பெற்ற சீவன்முக்தர் சிவமொன்றையே காண்பவர்களாய் சிவாநுபூதியிலே திளைத்துக் காணப்படுவர். பரஞானம் பரமுத்தியை அளிக்கும், இதனைச் சிவஞானசித்தியாரிலுள்ள பின்வரும் திருப்பா விளக்குகிறது.

''பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞான மஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞானம் வயிந்தவத்தின் கலக்கம்
தருஞானம் போகஞா திருஞான ஞேயம்
தங்கியஞா னஞ்சங்கற் பனைஞான மாகும்
திருஞான மிவையெல்லாங் கடந்தசிவ ஞான
மாதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்''

அறிவு, ஆராய்ச்சியாலும், அநுபவத்தாலும ஏற்படுகிறது. ஆகமங்களின் ஆராய்ச்சியின்மூலம் பெற்றுக்கொள்ளும் அறிவு அநுபூதியில் வைத்துத் தெளிவடைதலே போதமாகும். ஞானம் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என நால்வகைப் படும். நால்வகை வாக்கின் பகுதியாகிய வேத சாத்திரங்களும் புராணங்களும் ஏனைய கலைஞானங்களும் ஆகிய சொற்பிரபஞ்சம் மூலமும், பிருதிவி முதல் நாதம் ஈருகிய 36 தத்துவங்களாகிய பொருட்பிரபஞ்சம்மூலமும் ஆன்மாவின்கண் நிகழ்வது பாசஞானம். ஆன்மபோதத்தால் வருவது பசுஞானம். பாசஞானம், பசுஞானத்தால் சிவனை அறியமுடியாது, திருவருளைக் கூடிச் சிவனை அறிவது பதிஞானமாகும். அதனுலேயே 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்று கூறப்படுகிறது, சிவப்பிரகாசத்திலுள்ள பின்வரும் திருப்பாட்டு இதனை விளக்குகிறது.

''பாசமா ஞானத் தாலும் படர்பசு ஞானத் தாலும்
ஈசனை யறிய வொண்ணு திறையருண் ஞான நண்ணித்
தேசுறு மதனுன் முன்னைச் சிற்றறி வொழிந்து சேர்ந்து
நேசமோ டுயர் பரத்து நிற்பது ஞான நிட்டை''

கருவிகளைத் திருவருளில் ஒடுக்கினுவன்றி அவை ஒடுங்கா. ஆன்மபோதம் பகற்காலத்து எரியும் விளக்குப்போலத் தொழிற்படாதநிலையில் ஆன்மா சிவானுபூதியைப் பெறக்கூடிய நிலையை எய்தும். இறைவன் ஆன்மாக்களோடு அத்துவிதமாய்க் கலந்துநின்று அறிவித்துத் துணைசெய்யும் பெருங்கருணையை விளக்குதல் ஆன்ம அறிவின் தொழிலாம், இறைவனிடத்துச் செலுத்தும் அன்பு அதிகரித்தல் இச்சையின் தொழிலாம். அவ்வன்பு மிகுதியால் திருவடியாகிய சிவானந்தத்தை அனுபவித்தல் கிரியையின் தொழிலாம். இவ்விதமாக ஆன்மாவின் அறிவு இச்சை செயல்கள் தொழிற்படும். இது தெளிதல் என்னும் ஞானத்தின் முறையும் அதனிடத்து நிகழும் அனுபவமுமாம்.

நீர்கொழும்பு, ஸ்ரீ சித்திவிநாயகர்

# திருவிரட்டை மணிமாலை

பண்டிதர் க. மயில்வாகனனூர்

திருச்சிற்றம்பலம்

சித்தி விநாயகனைச் சிந்தைக்கான் நின்றுலவும்
அத்தி முகனையென் ஆரமிர்தை—நித்தலும்
ஏத்திப் புகழ்ந்தக்கால் எப்பயனும் எய்திடலாம்
காத்தருளும் அன்னோன் கழல். (1)

காத்தருள் செய்யும் ஒருகோட்
டிருசெவிக் கற்பகனுர்
ஏத்து நலம்பயில் நீர்கொழும்
பெய்தி இனிதமர்ந்தார்
தோத்திர மாயின சொல்லிக்
கணேச நமவெனவே
நாத்தழும் பேறிட வாழ்த்துமின்
நாளும் நவையிலேயே. (2)

இலையென்று நொந்தார்க் கிருந்துணையே அன்னை
மலைமங்கை கொஞ்சு மருந்தே—அலைமோது
நீர்கொழும்பூர் நின்மலா நீள்துயர் வாட்டுதையா
சீரோ நினக்கிதுதான் செப்பு' (3)

செப்பற் கரிய திருவுடை
மாயனுந் தேவருமற்
றெப்பக் கழும்புக்கு நின்றெந்
தாயிரங்கி டென்றிரப்பத்
தப்பற் கரிய வளநீர்
கொழும்பூரில் தங்கியவா
இப்பக் கழும்கடைக் கண்வைத்
தருளிந்த ஏழையெற்கே. (4)

ஏழையெம் ஆசைச் சுறவுபொர இன்னலுற்று
வாழவழி காண்கிலேம் வள்ளலே—நாளுநின்
சேவடியே போற்றுமுயர் செல்வந்தா நீர்கொழும்புக்
காவலனே உள்ளங் கனிந்து. (5)

கனிதனைக் கொண்டே கறைமிடற்
றையனோர் ஆடலெண்ணி
இனியுல கீதை முதல்வலம்
வந்தாருக் கீவனென
நனிமகிழ் வெய்திப் பயந்தார்
உலகென நாட்டிவைத்தீர்
தனிமுத லேநீர் கொழும்பூர்
மகிழ்ந்தீர் தவம்பெரிதே (6)

தவமே புரிகிலன் தாள்பணியேன் எந்தாய்
அவமே புரிந்தேன் அலுத்தே—சிவமேய
வித்தகா நீர்கொழும்பூர் வேழ முகப்பொருளே
உத்தமர் ஏன்றோ உரை. (7)

உரைபயில் தீங்குரற் பூவாய்
உரைப்பேன் உறுதியெண்ணில்
வரைமருள் வான்பிசிர் சிந்திட
எங்கணும் வங்கமலி
கரைபயில் நீர்கொழும் பூருறை
கற்பக வாரணத்தின்
குரைகழல் வான்புகழ் ஏத்திநின்
றேதினங் கூவுதியே. (8)

கூவிப் பணிகொண்டென் கோதகற்றி நாளெல்லாம்
சேவித் துனைப்பாடச் செந்தமிழ்தா—மேவி
அலைமோது நீர்கொழும்பூர் அத்தனே தேடின்
இலைநும்போற் றெய்வம் இனி. (9)

தெய்வம் பலபல சொல்லித்
திரிந்தினி ஆவதென்னே
ஐயன் கயமுகன் ஆர்த்தெழு
தீவினை வேர்களைந்து
மெய்யே அருள்செயும் வேட்கையில்
நீர்கொழும் பூரிருந்தான்
கைமேற் பலனுண்டு கண்டீர்
புகுந்து வணங்குமினே. (10)

வணங்கத் தமிழ்தந்தான் வாரணத் தெம்மான்
பிணங்கும் அசுரனையும் பேணி—இணங்கவே
ஊர்தி எனக்கொண்டான் உற்றிருந்தான்
சீர்புகழ்ந்து பாடீர் தினம். [நீர்கொழும்பிற்

தினமும் நினைந்து தொழுவார்க்
கருளுந் திருவுடையான்
புனமுங் கிரியின் குகையுந்
திரியும் புழைக்கரத்தான்
அனமென் நடைபயில் அன்னையுந்
தானும் அருள்புரியும்
தனமே மிகுத்துயர் நீர்கொழும்
பூர்வந்து தாழ்ந்தெழுமே. (12)

நீர்கொழும் பூருறையும் நின்மலா போற்றியுயர்
ஏரம்பா தொண்டர்க் கிடையூறு—நேராமே
காக்குமிலம் போதரனே கண்ணனுர் சாபம்முன்
நீக்கியவா நீயே துணை. (13)

துணையடி பேர்த்தென் துயரின்
குலங்கெடச் சோதிவிஞ்ச
இணையேதும் இல்லாத பூந்துகில்
ஆடை இடையிலங்கப்
பிணிகெடத் தாழ்செவி வீசிச்
சிந்தூரம் பிறங்கிடவே
அணிமுக மீதில் நகைகாட்டி
வந்திங் கருள்வ தென்றே. (14)

என்றேயென் அஞ்ஞானம் ஏகும் மனச்சுமைகள்
என்றே அகலுங்காண் எந்தையே—அன்றுமுதல்
நின்ருட் கடிமையன்ரே நீர்கொழும் பூருவந்தாய்
நன்ரேநின் செய்கை நவில். (15)

நவிலத் தகுமோமுன் நாடிப்
பணிந்த மகபதிக்காய்ப்
பவளத் திரள்சிந்து பொன்னி
நதியைப் படரவைத்தாய்
துவளும் அடியர் துயர்தீர்க்க
நீர்கொழும் பூரிருந்தாய்
இவனெம் அடித்தொண் டனென்ன
திகழ்ந்திங் கிருப்பதென்னே. (16)

என்னே கருணை இறையே பெரும்புவித்தோர்
முன்னே இயங்க முறைசெய்தாய்—இந்நாள்
எக்கருமஞ் செய்போதும் ஏத்தியெழ நீர்கொழும்பூர்
முக்கண்ணு போந்தருள்வாய் முன். ((17)

முன்னன்னை யாயெனை ஈன்றே
வளர்த்துமுத் தம்மளித்தாய்
பின்னெந்தை போல்நின்று சீலம்
பெரிதென்னப் பேணவைத்தாய்
மன்னும் குருவடி வாய்வந்து
ஞானம் வழங்குகின்றாய்
கன்னெஞ் சமுங்குழை நீர்கொழும்
பூருறை கற்பகமே. (18)

கற்பகனே போற்றி கணநாதா நீர்கொழும்புச்
சிற்பரனே போற்றி திருவடிதான்—அற்புதனே
செந்தமிழ் மாலைகொடு சேவிக்க என்றென்றும்
தந்தாள் திருவருளே தான். (19)

தானெனை முன்னே படைத்த
தத்துவனை ஐங்கரனை
வானுட ரும்மறி யாத
மாட்சியனை நீர்கொழும்பிற்
கோனய் விகட நடக்கூத்
துகந்தருள் கொற்றவனைத்
தேனன சித்தி விநாய
கனைத்தினம் வாழ்த்துமினே. (20)

நம் மனத்துள் நிறைந்து விளங்கும் ஒளிப்பிழம்பான சிவ பெருமானை உடலைவிட்டு உயிர் பிரியுமளவும் நாடோறும் தொழுக; அங்ஙனம் தொழாவிடில் நமது ஐந்து இந்திரியங் களும் கட்டற்ற யானையைப்போல் கண்டபடி திரியும்.

— திருமூலதேவர்

# சமயமும் இளைஞர்களும்

திரு. ச. மெய்யப்பன் அவர்கள் எம். ஏ.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

சமயங்கள் மனித சமுதாயத்தில் செழித்து வளர்தற்குக் காரணம் என்ன? நிதியின் குவைகளைக் கொட்டிக் குவித்தாலும், நிலவிலே சென்று குடியேறினாலும் மனித மனம் ஏதோ ஒரு குறைபாட்டைக் கொண்டதாகவே அமைந்துள்ளது. தனக்கு எட்டாத ஒன்றைத் தாவித்தொடத் துடிக்கின்றது. தெளிவாகச் சொன்னால் மனநிறைவை நாடி மனித நெஞ்சம் முயற்சிக் கரங்களை நீட்டிக் கொண்டிருக்கின்றது. ''எல்லையொன் றின்மை எனும் பொருளதனை'' எட்டிப் பிடிக்கும் அந்த இயற்கை நாட்டமே சமயம்; மன நிறைவையும் அமைதியையும் நாடிப் பாயும் இன்ப நினைவே சமயம். எனவேதான் ''ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை'' என்று அடியாரும் பாடினர்.

சமயம் எவ்வாறு மனித வாழ்வுக்குப் பயன் தருகின்றது? இன்பமே உயிர்களின் நாட்டம், அந்த இன்பத்தை அடையும் ஆர்வத்தினால் தீமைகளையும் மனிதன் செய்ய நேர்ந்துவிடுகின்றது. அத்தகைய சூழ்நிலையில் சமய உணர்வு மனிதனின் சிந்தனைக் கதவுகளைத் திறந்து கீழ்மைக் குப்பைகளை அகற்றி எறிகின்றது. மனிதனுக்கும் மேல் உயர் பொருள் ஒன்று உண்டு என்பதையும் அறமும் அன்புமே இன்பத்தை அடையும் நெறிகள் என்பதையும் சமயம் எடுத்துக் காட்டுகின்றது. அதுமட்டுமின்றி இழைக்கும் தீயசெயல்களினால் பழியும் பாவமும் குவிகின்றன என்றும் அந்தப் பாவத்தின் விடுதலை, வருந்தி இறைவழிபாடு செய்வதிலும், திருந்தி வாழ்வதிலுமே அமைந்துள்ளது என்றும் சமயம் இடித்துக் கூறுகின்றது. இந்நாள் உளவியல் அறிஞர்களும் குற்ற உணர்ச்சிகள் குறைவதற்குச் சமயம் பெருந்துணையாகும் என்றே கருதுகின்றனர்.

''பூமியிலே கண்ட மைந்து மதங்கள் கோடி'' என்று கவியரசர் பாரதியார் பாடினார். கொள்கையினால், குறிகளினால், கோயில் அமைப்புக்களினால் சமயங்கள் பல்கிப் பெருகிக் கிடக்கின்றன. வழிகள் பலவாயினும் இலக்கு ஒன்றே; விளக்குகள் பலவாயினும் ஒளி ஒன்றே; நதித்திரள் பலவாயினும் கூடும் வாரிதி ஒன்றே; அதுபோலவே பல பெருஞ் சமயம் சொல்லும் பொருளும் ஒன்றே. ஆயினும் சமயம் திசை மாறிச் சென்ற நிலையை வரலாறு காட்டுகின்றது. ''என் தெய்வம் உன் தெய்வம் என்று எதிர்வழக்கிட்டு'' நின்ற சமயங்களின் காட்சியையும் ''ஒன்றே பொருளெனின் வேறென்றும் அன்றெனின் ஆமென்றும்'' போராடிய வல்லாளர்களின் வாதங்களையும் வெறும் சமயக் குறிகளையே சமயநெறிகள் என்று பூசலிட்டு நின்றவர்களின் வரலாறு தெள்ளத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றது. அன்பை அடிப்படையாகக் கொண்ட சமயம் வன்முறையில் ஈடுபடும் பொழுதெல்லாம் மெய்ஞ்ஞானியர்கள் தோன்றிச் சமயத்தின் உள்ளார்ந்த உண்மையினை வலியுறுத்தி வந்துள்ளனர்.

உயிர்க்குயிராய்த் தழைத்த உண்மை இறைவனை அறிந்த தாயுமானவரும், இன்பத் திருவாசகத்தில் ஊன் கலந்து உயிர் கலந்த இராமலிங்கரும் காட்டிய காழ்ப்பற்ற அன்புமேவிய பொதுமை நெறியே உலகை உய்விக்கும் நன்னெறி ஆகும். இந்தப் பொதுமை நெறியே சமுதாய நல்வாழ்வுக்கு காலந்தோறும் ஒளியூட்டும் மணி விளக்கம் எனலாம்.

சமய ஞானிகளின் பெருவாழ்வு நமக்குக் கற்றுத்தரும் பாடம் என்ன? தன்னை மறந்து காதல், தன்னை மறந்து தொண்டு, தன்னை மறந்த தியாகம் ஆகிய பண்புகளை நாம் தனித்தனியாக மனிதர்களிடம் காணுகின்றோம். இத்தனையும் ஒன்றுகூடித் தன்னை மறந்த பத்தியாக மலர்ந்திருப்பதைத்தான் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிய அடியார்களின் வாழ்வு நமக்குச் சொல்கின்றது. முதிர்ஞானச் செல்வர்களாகிய திருநாவுக்கரசரும் மாணிக்கவாசகரும் வாழ்ந்த வாழ்க்கை இக்கருத்தினை நமக்குத் திறம்பட விளக்குகின்றது.

இவ்விரு மெய்யடியார்கள் வாழ்வினையும் வாக்கினையும் உற்றுநோக்குவார்க்கு ஓர் உண்மை புலனாகிறது. புனிதத்தைத் தேடிப் புறப்பட்ட பயணத்தில் ஒவ்வோர் அணுவையும் போராடிப்

போராடியே அவர்கள் கடந்தனர். அமைச்சுத் தொழிலும் அரண்மனைச் சுவர்க்க போகங்களும் தரமுடியாத குறைவிலா நிறைவினை எய்த மாணிக்கவாசகர் உள்ளம் பட்ட பாட்டினை, அவர் பாட்டெல்லாம் நமக்குக் காட்டுகின்றது, அழுது அடியடைந்து அனுபூதிபெற்ற பக்திக் கடலான மாணிக்கவாசகரே இறைவனைப் பார்த்து ''என்னை அடையாளம் கண்டுகொள்'' என்று விம்மியழும் துயர்க் குரலைக் கேட்கும்போது நம் நெஞ்சம் சிலிர்க்கின்றது. மனிதரில் புனிதரான மாணிக்க வாசகர் பல நிலைகளில் உழன்று உழன்று தம் குற்றங்களையெல்லாம் ஓலமிட்டுரைத்துக் கண்ணீரில் கழுவி உய்தி பெறுகின்றார்.

தத்துவங்களிலும் தருக்க நெறிகளிலும் புறச் சமயத்திலும் புகுந்து இறைவனைத் தேடியடைய முயன்றார் திருநாவுக்கரசுப் பெருந்தையார். அதற்காக அவர் மேற்கொண்ட தொண்டு நெறித் தூய்மையைக் காணுகின்றோம். அருட்பேரொளியைக் காணத் துடித்த துடிப்பினை அவர் பாக்களில் கேட்கின்றோம். நிலையற்ற நினைவின் அலைகளினால் உந்தப்பட்டு, இறைவன் தன்னை யாட்கொள்ளும் பக்குவம் தனக்கு வரவில்லையோ என்று ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் தன்னைப் பரிசோதனைக் கருவியாக்கிக்கொண்டு வருந்தும் குரல் நம்மை நெகிழ்விக்கின்றது. தன்னைப் புனிதப் படுத்திக் கொள்ளும் சோதனை நெறியினாலும் தொண்டு வாழ்க்கையினாலும் இறைவனை நெருங்க முடியும் என்று கோடிட்டுக் காட்டுகின்றது இவ் வடியார்களின் வாழ்க்கை.

மண்ணில் நல்லவண்ணம் வாழக் கடவுள் நம்பிக்கை வேண்டும். தெய்வம் என்னும் சிந்தை உண்டாகுமேயானால் மனிதகுலம் உய்வது உறுதி. சமயங்களின் உட்கிடைதான் மிகவும் இன்றியமையாதது.

தெய்வம் பல சொல்லிப் பகைமையை வளர்ப்பது அறிவுடைமையாகாது. இந்தத் தலைமுறையின் தலைசிறந்த சிந்தனையாளரான யோகி அரவிந்தர் கூறியவண்ணம் விலங்கு நிலையிலிருந்து மனிதநிலை பெற்ற நாம் இறையுணர்வினால் மனித நிலையிலிருந்து தெய்வநிலை பெற்று உயரலாம். மண்ணை நோக்கிக் குனியாமல் விண்ணை நோக்கி மேலே மேலே உயரச் சொல்வது அரவிந்தர் தத்துவம்.

சமய வாழ்வு ஊரறிய உலகறியப் பிறர் பாராட்ட வாழும் வாழ்வன்று. ஒவ்வொரு உள்ளத்தின் புனிதப் பயணத்தின் முன்னேற்றமே சமயம். இச்சமயம் தமிழினத்தைப் பொறுத்த மட்டில் தூயவுள்ளமும் தூய தொண்டும் அமைய வருவது என்பதனை அப்பர் பெருமானின் வாழ் வாலும் வாக்காலும் இளைஞர் உள்ளம் அறிதல் வேண்டும்.

இன்றைய இளைஞர் உலகம் குறிக்கோளில்லாமல் பம்பரம் போல் சுழன்றுகொண்டிருக்கின்றது. இவர்களுக்குப் பற்றுக்கோடுமில்லை; பழமையில் நம்பிக்கையுமில்லை. நல்வழி காட்டும் நல்லறிஞர்களை நாம் அறிமுகப் படுத்தவுமில்லை. இருபதாம் நூற்றாண்டின் இந்து சமயத்தின் ஈடில்லாப் பெருமையினை உலகறிய உணர்த்தியவர் வீர விவேகானந்தர், இவரையே யார் என நாக்கூசாமல் கேட்கின்றனர். இது நம் தவக் குறைவே. உலக அரங்கில் உலகப் பெருஞ் சமயங்களுள் இந்துசமயம் உலகளாவிய மனிதப்பண்பினை உயிர்ப்பாகக் கொண்டதென வீரமுழக்கம் செய்த விவேகானந்தரின் கருத்துக்கள் இளைஞர் உள்ளங்களில் அருவியெனப் பாயும் நாளே சமயம் புத்துயிர் பெறும் நாள்.

மடியில் விழுந்த கனி மரியாதைக்குரியதன்று என்பார்கள். இது தமிழினத்தைப் பொறுத்தவரை நூற்றுக்குநூறு உண்மை. தமிழ் மண்ணில் பிறந்து வளர்ந்து நடந்து ஞானப்பயிர் விளைத்த பேரருளாளர்களின் தேவார திருவாசகங்கள் பக்தி நெறி பரவத் தமிழ் ஞாலம் உலகுக்கு அளித்த நன் கொடை என்பதனை நாம் மறந்துவிட்டோம். இவைகள் தமிழ் இனத்தையும் இனம் பயின்ற மொழியையும் உலகுக்கு அடையாளம் காட்டிக் கொண்டிருக்கின்றன. செழித்து வளர்ந்த செந்தமிழ்க் கலைஞானத்தின் அருட்கனிகள் இவை. மொழிச் சிறப்புக்களில் ஆங்கிலத்தை வணிக மொழி என்றால் இலத்தீனைச் சட்டத்தின் மொழி என்றால் செருமனியை விஞ்ஞான மொழி என்றால் தமிழை ஊனை உருக்கி உள்ளத்தை நெகிழ்விக்கும் பத்தியின் மொழி எனலாம்.

பத்தி மொழியையே நமக்கு அளித்துப் பத்தி நெறி காட்டிய பேரருளாளர்களில் உயர்வற உயர் நலம் படைத்தவர்கள் நால்வர்கள். அவர்கள் வாழ்வாலும் வாக்காலும் தமிழர் வாழ்வு சீரும் சிறப்பும் பெற்றது.தமிழ் புத்தொளிபெற்றது. நால்வரின் தமிழ் நலமும் பத்திப் பண்பும் காலந்தோறும் தமிழர் வாழ்வுக்கு உயிர்ப்புத்தன்மை நல்கி வருகின்றன. இவர்களின் அளப்பரிய சாதனைகளை நம்முன்னோர்கள் நினைந்து நினைந்து உள்ளம் உருகினர். இந்நூற்றாண்டில் ஏற்பட்ட சமுதாய மாற்றங்களில்இன்றைய இளைஞர்உலகத்தில் இந்நாள்வரை

அறியாத இடைவெளி ஏற்பட்டுவிட்டது. இது வருந்துதற்குரியது. சமயத்தோடு பின்னிப்பிணைந்த வாழ்வே தமிழர் வாழ்வு என்பதனை இளைஞர்கள் நினைவு கூர்தல் நலம் பயக்கும். இவர்களுக்கு இந் நினைவை ஊட்டுதலே சமயக் காவலர்களின் தலையாய பொறுப்பாகும்.

தமிழ்ச் சமுதாயத்தில் பழங்காலந்தொட்டுக் கோயில்கள் மனிதவாழ்வின் நடுநாயகமாக விளங்கின. வரலாற்றினை உற்று நோக்கினால் கோயில்கள் ஒருசிலருக்கே உரிய ஏகபோக உரிமையாகவோ ஒதுக்கப்பட்ட தனியிடமாகவோ கருதப்பெறவில்லை. நம் திருக்கோயில்கள், நீண்ட நெடிய வரலாற்றுப் பெருமையுடைய தமிழினத்தின் நாகரிக மேம்பாட்டால் எழுந்தவை. இக் கோயில்களின் அமைப்பும் கலைத்திறனும் சிற்ப நலனும் மொழி வேறுபட்ட பிறநாட்டு மக்களையும் ஈர்க்கும் கலைப் பெருஞ் செல்வங்களாகத் திகழ்கின்றன. இவைகள் இந்தியச் சமயங்களின் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் தமிழர் அளித்த பெருங் கொடைகள்.

## விநாயகர் திருப்பெயர்களும் காரணங்களும்

கணபதி, கணேசர்; ஞானநெறியில் நின்று எய்தப்பெறும் பரம்பொருள்.
க:ஞானம்.ண;மோட்சம். பதி: தலைவன்.

ஏகதந்தர்: அளவில் பேராற்றலினர்.

ஏரம்பர்: இளைத்தோர்க்கிடையூறு களைந்து காப்பவர்.
(ஹீரம்ப: ஹீ—திக்கற்றவர். ரம்ப—காப்பவர்.)

இலம்போதரர்: எல்லா உலகங்களும் இடையூறு எய்தாமே காக்குஞ் சரிந்த தொந்தியர்.

கஜானனர், சூர்ப்பகர்ணர்; அன்பர் இடையூறுகளை நீக்கிக் கருணைக் காற்றை அளித்து மேல்நோக்கும் உண்மைஞானத்தை உதவுபவர்.

குகாக்கிரசர், ஸ்கந்த பூர்வஜர்: முருகனுக்கு முன் பிறந்தவர்.

விநாயகர்: தமக்கொரு தலைவனின்றித் தாமே தலைவனாக விளங்குபவர்.

விகடர்: விகடக் கூத்தாடியவர்.

விக்கினராசர், விக்கினவிநாயகர்: இடையூறுகட் கெலாந் தலைவராகி அவற்றை அடக்கி ஆள்பவர்,

தூமகேது; தூமன் என்னும் அரக்கனைக் கேதுபோல் அடக்கியாண்டு ஞானம் நல்கியவர்.

# விநாயக சதுர்த்தி

ஜகத்குரு

ஸ்ரீ விநாயகப் பெருமானின் அவதார தினமாகிய ஆவணி மாதம் சுக்கிலபக்கச் சதுர்த்தி அன்று விக்னேசுவர பூஜை செய்து எல்லோரும் விநாயகப் பெருமானின் அருளைப் பெறவேண்டும்.

முன்னொரு காலத்தில் பிரமதேவர் விட்ட கொட்டாவியில் இருந்து சிந்தூரன் என்ற அரக்கன் பிறந்தான். அவன் சனங்களை இம்சித்துத் துன்புறுத்தி வந்தான். இதைத் தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டார்கள். சிவபெருமான் அதற்கு இசைந்து விநாயகப்பெருமானிடம் விடயத்தைக் கூறினர். விநாயகர் தந்தையிடம் விடைபெற்றுச் சென்று அந்த அசுரனை வதஞ் செய்து வெற்றிக் களிப்புடன் வந்தார். அதைக் கண்டு பிரமதேவர் முதலியோர், மகிழ்ச்சியால் திளைத்தார்கள். அவ்வசுரனை வென்று வந்ததால் சிவபெருமான் விநாயகரைக் கணதேவர்களின் தலைவராக நியமித்தார். அக்காரணத்தால் கணநாதன் கணபதி, கணேசன் என்னும் பெயர்கள் அவருக்கு உண்டாயின.

ஒருசமயம் பிரமதேவர் விநாயகப் பெருமானுக்குப் பூஜை செய்து மோதகத்தை நிறைய நிவேதனஞ் செய்தார். அதை விநாயகர் வயிறுபுடைக்கப் புசித்துக் கையிலும் எடுத்துக் கொண்டு சந்தோஷத்தால் வான வீதியில் வந்து கொண்டிருந்தார். ஒரு தந்தம் ஒடிந்த யானை முகத்துடன் கணபதி வருவதைக் கண்ட சந்திரன் அவரைப் பார்த்துச் சிரித்துவிட்டான். அதைக் கண்ட கணபதி கோபங்கொண்டு ''என்னைப் பரிகாசஞ் செய்தனை ஒளி இழப்பாய்'' என்று சபித்துவிட்டார். ஒளி இழந்த சந்திரனும் மற்றைய தேவர்களும் பிரமதேவரிடம் வந்து முறையிட்டனர். அதைக் கேட்ட பிரமதேவர், கிருட்டின பக்கச் சதுர்த்தி தினத்தன்று விரதம் பூண்டு மோதகம் முதலிய பலகாரங்கள், பழங்கள் என்பன வைத்துப் பூசித்தால் விநாயகர் மீண்டும் உனக்கு ஒளியைத் தருவார் என்று கூறினர்.

சந்திரன் அதுபோற் செய்து மீண்டும் ஒளியைப் பெற்றான். விநாயகக் கடவுள் ஒரு நிபந்தனையையும் விதித்தார். சுக்கில பக்கச் சதுர்த்தி தினத்தில் யாராவது உன்னைப் பார்த்தால் அவர்களுக்கு ஒரு வருட காலம் ஏதேனும் அபவாதங்கள் நேரும் என்று சொல்லி மறைந்தார்.


எனவே மக்கள் ஏதாவதொரு சுக்கில பக்கச் சதுர்த்தி தினத்தில் சந்திரனைப் பார்த்திருந்தால், ஏற்படும் கஷ்டங்களை நீக்குவதற்காகவும். எல்லாக் காரியங்களும் தங்கு தடையின்றி நடைபெறுவதற்கும் சுக்கிலபட்ச சதுர்த்தி தினத்தில் விக்கினேசுவர பூசை செய்தல் வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணரே சதுர்த்தி பூசை செய்ததாகப் புராணம் கூறுகின்றது.

## பிரதிட்டா கிரியைகளில் கலந்துகொண்ட சிவவேதியர்கள்



இடமிருந்து வலம் :

1. பிரமஸ்ரீ கதிர். செல்லப்பாக் குருக்கள்
2. ,, பால அருணுசலக் குருக்கள்
3. ,, த செல்லத்துரைக் குருக்கள்
4. ,, ச. பரமேஸ்வரக் குருக்கள்
5. பிரதமகுரு: பிரதிஷ்டா சிரோமணி சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள
6. வித்தியாசாகர நியாயசிரோமணி பிரமஸ்ரீ இ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அதிபர்: சிவானந்த குருகுலம்.
7. பிரமஸ்ரீ மு ஜெகநாதக் குருக்கள்
8. ,, பரமேஸ்வரக் குருக்கள்
9. ,, சி. ந. பாலசண்முகக் குருக்கள்
10. ,, சோ. சிதாராமக்குருக்கள்



அழகு விஞ்ச ஆலயம் அமைத்த
கட்டடக் கலைஞர்கள்

அராலியூர் ஸ்தபதி திரு. வி. நாகமுத்து
ஆசாரியாரும்

அவர் குழுவினரும்.

உ

## ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய

# மண்டலாபிஷேக உபயகாரர்கள்

13-7-81 திங்கட்கிழமை மகாகும்பாபிஷேகம் பொது உபயம்

யூலை 14 செவ்வாய் திரு. ச.க. ஐயம் விஜயரத்தினம் அவர்கள் ஜே.பி.

,, 15 புதன் வைத்திய கலாநிதி சோ. பாலசுப்பிரமணியம் அவர்களும் திரு. அ. மயில்வாகனன் அவர்களும்

,, 16 வியாழன் திரு. மூ. அருணசலம் அவர்கள்

,, 17 வெள்ளி திரு. மு. மகாதேவன் அவர்கள்

,, 18 சனி திரு. கு. தில்லைநாதன் அவர்களும் திரு. ந. பரமசிவம் அவர்களும்

,, 19 ஞாயிறு திரு. மூ. பெரியசாமிப்பிள்ளை அவர்கள்

,, 20 திங்கள் திருவாளர்கள் சாரி சில்க் பெலஸ்

,, 21 செவ்வாய் திரு. சோ. பத்மநாதன் அவர்களும் திரு. சோ. ஆறுமுகம் அவர்களும்

,, 22 புதன் திரு. எம். சரவணபவன் அவர்கள்

,, 23 வியாழன் திருமதி விஜயமணி ஆர். குமாரசாமி அவர்கள்

,, 24 வெள்ளி திரு. தி. மகாதேவன் அவர்கள் (108 சங்காபிஷேகம்)

,, 25 சனி திரு. எம். பாலகிருஷ்ணன் அவர்கள்

,, 26 ஞாயிறு திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள்

,, 27 திங்கள் திரு. நா. மு. ஐயம்பிள்ளை அவர்களும் திரு. எஸ். கே. நாகரத்தினம் அவர்களும்

,, 28 செவ்வாய் திருவாளர்கள் முருகன் நிலையம்

,, 29 புதன் திருவாளர்கள் சுருட்டுத் தொழிலாளர்கள்

,, 30 வியாழன் திருமதி செ. வேலுப்பிள்ளை அவர்கள்

,, 31 வெள்ளி திரு. தி. சுப்பிரமணியம் அன் சகோதரர்

ஆகஸ்டு 1 சனி திருவாளர்கள் நித்திய கல்யாணி

,, 2 ஞாயிறு திருமதி ம. நல்லதம்பி அவர்கள்

,, 3 திங்கள் திரு. இரா. சுப்பையா அவர்கள் (ஆடி சதுர்த்தி)

,, 4 செவ்வாய் திருவாளர்கள் நைலோன் மார்ட்

,, 5 புதன் திரு. மகேஸ் கனகசுந்தரம் அவர்கள்

,, 6 வியாழன் திருவாளர்கள் பாமா ஜுவல்லர்ஸ்

| | | | |
|---|---|---|---|
| ,, | 7 | வெள்ளி | திரு. கா. ச. சோமசுந்தரம் அவர்கள் (1008 சங்காபிஷேகம்) |
| ,, | 8 | சனி | திருவாளர்கள் ப. க. பரமநாதன் கொம்பனி |
| ,, | 9 | ஞாயிறு | திரு. வே. கந்தையா அவர்கள் |
| ,, | 10 | திங்கள் | திரு. செ. சோமாஸ்கந்தன் அவர்கள் |
| ,, | 11 | செவ்வாய் | திரு. நா. மு. சரவணமுத்து அவர்கள் |
| ,, | 12 | புதன் | திரு. ந. சுந்தரலிங்கம் அவர்கள் |
| ,, | 13 | வியாழன் | திருவாளர்கள் நவலங்கா ஸ்ரோர்ஸ் |
| ,, | 14 | வெள்ளி | திரு. சீ. பத்மநாபன் செட்டியார் அவர்கள் |
| ,, | 15 | சனி | திரு. மா. சுந்தரம் ஐயர் அவர்கள் |
| ,, | 16 | ஞாயிறு | திருவாளர்கள் திருவிளங்க நகரத்தார் |
| ,, | 17 | திங்கள் | திரு. கே. நாகராசா அவர்கள் |
| ,, | 18 | செவ்வாய் | திரு. எஸ், பி. கல்யாணசுந்தரம் அவர்கள் |
| ,, | 19 | புதன் | திருவாளர்கள் தீபா டிரேட்டர்ஸ் |
| ,, | 20 | வியாழன் | திரு. த. மகேந்திரன் அவர்கள் |
| ,, | 21 | வெள்ளி | திருமதி ஆ. தியாகராசா அவர்கள் |
| ,, | 22 | சனி | திரு. செ. நவரத்தினம் அவர்கள் |
| ,, | 23 | ஞாயிறு | திரு. அ. வே. தேவராசா அவர்கள் (சங்காபிஷேகம்) |
| ,, | 24 | திங்கள் | திருமதி சி. விஜயரத்தினம் அம்மையார் |
| ,, | 25 | செவ்வாய் | திருமதி எஸ். பி. நாகலிங்கம் அம்மையார் |
| ,, | 26 | புதன் | திருவாளர்கள் இந்து இளைஞர் மன்றம் (சங்காபிஷேகம்) |

சேற்றில் உலவும் மச்சத்தைப்போல வாழவேண்டும். அது சேற்றினுள் வாழுகின்றது. ஆனல் சேறு அதன்மேல் படிவதில்லை.

—பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்.

"தன்னலம் என்னும் குறுகிய வட்டத்தில் இருந்து விரைவில் வெளியில் வந்து விடு".

—ஸ்ரீஆதி சங்கரர்.

உ

# கும்பாபிஷேகக் கிரியைகள்


நவாலியூர் பிரதிஷ்டா பூஷணம்

சிவத்திரு சாமி. விஸ்வநாதக் குருக்கள் அவர்கள்.


கும்பாபிஷேகம் என்பது கும்ப அபிஷேக என்னும் இரு சொற்களால் ஆனது. கும்பம் இங்கு, அதனுள் இருக்கும் அருள்நீரைக் குறிக்கின்றது. அபிஷேகம் திருமுழுக்காட்டுதல். எனவே கும்பாபிஷேகம் என்பதன் தாற்பரியம் அருள் நீரினுல் இறைவனைத் திருமுழுக்குச் செய்தல் என்பதாகும். இதனைக் குடமுழுக்கு, பெருஞ் சாந்தி முதலிய பெயர்களாலும் வழங்குவர். இறைவன் திருவருள் உயிரினங்கள் அனைத்திற்கும் கிட்ட வேண்டும் என்னும் பெருங் குறிப்புடன் இது இயற்றப்படுகின்றது.

கும்பாபிஷேகத்தை ஆவர்த்தம், அநாவர்த்தம், புநராவர்த்கம், அந்தரீயம் என நான்காகப் பகுப்பர். ஐந்து என்று குறிப்பிடும் நூல்களும் உண்டு. ஆவர்த்தம் என்பது முதன் முதலில் புகிய இடமொன்றில் கோவிலமைத்து மூலத்தானத்தில் இலிங்கத்தை அல்லது மூர்த்தியைப் பிரதிட்டை செய்வதாகும். அநாவர்த்தம் என்பது பழைமை மிக்க ஆலயத்தே எதிர்பாராதவகையில் குற்றங்கள் நிகழ்ந்தோ பூசை தடைப்பட்டோ இருந்த குற்றம் நீங்கப் பிராயச்சித்தமாக இயற்றப்படுவது.

புநராவர்த்தம் என்பது, மூலத்தானம் பழுதடைந்தோ, மூர்த்திகட்குச் சாத்தப்பட்டிருந்த அட்டபந்தனம் சிதைவுற்ருே, மூர்த்தி அசைவுற்ருே காணப்பட்ட இடத்து இயற்றப்படுங் கிரியையாகும். புநர் : மீண்டும்; ஆவர்த்தனம்: கொண்டுவருதல். புநாவர்த்தன கும்பபிஷேகத்தை ஜீர்ணேத்தாரண பிரதிஷ்டை என்றும் கூறுவர். ஜீர்ணம்: பழுதடைதல், உத்தாரணம்: மீட்டல். அதாவது பழுதடைந்தபின் மீட்டல் என்பது பொருளாகும். அந்தரீயம் ஆலயத்துள் எவராவது இறந்தோ திருவுருவங்களின் அங்கங்களில் ஏதேனும் ஊனம் ஏற்பட்டோ உள்ள காலங்களில் இயற்றப்படுவதாகும்.

நீர்கொழும்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தே நடைபெற்றது புநராவர்த்தன பிரதிஷ்டையாகும். பிரதிஷ்டைக் கிரியைகள் பெரும்பாலும் ஒரேதன்மையன. எனினும் ஆசாரிய பரம்பரையைப் பொறுத்து ஒருசில மாற்றங்கள் ஏற்படுதலும் உண்டு. இனி, கும்பாபிஷேகக் கிரியைகளுள் பிரதானமான சிலவற்றை விளங்கிக்கொள்ளுவோம். விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் தொடங்கும்.

ஆசாரிய வர்ணம் என்னுங் கிரியையை எடுத்துக் கொள்வோம். கோவில் எசமானரோ அறங்காவற் குழுவின் தலைவரோ சிவாசாரியாரையும், சர்வசாதகரையும் வணங்கிக் கும்பாபிஷேகத்தை நல்லவண்ணம் இயற்றி இறையருளைப் பெற்றுத் தரவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுங் கிரியை அது.

பின் அனுக்ஞை என்னும் கிரியை நிகழும். பரம்பொருளிடத்தும் அந்தணர் மாட்டும் மகத்துவம்மிக்க கும்பாபிஷேகத்தினை நடத்திமுடிக்க அனுமதி வேண்டுதல் அனுக்ஞை ஆகும்.

திரவிய சுத்திக்கு வருவோம், நவதானியம், ஹோமத்திரவியம் மற்றும் வேண்டிய பொருள்கள் எல்லாவற்றையும் தனித்தனி சிறிய தாழிகளில் இட்டு மந்திர வழிபாடியற்றி நாதஸ்வரம் முதலிய வாத்தியங்கள் சகிதம், ஆலயத்தை வலம் வந்து அவற்றைக் கிரியைக்குரிய முழுப் பொருள்களுடனும் கலந்து புனிதப்படுத்துதல் திரவிய சுத்தி எனப்படும்.

சிவகணங்களுக்குத் தலைவராகிய கணேசருக்கும் நவக்கிரகங்களுக்கும் அவிப்பாகந்தந்து, வழிபாடியற்றப்படுங் கிரியை கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம் என்னும் பெயர்களால் வழங்கப்படும்.

பின் கிராமசாந்தி நிகழ்வுறும். இது கிராமத்து மக்களின் நன்மையின் பொருட்டுச் செய்யப்படும்.

காவற் கடவுளாகிய பைரவ மூர்த்திக்கு அவரது ஆதிக்கத்தின் கீழுள்ள பூத பைசாச அசுர ராக்ஷஸர்களால் வரும் இடையூறுகளை நீக்குதற் பொருட்டு பூசை பலி ஹோமம் என்பன இயற்றுதல் கிராம சாந்தியாகும்.

பிரவேச பலி துட்ட தெய்வங்களால் ஏற்படக் கூடிய இன்னல்களை நீக்குதற்காகச் செய்யப்படும். ஆலயம் அமைந்துள்ள இடத்தே பூத பைசாசங்கள் காளி என்போர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு உணவளித்து ''நீவிர் இங்கிருத்தல் வேண்டா; மலை, கடல், காடு, மயானம் ஆதிய நெடுந்தொலைவுகளுக்குச் சென்று ஆங்காங்கே அமர்ந்து கொள்ளுங்கள்; இது சிவபெருமானின் ஆணை'' என்று கூறித் திருத்தி செய்தல் இக்கிரியைக் கண் நடைபெறும்.

வாஸ்துசாந்திக் கிரியை ஆலயம் அமைந்துள்ள பிரதேசத்தைச் சுத்தமாக்குதற் பொருட்டு இயற்றப்படுகின்றது. பிரமதேவரை அதிபதியாகக் கொண்ட வாஸ்து புருடன் இக்கிரியை மூலம் மகிழ்வூட்டுவிக்கப் படுகின்றான். வைக்கோல் தருப்பை முதலியவற்றால் புருஷ வடிவு அமைக்கப்படும். ஓமகுண்டத்துப் புனித அக்கினியில் அது மூட்டப்படும்; மூட்டப்பட்ட தீயைக்கொண்டு நிலம் சுத்தியாக்கப்படும்.

தொடர்ந்து மிருத்சங்கிரகணம் என்னுங் கிரியை இயற்றப்படும். நிலமகளை வணங்கி மண் வெட்டியைச் சிவாஸ்திரமாகப் பாவனை செய்து, அதுகொண்டு மண் எடுக்கப்படும். மண்ணெடுத்த குற்றத்திற்குச் சாந்தியாக நிலமகள் கும்பசலத்தால் அபிடேகிக்கப்படுவாள்.

இதன்பின் அங்குரார்ப்பணம் நடைபெறும். அதாவது முளையிடுதல் நடைபெறும். உலக நன்மையின் பொருட்டு நவதானியங்களைப் பாலிலே ஊறவிட்டு, அதனை எடுத்துத் தண்மதியை வணங்கி முளையிடப்படும்.

எடுத்த கருமம் யாதொரு இடையூறுமின்றி நடைபெறும் பொருட்டுக் காப்பு நூல் அணிந்து கொள்ளுதல் இரட்சாபந்தனம் எனப்படும்.

தொடர்ந்து எங்கும் நிறைந்த பரம்பொருளைப் பிரசன்னபூசை என்னும் கிரியைமூலம் நேர்முகப் படுத்துவர்.

கடஸ்தாபனம் என்னும் கிரியை மிகவும் முக்கியமானது. மூர்த்திகள் கும்பத்தில் உருவேற்றப்படுவர். குடத்தைத் தூய்மை செய்து வடிகட்டிய சுத்த நீரை நிரப்பி விஷ்ணுவை வணங்கி வாசனைத் திரவியங்கள் பன்னீர் கங்கைப் புனல் என்பவற்றைப் பூரித்து நவரத்தினம் பொன் வெள்ளியாதி இட்டு, முப்பத்தாறு தத்துவங்களையும் அமைத்துத் தேவர்களையும் சதாசிவரையும் பூசித்து அமரச்செய்து தேங்காயைச் சிரசாகவும், மாவிலையைச் சடையாகவும், கூர்ச்சரத்தை முடியாகவும், வஸ்திரத்தைத் தோலாகவும், கும்பத்துள் நீரை இரத்தமாகவும், தாதுக்களாகவும் கொண்டு மந்திரசகிதம் பூசித்து கும்பம் தாபிக்கப்படும்.

கும்பத்தை விதிப்படி வேதகோஷ வாத்திய ஒலியுடன் வீதிவலமாக எடுத்துவந்து யாகசாலையுள் சேர்ப்பித்தல் யாகசாலைப் பிரவேசமாகும். பின்னர், பஞ்சமாவரண பூசை அக்கினி விபசனம் தீபாராதனை ஆதியன நிகழ்வுறும்.

தூபிஸ்தாபனத்தை எடுத்துக் கொண்டால் அது தூபியை நிறுவுதல் என்னும் பொருளைத் தந்து நிற்றலை உணரலாம். வெகு தொலைவில் உள்ளவர்களுக்கும் தூபி இறை உணர்வைத் தந்து நிற்கின்றது. வேலைப்பாட்டுடன் கூடிய விமானத்தின்மீது கலசங்கள் தாபித்த பின்னர் கோவாசம் முதலிய சில கிரியைகள் நிகழ்வுறும்.

தீபஸ்தாபனம் என்னுங் கிரியை இறைவனைச் சோதிவடிவில் கண்டு தரிசிக்க உதவுவதாகும். யந்திரஸ்தாபனத்தில் மந்திரம் எழுதி உருவேற்றிப் பூசிக்கப்பட்ட தகட்டினை உரிய இடத்தில் வைப்பர். இது இறைவனின் அருட்சத்தியைக் கூட்டுவதன் பொருட்டு நடைபெறுகின்றது. மூர்திகளை முறைப்படி தாபிக்கும் கிரியை பிம்பஸ்தாபனம் எனப்படுகின்றது. பிம்பம் : உருவம். அட்டபந்தனம் மூர்த்தியையும் பீடத்தையும் இணைப்பதற்காகச் சாத்தப்படுகின்றது. இதற்குத் தத்துவ ரீதியான வேறு பொருளும் உண்டு.

ஆசாரியாரும், சிற்பியும் மற்றும் அடியார்களும் பிரதிஷ்டை செய்த படிமத்திற்கு எண்ணெய் சாத்துதலை எண்ணெய்க்காப்பு என்பர். இது மனிதன் திரிகரணங்களாலும் இயற்றும் குற்றங்கள் நீங்குதற் பொருட்டுச் செய்யப்படுகின்றது.

யாகபூசனையின் பின், இறைவனுக்கு விசேட திரவிய ஹோமம் இயற்றப்படுகின்றது. இறைவனை அக்கினி வடிவிற் பூசித்தலை இது உணர்த்துகின்றது.

பிம்பசுத்தி என்பது படிமங்களைச் சுத்திசெய்தலாகும். பதினாறு வகையான திரவியங்கள் நிரம்பிய கலசங்களைப் பூசித்தலுடன் தொடங்கி

ஹோமம் செய்து மூர்த்திகளுக்கு முறைப்படி பஞ்சாமிர்தாதிகளால் அபிஷேகம் புரிந்து அலங் கரித்துப் பூசை இயற்றப்படும்.

மூர்த்தியின் பக்கலில் ஆசாரியார், சாதகர் என்போர் அமர்ந்து வழிபாடியற்றிக் கலை முதல் மந்திரம் இறுதியாகக்கண்டு போற்றித் தர்ப்பை நுனியால் நியாசம் செய்தல் பூர்வசந்தானம் எனப் படும். இதன்மேலும் வேறு கிரியைகள் இயற்றப் படும். ஹோமகாரியங்களைப் பூர்த்தி செய்தற் காக மஹாபூர்ணாகுதி வழங்கப்படும்.

தூபி அபிஷேகமும் அதனோடு கூடிய கருமங் களும் நிறைந்த பின்னர், மகாகும்பாபிஷேகம் செய்யப்படும். இந்நிகழ்ச்சியின்போது பிரதான கும்பம் அடியார்கள் புடைசூழ மங்கள வாத்தி யங்கள் முழங்க திருமுறைகளும், வேதங்களும் கூடி ஒலிப்ப வீதிவலமாகக் கொண்டுவரப்பட்டு மூலஸ்தானத்தே சேர்க்கப்படும். கும்பத்திற்கும் மூர்த்திக்கும் தொடர்பு ஏற்படுத்தப்படும். உரிய முறையில் ஆவாகனம் செய்யப்படும். மந்திர வழிபாட்டுடன் பல்வகை வாத்தியங்கள் முழங்க அன்பர்கள் களிகூர்ந்து மெய்மறந்து நிற்ப, அபிஷேகம் இயற்றப்படும்.

தொடர்ந்து மகாநைவேத்திய உபசாரம் நிகழ்வுறும். பிற கிரியைகளும் செய்யப்படும். விரிப்பிற் பெருகும்.

கும்பாபிஷேகத்தின் பின் மண்டலாபிஷேகம் 40—45 நாள்கள் நிகழ்த்தப்படும்.

இவ்வாறாக மக்களைத் திருவருள் நெறியில் ஈடுபடுத்தவும் காமிய நிஷ்காமியப் பேறுகளை எய்தவும் கும்பாபிஷேகக் கிரியைகள் பெரிதும் உதவுகின்றன.

வாழிய சிவாகமங்கள். வளர்க சைவத் திரு நெறி.

## சிந்தனைத் துளிகள்

○ இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தி யின்பம் பெறும் பொருட்டேயாம்.

◉ இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமை யால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

○ கடவுளையும், அவரை வழிபடும் நெறியையும், அதனால் எய்தும் பயனை யும், உனக்குப் போதிக்கும் அருள்வடிவாகிய ஆசாரியர் ஒருவரே உன் உயிர்த்துணை; ஆதலால் அவரை ஒருகாலமும் மறவாதே.

○ ஈசுர பத்தியும் நல்லொழுக்கமும் உள்ள பிதா மாதாக்களை உடைமையே பெரும் பாக்கியம்.

○ நன்மை செய்தற்குச் சமயம் வாய்க்கும்பொழுது செய்யாதொழிவை யாகில், பின் ஒருகாலத்தில் அது வாய்ப்பது அரிது.

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

உ

# வலஞ்சுழி விநாயகர்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

அருள்வாக்கிலிருந்து

தொகுத்தவர்: **சிவத்திரு மா. சுந்தரம் ஐயர் அவர்கள் பி. காம்.**

பிள்ளையாரை நினைப்பதில் ஒரு பெரிய விசேஷம். அந்நேரத்தில் லோகத்தின் மாதா பிதாக்களான பார்வதி பரமேச்வரர்களின் நினைவும்கூட வந்துவிடுகின்றது. ஒருவர் யாதானுமொரு உத்தியோகத்திற்கு மனுச்செய்வதாய் இருந்தால், விண்ணப்பப் படிவத்திலே தமது பெயரைப் போட்டவுடன் தகப்பனார் பெயரையும் இட்டே ஆகவேண்டியிருக்கின்றது.........

விநாயகக் கடவுளைப் பிள்ளையார் என்றும் வழங்குகின்றோம். பிள்ளையார் யாரின் பிள்ளை என்ற நினைவு உடனே எழுகின்றது. அவருடைய தாய் தந்தையர் எப்படி இருக்கின்றார்கள்? ஒருருவில் சரிபாதி தாயும் தந்தையுமாக இருக்கின்றார்கள் என்கிற அறிவு பிறக்கின்றது. தெளிவாகக் கூறுவதாயின், பிள்ளையாரை நினைத்த மாத்திரத்தில் பார்வதி பரமேஸ்வரர்களின் நினைவும் ஏற்பட்டு விடுகின்றது.

ஈஸ்வரன் ஸத் ஸ்வரூபம்; அம்பாள் சித் (ஞான) ஸ்வரூபம்; மகா கணபதி ஆனந்த ஸ்வரூபம்; ஸச்சிதானந்தமான பரப்பிரம்மமே இப்படி மூன்று ரூபங்களாக இருக்கின்றது.

சிவலோகத்துக்குக் கைலாசம் என்றும், விஷ்ணு லோகத்துக்கு வைகுந்தம் என்றும் பெயர் இருப்பது போலப் பிள்ளையாருடைய லோகத்துக்கு என்ன பெயர் என்றால், அதன் பெயரே ''ஆனந்த புவனம்'' என்பதுதான்.

ஆனந்த வடிவினரான அவர் தம்மை நினைப்பவர்களையும் ஆனந்த மயமானவர்களாக ஆக்குகின்றார். ஞானத்தோடு சேர்ந்த ஆனந்தத்தின் அடையாளமே ஆனைமுகம். வேறெந்த மிருகத்தையும்விட ஆனையைத்தான் பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும் என்று தோன்றுகின்றது. குழந்தைகளுக்கு ஆனை என்றால் அலாதி சந்தோஷம். இங்கே, மடத்து ஆனையைப் பார்க்கக் குழந்தைகள் கூடிவிடுகின்றனர். சுவாமிகளைத் தர்சனம் பண்ணும்படியாக அவர்களைச் செய்யவைக்க வைக்கத் தாய் தந்தையர் மிகவும் சிரமப்படவேண்டியிருக்கின்றது. குழந்தையான யானைமுகரைச் சுற்றி இருந்து சந்தோஷப்பட்டு நாமும் குழந்தைகளாகி விடவேண்டும் என்று தோன்றுகின்றது.

விநாயகர் க்ஷேத்திரங்களுள் மிகவும் சிரேஷ்டமானது கும்பகோணத்துக்குப் பக்கத்தில் உள்ள திருவலஞ்சுழி. அங்கே விநாயகர் சலவைக்கல்லில் வெள்ளை வெளேரென்று சுவேத வண்ணராகக் காட்சி அளிக்கின்றார். அவருடைய தும்பிக்கை வலப்பக்கமாகச் சுழித்துக்கொண்டிருப்பதால் தான் அவ்வாலயத்துக்குச் திருவலஞ்சுழி என்ற பெயர் உண்டாயிற்று. அங்கு காவேரியும் வலப் பக்கமாக வளைந்து ஓடுவது மற்றுமொரு விசேடம்.

காவேரிக்கும் விநாயகருக்கும் சம்பந்தம் உண்டு. குடகு நாட்டில் ஸஹ்கிய பர்வதத்தில் அகத்தியர் கமண்டலத்துக்குள் வைத்திருந்த காவேரியைக் காக வடிவில் வந்து கவிழ்த்து லோகோபகாரமான புண்ணிய நதியாக ஓட வைத்தவர் விநாயகரேதான். ''ப்ரணவ ஸ்வரூப வக்ரதுண்டம்'; என்றபடி அங்கே அவர் ஓங்கார ரூபமாகத் தும்பிக்கையை வலப்பக்கம் வளைத்துக் கொண்டு உட்கார்ந்தாரோ காவேரியும் அங்கேயே வலப்பக்கமாகச் சுழித்துக்கொண்டு ஓட ஆரம்பித்துவிட்டாள் விநாயரை நாமும் வலம் வந்து நெற்றியில் ஐந்துமுறை குட்டித் தோப்புக் கரணம் போடவேண்டும்.


'தோர்பி: கர்ணம்' என்பதே தோப்புக்கரணம் என்றாயிற்று. 'தோர்பி:' என்றால் கைகளால்,



கும்பம் வலம் வருதல்

கும்பம் சொரிதல்





குடமுழுக்கு விழாவில் ஒரு காட்சி

கர்ணம்' என்றால் காது. அதாவது, கைகளால் காதைப் பிடித்துக் கொண்டு போடும் தோர்பி: கர்ணம் தான் தோப்புக் கரணமாகிவிட்டது. இதிலே ஒரு வேடிக்கை. ஸம்ஸ்கிருதத்தில் ஒருமை இருமை, பன்மை என்னும் மூன்று எண்கள் உண்டு. நமக்கெல்லாம் இரண்டு கைகள்தானே இருக்கின்றன.' எனவே இருமை எண்ணின்படி (த்வி வசனப்படி) 'தோர்ப்யாம் கர்ணம்' என்றுதான் இருக்க வேண்டும். தோர்பி: என்றால் இரண்டுக்கு மேற்பட்ட பன்மையில் பல கைகளைக் குறிக்கும். ஏன் இப்படி இருக்கின்றது. ஆதியில் முதன்முதல் தோப்புக் கரணம்போட்டவர் எம்மைப்போல இரு கரங்களையுடைய மனிதர் அல்லர், நான்கு புயங்களைக் கொண்ட மஹாவிஷ்ணு மூர்த்தியே அதனாலேதான் அவ்வாறு வந்தது.

துதிக்கையைச் சுழித்துக்கொண்டு இருக்கின்றவரைத்தான் நாமும், எதை எழுதுவதானாலும் பிள்ளையார் சுழி போட்டுத் துணைக்கு அழைத்துக் கொள்ளுகின்றோம், எடுத்த காரியம் 'பூஜ்ஜியம்' ஆகிவிடாமல் இருப்பதற்குப் பிள்ளையார் சுழி காவலாக இருக்கின்றது. நம்முடைய தலைச்சுழி தீர்வதற்காக அகில லோக காரணர்களாகிய அம்மை அப்பர்களின் மூத்த பிள்ளையான கணேசரை ஆனந்தமாக நினைந்து வழிபடுவோமாக.

## சிவனே விநாயகன்

முருகு

தேர்த் திருவிழாவின்போது, சிவன்கோவில்களில் நடராஜப்பெருமானும், முருகன்கோவில்களில் ஷண்முகப்பெருமானும், விநாயகர் கோவில்களில் பஞ்சமுக விநாயகரும் எழுந்தருளுவது நீண்டகால வழக்கமாகும்.

பாலகணபதி தருணகணபதி முதலிய விநாயக மூர்த்தங்கள் பல இருப்பவும், பஞ்சமுக விநாயகர் முதலிடம் வகித்தலைக் காண்கின்றோம். விநாயகர் திருப்பெயர்களில் ஏரம்பர் என்பதும் ஒன்று. ஏரம்பரே பஞ்சமுகவிநாயகர்.

சிவபெருமானுக்கு ஈசானம், தற்புருடம், வாமதேவம், அகோரம், சத்தியோசாதம் முதலிய ஐந்து திருமுகங்கள் உண்டு. அவற்றையொப்பப் பஞ்சமுகவிநாயகருக்கும் ஐந்து திருமுகங்கள் உண்டு. பஞ்சமுகவிநாயகரை, பரமசிவ விநாயகர், ஈசுவர விநாயகர் என்றெல்லாம் பத்தர்கள் போற்றிப் பரவுகின்றனர்.

சிவபெருமான் முழுமுதற் கடவுள்; விநாயகரும் முழுமுதற் கடவுள். இருவரும் ஒருவரே! ஒரு நாமம் ஒருருவம் ஒன்றும் இல்லாதபரம்பொருளை ஆயிரம் ஆயிரம் திருநாமங்கள் சொல்லி வழிபடுகின்றோம். சிவனே விநாயகன்.

உ

## நீர்கொழும்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய

# உற்சவாதிகளும் உபயகாரர்களும்

| மாதம் : | உற்சவாதிகள் | உபயகாரர்கள் |
|---|---|---|
| சித்திரை | வருடப்பிறப்பு | ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையார் |
| | சதுர்த்தித் திருவிழா | திரு. கா. சிவகுருநாதன், தங்கொட்டுவை |
| வைகாசி | சதுர்த்தித் திருவிழா | எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனம், சீதுவை |
| ஆனி | சதுர்த்தித் திருவிழா | திரு. சி. நவரத்தினம் |
| | நடேசர் அபிடேகம் (உத்தரம்) | திரு. வேலுப்பிள்ளை குடும்பத்தார், நீர்கொழும்பு |
| ஆடி | சதுர்த்தித் திருவிழா | திரு. இரா. சுப்பையா. நீர்கொழும்பு |
| ஆவணி | அலங்கார உற்சவம் 1 ஆம் நாள் | திருவாட்டி சி. விஜயரத்தினம் அம்மையார் |
| | ,, 2 ,, ,, | திருமதி எஸ். பி. நாகலிங்கம் |
| | ,, 3 ,, ,, | திருமதி எஸ். ஐயாத்துரை குடும்பம் |
| | ,, 4 ,, ,, | நீர்கொழும்பு சுருட்டுத் தொழிலாளர் |
| | ,, 5 ,, ,, | நீர்கொழும்பு வர்த்தகர்கள் |
| | ,, 6 ,, ,, | நாட்டுக்கோட்டை நகரத்தார் |
| | ,, 7 ,, ,, | தங்கொட்டுவை வர்த்தகர்கள் |
| | ,, 8 ,, ,, | ஆனந்தா ஸ்டோர்ஸ் நிறுவனத்தார் |
| | ,, 9 ,, ,, | திருவிளங்க நகரத்தார் |
| | ,, 10 ,, ,, ஆவணிச் சதுர்த்தி தேர்த் திருவிழா | ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையார் [பொது] |
| | ,, 11 ஆம் நாள் | திரு. ஆர். எஸ். கோணேசர் குடும்பம் |
| புரட்டாதி | நவராத்திரி விழா 1 ஆம் நாள் | திரு. எஸ். ஏ. நடராசா |
| | ,, 2 ,, ,, | திருவாட்டி சி. விஜயரத்தினம் அம்மையார் |
| | ,, 3 ,, ,, | திரு. எஸ். கந்தசாமி |
| | ,, 4 ,, ,, | திருவாட்டி ம. நல்லதம்பி |
| | ,, 5 ,, ,, | திருவாட்டி ஸ்ரீபத்மா |
| | ,, 6 ,, ,, | ஆனந்தா ஸ்டோர்ஸ் நிறுவனம் |
| | ,, 7 ,, ,, | முருகன் நிலையம் |

அன்பளிப்பு



நீர்கொழும்பு

ஸ்ரீமுத்துமாரி அம்மன் கதிர்வேலாயுதசுவாமிகோயில்

தர்மகர்த்தா

திரு. எஸ். பத்மநாபன் செட்டியார் அவர்கள்

கோயில் பூஜை

கும்பாபிஷேகம் சங்காபிஷேகம்

முதலிய வாசனைப் பொருட்களுக்குத் தேவையான

## வாசனைப் பொருட்களும்
## சந்தனம் விபூதி குங்குமம்
## கற்பூரம்

ஆகியனவும் கிடைக்குமிடம்.

# சுந்தரம் பிறதர்ஸ்

**23, மணல்தறை வீதி, யாழ்ப்பாணம்.**

பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மான் அருள்
அனைவருக்கும் பாலிப்பதாக.

# லெட்சுமி ஸ்டோர்ஸ்

இல. 4, நீர்கொழும்பு ரோட்,

தங்கொட்டுவை.

With the best compliments of :

HARDWARE, PAINT, CEMENT and ASBESTOS

# NEW SIVASATHTHI STORES

45, GREEN ROAD,

NEGOMBO.

T'Phone ; 2424.

With the best compliments of ;

# APPUTHURAI'S

TEXTILES & PAWN BROKERS

NO. 232, MAIN STREET,

NEGOMBO.

WITH THE BEST
COMPLIMENTS
OF

*DANKOTUWA OIL MILLS*

**DANKOTTUWA.**

***With The Best***
***Compliments***
***Of***





# NEGOMBO GOLD HOUSE

**S. H. M. ZAROOK**

**182, MAIN STREET,**
**NEGOMBO.**

SRI LANKA TELEPHONE: 2306

கும்பாபிஷேகம், கொடியேற்றம், மகோற்சவம்,

புதுமனைபுகுவிழா, திருமணவிழா

ஆகிய வைபவங்களுக்குரிய

- குருக்கள் வேட்டி செற் (கலர் வெள்ளை)
- மாறுகரை வேட்டி செற்
- சால்வை, கும்பவேட்டி
- கொடிச்சேலை, சாமிப்பட்டு.
- 6 முழம் வேட்டி 3, முழம் சால்வை
- 4 முழம் வேட்டி, (கலர், வெள்ளை) துண்டு
- ஓம் முருகா கலர் சால்வை
- 6, 7 யார், கலர், வெள்ளை நெசவுசேலைகள்
- சாரம், பெற்சீற் வகைகள் யாவும்

மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்

# எஸ். ஆர். செல்லத்துரை

(லங்கா சலுசலா ஜவுளி விநியோகஸ்தர்)

நிர். 216, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 296.

ஓ மெனும் எழுத்தினுள்ளே
ஒளியதாய் விளங்குகின்ற
வாமனே கருணை நல்கும்
வள்ளலே நமச்சிவாய.

# M/S MEENAMBIKA INDUSTRIES

*Dhnkannawa,*

NATTANDIYA.

*T' phone 231. (Marawala)*

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

# மில்க்வைற்

## யாழ்ப்பாணம்

# "சரவணாஸ்"

16, கிறீன்ஸ் ரோட்,

நீர்கொழும்பு.

# "சரவணாஸ்"

இல. 4, பீச் ஸ்ட்றீட்,

கொழும்பு 11.

# K. சன்கரன் ஸ்டோர்

இல. 22, ஸ்ரீ கதிரேசன் ஸ்ட்றீட்,

கொழும்பு - 13.

*With Best Wishes*
*of*

V

NITHIYAKALYANI JEWELLERS

259. MAIN STREET,
NEGOMBO.

## கணபதி ஸ்தோத்திரம்

முதாகராத்த மோதகம் ஸதாவிமுக்தி ஸாதகம்
கலாதராவ தம்ஸகம் விலாஸிலோக ரக்ஷகம்
அநாயகைக நாயகம் விநாசிதேப தைத்யகம்
நதாசுபாசு நாசகம் நமாமிதம் விநாயகம்.

— ஆசார்யாள் அருளியது

*Best wishes*

# DR. E. VYTIALINGAM

KOCHCHIKADE.


சைவச் சாப்பாட்டிற்கு பெயர்பெற்ற இடம்

வருகைதரத் தவறுதீர்கள்.

# பவானி விலாஸ்

அம்புலிமாமா, மங்கை, பொம்மை, சந்தமாமா போன்ற புத்தகங்கள் விற்குமிடம்.

127, மெயின்வீதி,

நீர்கொழும்பு.

"கைத்தல நிறைகனி அப்பமோ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி"

என்று அடியார்கள் அயராது தொழுதேத்தும்
அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் பேரருள் துணைநிற்க.

# முருகன் நிலையம்,

## 221, பிரதான வீதி,

## நீர்கொழும்பு.

**T. Phone 2732**

வழங்கும்

# அன்பளிப்பு

அறுசுவை உண்டிக்கு
உங்கள் அபிமானமுள்ள

**முருகன் நிலையத்தார்**
**பெருமையுடன் வழங்கும்**

காரம், மணம், குணம், ஒருங்கே அமையப்பெற்ற மிளகாய்த்தூள், கறி சரக்குத்தூள் போன்ற இன்னோரன்னவைகளும், அரிசி, பருப்பு, பயறு போன்ற நவதானியங்களை மாவாக அரைத்தெடுக்கவும் உங்களின் தேவைக்கேற்ற சேவையாக மனமுவந்து வழங்குவதோடு உங்கள் அன்றாட அவசரத்தேவையை ஈடுசெய்ய எங்களின் நகை அடவுப்பகுதியும் காத்திருந்து உதவி நல்கும் என்றென்றும் என்பதனையும் மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

ஐங்கரன் தாள்
அனுதினமும் தொழுவோம்.

*WITH THE BEST COMPLIMENTS OF :*

# எஸ். செல்லையாச் செட்டியார்

குடும்பத்தினர்

# *LATE S. CHELLIAH CHETTIAR*

*FAMILY*

நீர்கொழும்பு

*NEGOMBO.*

*With Best Wishes*

*of*

V

**NITHIYAKALYANI JEWELLERS**

259. MAIN STREET,

NEGOMBO.

## கணபதி ஸ்தோத்திரம்

முதாகராத்த மோதகம் ஸதாவிமுக்தி ஸாதகம்
கலாதராவ தம்ஸகம் விலாஸிலோக ரக்ஷகம்
அநாயகைக நாயகம் விநாசிதேப தைத்யகம்
நதாசுபாசு நாசகம் நமாமிதம் விநாயகம்.

— ஆசார்யாள் அருளியது


*Best wishes*

# DR. E. VYTIALINGAM

KOCHCHIKADE.

சைவச் சாப்பாட்டிற்கு பெயர்பெற்ற இடம்

வருகைதரத் தவறுதீர்கள்.

# பவானி விலாஸ்

அம்புலிமாமா, மங்கை, பொம்மை, சந்தமாமா போன்ற புத்தகங்கள் விற்குமிடம்.

127, மெயின்வீதி,

நீர்கொழும்பு.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன் தன்னை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

# SRI MURUGAN JEWELLERY

PAWN BROKERS

44, PANNALA ROAD,

DANKOTUWA.

T' Phone: 897

Best Wishes

From

# Pearl Jewellery

228, Main Street,

Negombo.

With The Best Compliments

of

# M/S. SHAMY SELECTION

22, GREEN'S ROAD,

NEGOMBO.

Telephone: 2737

With the best Compliments

of

# PUSHPA

Jewellers, Pawn Broker & Textiles.

**53, 55, Green's Road,**

**NEGOMBO.**

PHONE: 2404

*With the best wishes of:*

# தேவராணி ஸ்ரோர்ஸ்

*இல. 6, ஸ்ரேசன் ரோட்,*

*கொச்சிக்கடை.*

*With The Best compliments*

*of*

# THE NEGOMBO CHEAPSIDE

(Prop: S. BASTIAMPILLAI)

*153, MAIN STREET,*

*NEGOMBO.*

கும்பாபிஷேக மலர் சிறப்புடன் மலர்ந்திட

எமது மனமார்ந்த ஆசிகள்.

# New Saraswathie Stores,

157, Main Street,

Negombo.

**With The Best Compliments**

***of***

# N. A. MURUGESU

OILMAN STORES

DANKOTUWA.

ஐந்துகரத்தோனே பிள்ளையாரே அறுமுகனுக் கண்ணனாரே பிள்ளையாரே

பிஞ்சுமுகத்தோனே பிள்ளையாரே பெருமைதனைத் தந்திடுவாய் பிள்ளையாரே.



# RANJINI TXTILES

*(Elaborate on the Textiles sold in this Establishment)*

## *83, MAIN STREET,*

## *KOCHCHIKADE.*



ஓங்குமொரு மருப்பானை யுயிர்க்குயிரா யிருப்பானை யுரக வேந்தன்
ருங்குநெடு நிலத்தானை முகத்தானை வதைத்தானைச் சயில மானைப்
பாங்குவைத்து மழுத்தானை பரித்தான்றந் தளித்தானைப் பசும்பொற்ரேட்டுப்
பூங்கமல பதத்தானைப் பொருவிலேந்து கரத்தானைப் போற்றல் செய்வாம்.

# சரஸ்வதி ஸ்ரோர்ஸ்

புடவை, சாய்ப்புச்சாமான்கள், விற்பனையாளர்களும்,

நகை அடவு பிடிப்பவர்களும்.

உரிமையாளர்: R. மார்க்கண்டு.

இல. 51, 53, மெயின் வீதி,

தங்கொட்டுவ.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடுமவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பாயில்வலி வலமுறை இறையே.

# JAFFNA STORES

*Proprietor;   N. A. KANDIAH*

**No. 14, Pannala Road,**

**Dankotuwa.**

**Telephone: 808.**

*With Best Compliments from*

**D. M. D. WILLIAM APPUHAMY**

RUBBER DEALER & MILLER

**Ellagawa,**

**INGRIYA.**

எடுக்கு மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்குள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம்.

RAJAH STORES

No: 99, 101, KOCHCHIKADE

Tel: 248

*With Best Compliments*
*from*

# PUSHPA
# TRADING COMPANY

TRANSPORTERS & ESTATE SUPPLIERS

*Sri Sangararajah Mawatha,*

COLOMBO-10

BRANCH: MAIN STREET,
BANDARAWELA.

Cable: PUSHPAS Tel: 23981

வானுலகு மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி யஞ்சலி செய்கிற்பாம்.


# *YOGAN PAWN BROKERS & JEWELERS*

**34, MARKET STREET.**

**NEGOMBO.**

Tel: 2543

*with best wishes :*

## SAREE SILKPALACE

*Dealers in :*

*Textiles and Fancy Goods*

*Specialist in :*

*GENTS TAILORING*

*10, Green's Road,*

*NEGOMBO.*

*Best Wishes*

## JEYA JEWELLERS

*Jewellery Merchants*



*26 A, GREEN'S ROAD,*

*NEGOMBO.*

*Tel : 2197,*

*With The Best Compliments*

*of*

## *M. S. MANTHIRI & SONS*

*207 MAIN STREET,*

*NEGOMBO.*

With Best Wishes

of

## JUPITERS

*252, MAIN STREET,*

*NEGOMBO.*

WITH THE BEST
COMPLIMENTS
OF

V

# SHANTHINI STORES

*PROP; THIRUNAWAKARASU.*

GENERAL MERCHANT & COMMISSION AGENTS

**NEGOMBO ROAD,**

**JA-ELA**

*With The Best Compliments*

*of*

# T. MAHADEVAN

GOVT. CONTRACTOR AND GENERAL MERCHANT

*145, Kannuwana,*

*JA - ELA.*

**Telephone: 076-430**

With the best Compliments

of

# VINAYAGAR STORES

*Prop: M. Balasubramaniam.*

***136, Kanuwana,***

***JA - ELA.***

## *SARATHAS*

## *TEXTILE DEALERS*

SPECIALIST IN:

- Batik Sarongs
- Lungies
- Shirts
- Maxies
- Walhangies & Yardages

MAIN STREET,
NEGOMBO
SRILANKA.

எங்களிடம்

வீட்டுத் தேவைகளுக்கும்,
அன்பளிப்புச் செய்வதற்கும் உகந்த

எவர்சில்வர் பாத்திரங்களை
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
ஒரே இடம்

## *Udaya Jewellery*

*No. 144 Main Street,*
*Negombo.*

நீர்கொழும்பு அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகசுவாமி அருள்
யாவருக்கும் கிட்டுவதாக!

# ஸ்ரீ சுமங்களா ஸ்டோர்ஸ்

120 - 122, பிரதான வீதி,

நீர்கொழும்பு.

தந்தி — "சுமங்களா"

---

நீர்கொழும்பு ஸ்ரீ சித்திவிநாயக சுவாமி
கும்பாபிஷேகம் இனிது நிறைவேற
இறைவனை வேண்டுகிறோம்.
அவன் அருள் எங்கும் பாலிப்பதாக.

# SARASWATHY STORES

## 48, OLDMOOR STREET,

## COLOMBO-12.

*With The Best Compliments*

*of*

# NEGOMBO BRASS WORKS

111, SEA STREET,

NEGOMBO.

*With the best wishes from*

GROCERY STORES

ரேணுகா ஸ்டோர்ஸ்

எல். எஸ். 15.

டட்லி செ. மார்க்கட்

நீர்கொழும்பு.

உ

சிவமயம்

எங்களிடம்

வீட்டுக்குத் தேவையான

உணவுப் பொருட்களும்

மற்றும் சகலவிதமான

பொருட்களும்

கிடைக்கும்

## MOHANS

L. S. 13 D. S. CENTRALMARKET,

NEGOMBO.

FOR EVERY THING IN:

*BEER SPIRITS & GROCERIES*

# FRANKVINS

## (WINE STORES)

126, 130, *Main Street,*

*Negombo.*

*TELEPHONE: 2190*

அன்பளிப்பு :

## கல்யாணி ஜுவலரி

201, மெயின் வீதி,

நீர்கொழும்பு.

தொலைபேசி: 2583.

*Best wishes :*

## VENUS TEXTILES

*No. 197, Main Street,*

*NEGOMBO.*

With the best
Compliments
of

# KALA HARDWARE STORES
24. MARKET STREET,
NEGOMBO.

*Telephone; - 2063*

*Best Wishes*

# M. J. GOMEZ & CO.
(ESTD. 1893)

Chemists, Grocers & Liquor Merchents

*109, Main Street,*
*Negombo.*

**Telephone: 031/2151**

*With Best Compliments*

*from*

ROBERT GUNAWARDENA

BROKER

285, GRAND PASS ROAD,
COLOMBO - 14.

Tel : 21717

*With best compliments from :*

# LAZARAVS STORES

SUPLIERS OF GUNNYS

20, MAYURI LANE,

COLOMBO 1.

Tele : 34864,

*With best compliments from :*

# NAEEM RUBBER SHIPPERS
## &
## EXPORTERS

**EXPORTERS OF NATURAL RUBBER (Sheet & Crops)**

88, *STALL ROAD,* *COLOMBO* - 14.

**Cable ; Naeemrub** **Tele : 34106 — 34524**

*With best Compliments from*

# M. Z. M. MOHIDEEN

BROKERS

OLCOTT MAWATHA

COLOMBO - 11.

Tel : 21542 — 26484.

அன்பளிப்பு

ஆனந்த ஸ்டோர்ஸ்

ஸ்ரீ லங்கா ஸ்டோர்ஸ்

நீர்கொழும்பு

*With The Best Compliments Of*

## HARAN FANCY EMPORIUM

DEALERS IN SHOES & FANCY GOODS

15, GREEN ROAD,

NEGOMBO.

அன்பளிப்பு

## நவலங்கா ஸ்டோர்ஸ்

இல. 5, டிக்குரூஸ் ரோட்,

நீர்கொழும்பு.

அன்பளிப்பு

## கா. வேலுப்பிள்ளை.

நகை ஈடு பிடிப்பாளர்

44, மார்கட் வீதி,

நீர்கொழும்பு.

அன்பளிப்பவர்

# வே. நீதிராசா

நகை ஈடு பிடிப்பாளர்

220, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

காசிநாதன் சிவகுருநாதன்

தங்கொட்டுவ

*With the best compliments of*

NEGOMBO FASHION SHOP

MAIN STREET JUNCTION,
CHILAW ROAD,
NEGOMBO.

நீர்கொழும்பில் உறையும் அருள்மிகு சித்திவிநாயகனே
சீர்பெற்றுச் சிறப்புடன் வாழச் சித்தி தருவாயே.

சிறந்த குளிர்பான விற்பனையாளர்களும்,

வீரகேசரி, மித்திரன் நீர்கொழும்பு ஏஜன்சியும்.

# SRI GANESAN CAFE

NO. 180, MAIN STREET,

NEGOMBO.

நீர்கொழும்பு ஸ்ரீ சித்திவிநாயகர் கும்பாபிஷேக மலர் சிறப்புற
வாழ்த்துகிறோம்.

# BAMA JEWELLERS

41, GREENS ROAD,
NEGOMBO.

*Telephone; 031 - 2060*

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

# முருகன் ஸ்டோர்

இல. 30, நீர்கொழும்பு ரோட்,
தங்கொட்டுவ.

தொலைபேசி - 36.

WITH THE BEST
COMPLIMENTS
OF

E. NALLATHAMBY

NEGOMBO.

*With Best Compliments from*

# Y. A. MOWJOOD

**BROKER**

GAFFOOR BUILDING

**FORT,**

**COLOMBO - 1.**

Tel: 27760

*With Best Compliments from*

# *D. LIYANARACHCHI*

RUBBER DEALER

*MAIN STREET, INGRIYA.*

*With Best Compliments from*

# SUNDARAM STORES

**DEALERS IN CEYLON PRODUCE,**

**ANIMAL FOODS & GOVT. SUPPLIERS.**

## 151, OLD MOOR STREET,

## COLOMBO - 12

Cable: **Sungrup** Tel: **31962**

WITH BEST COMPLIMENTS
FROM

# C. H. VARNEY
# &
# SONS

**BROKERS**

*State Bank of India Building,*
*Mudalige Mawatha,*
*COLOMBO - 1*

Tel. 23851
24516